
September 2025

# தமிழ்

நற்றமிழரின் நாடித்துடிப்பு




VARSHA™
IDLI/DOSA BATTER
Let's eat the Best!
VARSHA
Ready to Cook
Idli / Dosa Wet Mix
CRISPY DOSA * SOFT & FLUFFY IDLI
1Kg
100% Pure Vegetarian
Traditional taste that Lingers

# ஐ தமிழ்

நற்றமிழரின் நாடித்துடிப்பு

**September 2025**

சுவடி — 15
ஓலை — 7

**வணக்கம் பல**

**வ**லிமை இருந்து விட்டால் போதும்! எளிய மனிதர்களை ஆட்டி படைத்து விடலாம் என்ற எண்ணம், ஒரு தனி மனிதனுக்கு வந்துவிட்டாலே எண்ணற்ற சிக்கல்கள் முளைத்து விடும்! ஒரு வல்லரசு நாட்டுக்கு அந்த எண்ணம் தோன்றுமேயானால், பலம் குறைந்த பல நாடுளை ஆட்டிப் படைக்க முனையும். பெரும் இன்னல்கள் தோன்றும்! சமூகமும், சமதர்மமும் நிலைகுலைந்து, பொதுமக்களின் இயல்பு வாழ்வு பாதிக்கப்படும்.

மனித சக்தி எப்போதுமே இயற்கையின் சக்திக்கு உட்பட்டதுதான் என்பதை உணர்ந்து விட்டால் சிக்கல்கள் எதுவும் எழாது! மனிதர்கள் கோட்டை என்னதான் கட்டினாலும், காலம் ஊதித் தள்ளி விட்டால் அடுத்த கணமே அனைத்தும் சீட்டுக் கட்டு மாளிகைதான்! எளியோரிடத்து வலிமை காட்டும் நாடுகளின் தலைமைகள் புரிந்து கொள்ள வேண்டும்.

வரி விதிப்பு என்ற அச்சுறுத்தலை எழுப்பும் அமெரிக்க அதிபர், பல நாடுகளின் மீதும் வரிவிதிப்புக்கு ஆயத்தமாகிறார். ஒருபுறம் அமைதி நிலைநாட்டுவதில் தன்னை மையப் புள்ளியாகக் காட்டுபவர், பல நாடுகளின் அமைதியின்மைக்குக் காரணமாகவும் இருக்கிறார் என்பது அரசியல் நோக்கர்களின் கூற்று. போர் குறித்து ஆதங்கப்படுவோர் குறிப்பிட்ட சில போர்க்குற்றங்களுக்கு எதிராக குரல் எழுப்பாதது ஏன்? போர் நிறுத்தப்பட வேண்டிய ஒன்று என்பதில் மாற்றுக் கருத்தில்லை. ஆனால் ஆங்காங்கே கண்டும் காணாமலும், சிலவற்றுக்கு மட்டும் ஆதரவளித்துப் பக்கச் சார்பெடுப்பதும், அப்பாவி மக்களின் உயிர்களுக்கு ஆதரவுக் கரம் நீட்டாமல் இருப்பதும் எந்த விதத்தில் நியாயம்?

அனல் பரப்பும் மாதம் முடிந்து வளம் கொழிக்கும் மழைக்காலம் துவங்கவிருக்கிற இந்த சமயத்தில், உலகெங்கும் போர் ஓய்ந்து அமைதி மழை பொழியட்டும்! கரடு பாய்ந்து கிடக்கும் நிலங்களில் விழுகின்ற மழைத்துளி மண்ணை வளப்படுத்துவது போல, தரிசான மனித மனங்களைப் பண்படுத்துவது கலை இலக்கிய வடிவங்களாகும். அத்தகைய கலை, இலக்கியம், அரசியல், சுற்றுச்சூழல், மருத்துவம் எனப் பல்வகை மலர்களைக் கொண்ட கதம்ப மாலையாக மலர்கின்றது ‘அய் தமிழ்’ இதழ்.

பல அற்புதமான ஆக்கங்களைச் சுமந்து கொண்டு மலர்கின்ற ‘அய் தமிழ்’ இதழை வழமைபோல் வரவேற்று வாசியுங்கள்! நேசியுங்கள்!

நேசப்பகிர்தலுடன்

ஆசிரியர் குழு

## உள்ளே...

முன்றே கால்

பசியறியா உலகம்!

தமிழே தமிழே

தணியாதா போர் மோகம்

சேரமான் கனவு

தல வலம்

அறிவோம் தமிழர் பெருமை

சிவகாமியின் சபதம்

பசுமை அகம்

மருத்துவ தமிழ்

காத்தல் அரிது



**IThamil Monthly Magazine**

**Chief Editor & Publisher**
Sivanesan

**Editor**
Khottravan

**Editorial Team**
Ganesan
Navani
Shanthakumar

**Art Editor**
Sriram

**Art & Marketing Director**
Jaya

**Printers**
Kanagam Pathippagam

**Contact us:**
*editor@ithamil.com*

(பொறுப்பு துறப்பு: இதழில் வெளியாகும் படைப்புகள் அனைத்தும் படைப்பாளரின் பெருமைக்கும் பொறுப்புக்கும் உரியது. படைப்புக்கள் யாவும் படைப்பாளிகளின் கருத்துக்களே. அதற்கு எவ்வகையிலும் அய் தமிழ் பொறுப்பேற்காது.)



# மூன்றே

## இந்தியாவிடம் டிரம்ப் காட்டும் கண்டிப்பு

புதினை சந்தித்த போது டிரம்ப் நடந்துகொண்ட விதமும், அதன் பின்னர் தெரிவித்த கருத்துகளும் யுக்ரேன் விவகாரத்தில் அவர் ரஷ்யா மீது மிகவும் கோபமாக இருக்கிறார் என்ற எண்ணத்தை ஏற்படுத்தவில்லை. இந்தியாவும் இந்த உரையாடலின் மீது ஒரு கண்ணை வைத்திருந்தது.

இந்த சந்திப்பு சுமூகமாக நடைபெற்றால், ரஷ்யாவிடமிருந்து எண்ணெய் வாங்குவதற்காக இந்தியா மீது டிரம்ப் விதித்த 25% கூடுதல் வரி விலக்கிக்கொள்ளப்படலாம் என சொல்லப்பட்டது. இதைத் தொடர்ந்து, ஏற்கனவே விதிக்கப்பட்ட 25 சதவீத வரியைக் குறைக்க இந்தியா முயற்சிக்கும் என்றும் சொல்லப்பட்டது. ஆனால், இதுவரை அப்படி எதுவும் நடக்கவில்லை. நிலைமை இப்படியே தொடர்ந்தால், ஆகஸ்ட் 27 முதல் இந்தியாவுக்கு 50 சதவீத வரி விதிக்கப்படும். இந்த சந்திப்புக்குப் பிறகும் இந்தியாவின் மீதான அமெரிக்காவின் அணுகுமுறையில் கண்டிப்பு குறையவில்லை. வெள்ளை மாளிகையில் வர்த்தகம் மற்றும் உற்பத்தி ஆலோசகராக இருக்கும் பீட்டர் நவரோ, டிரம்ப் மற்றும் புதின் சந்திப்புக்கு மூன்று நாட்களுக்குப் பிறகு, பிரிட்டன் செய்தித்தாள் பைனான்ஷியல் டைம்ஸ்—ல் ஒரு கட்டுரை எழுதினார். அதில் இந்தியாவை கடுமையாக விமர்சித்தார்.

"அமெரிக்க வாடிக்கையாளர்கள் இந்திய பொருட்களை வாங்குகிறார்கள். இந்த பொருட்களின் விற்பனையில் கிடைக்கும் டாலர்களை இந்தியா மலிவு விலையில் ரஷ்ய எண்ணெய் வாங்குவதற்கு பயன்படுத்துகிறது. ரஷ்ய எண்ணெயை இந்தியா சுத்திகரித்து உலகம் முழுவதும் விற்கிறது. இந்தியாவின் லாப நோக்கம் கொண்டவர்கள் ரஷ்யாவின் கூட்டாளியாக இருக்கின்றனர். ரஷ்யா யுக்ரேனை தொடர்ந்து தாக்கி வருகிறது, இதில் இந்தியா உதவி செய்கிறது. அமெரிக்கா இந்தியாவை ஒரு உத்தி ரீதியான கூட்டாளியாக பார்க்க வேண்டுமெனில், இந்தியாவும் அதற்கேற்ப நடந்து கொள்ள வேண்டும்," என பீட்டர் நவரோ குறிப்பிட்டுள்ளார்.





# நால்

புதின், டிரம்ப் இடையேயான அனுசரணையான போக்கு

டிரம்ப், புதின் இடையேயான உற்சாகமான சந்திப்பால் இந்தியாவுக்கு எந்தப் பயனும் ஏற்படப் போவதில்லை, மாறாக இது ரஷ்யாவுக்கும் அமெரிக்காவுக்கும் மட்டுமே பயனளிக்கும் என்று கூறப்படுகிறது.அமெரிக்கா தானே ரஷ்யாவுடன் வணிகம் செய்கிறது, மேலும் இந்தியாவை விட சீனா ரஷ்யாவிடமிருந்து அதிக எண்ணெய் வாங்குகிறது. ஆனால், டிரம்ப் புதினை வரவேற்பதோடு சீனாவின் மீது வரி விதிக்கும் முடிவை தள்ளிப்போடுகிறார்.இதனால், இந்தியாவின் மீதான டிரம்பின் கடுமையான அணுகுமுறைக்கு ரஷ்யாவிடமிருந்து எண்ணெய் வாங்குவது காரணமல்ல என்று கூறப்படுகிறது. “டிரம்பின் கடுமையான அணுகுமுறைக்கு எண்ணெய் காரணமல்ல, மாறாக இது டிரம்புக்சுயமரியாதையின் மோதலாகும்,” என பாகிஸ்தானின் பிரபல எழுத்தாளரும் அரசியல் ஆய்வாளருமான பர்வேஸ் ஹூட்பாய் கூறினார்.“யுத்த நிறுத்தத்திற்கு தமக்கு பெயர் கிடைக்க இடம் தரவில்லை என்பது டிரம்புக்கு பிடிக்கவில்லை. டிரம்பின் உத்தரவின்படிதான் யுத்த நிறுத்தம் செய்யப்பட்டது என்று தனது சொந்த நாட்டில் ஒப்புக்கொள்வது ஏற்புடையதாக இல்லை. எனவே, இது இரு தலைவர்களின் சுயமரியாதையின் மோதல் என்று நினைக்கிறேன்,” என்று ஹூட்பாய் சொல்கிறார்.



அலாஸ்காவில் டிரம்ப் மற்றும் புதின் சந்திப்புக்கு முன்பு அமெரிக்க நிதி செயலாளர் ஸ்காட் பெசென்டும், இந்தியாவுக்கு எச்சரிக்கை விடுத்திருந்தார். புதினுடனான பேச்சுவார்த்தை சரியாக அமையவில்லை என்றால், இந்தியாவுக்கு எதிரான வரி மேலும் உயரலாம் என்று ஸ்காட் கூறியிருந்தார். ஐரோப்பாவும் இந்தியாவுக்கு எதிரான இந்த முடிவில் இணைய வேண்டும் என்று அவர் கூறியிருந்தார். அநந்தா சென்டர் என்ற சிந்தனைக் குழு வெளியுறவுக் கொள்கை தொடர்பான விவகாரங்களில் பணியாற்றுகிறது. இதன் தலைமை நிர்வாகி இந்திராணி பாக்சி, ஸ்காட் கருத்தின் காணொளியை மறு பதிவு செய்து “இது மிகவும் ஆபத்தானது. மேற்கத்திய நாடுகள் இந்தியா ரஷ்யாவுக்கு முக்கியமானது என்று நம்புகின்றன. எனவே புதினை அடக்குவதற்கு இந்தியாவை தண்டிக்கின்றன. புதின் தனது நலன்களில் இருந்து விலகுவதில்லை, எனவே இந்தியா பாதிக்கப்பட்டாலும் அவருக்கு கவலையில்லை. இதனால் இந்தியா ஒரு குத்துப் பையாக (பஞ்ச் பேக்) மாறி, தனக்கு எந்தத் தொடர்பும் இல்லாத விளைவுகளால் பாதிக்கப்படும்.” என எழுதினார்.




இந்தியாவின் மீது அதிகரித்து வரும் அமெரிக்காவின் கடுமையான அணுகுமுறை குறித்த நிச்சயமின்மை டிரம்பை பற்றி மட்டுமல்ல. பல ஆய்வாளர்கள் ரஷ்யாவையும் சந்தேகத்துடன் பார்க்கின்றனர். வெளியுறவுக் கொள்கை முனையில் இந்தியா இப்போது மிகப் பெரிய சவாலை எதிர்கொள்வதாக டெல்லி ஜவஹர்லால் நேரு பல்கலைக்கழகத்தில் உள்ள ரஷ்ய மற்றும் மத்திய ஆசிய ஆய்வு மையத்தில் இணைப் பேராசிரியரான ராஜன் குமார் கூறினார். "ஒரு பக்கத்தை தேர்ந்தெடுக்க வேண்டிய அழுத்தம் இந்தியாவின் மீது அதிகரித்து வருகிறது, இது எந்த வகையிலும் இந்தியாவுக்கு சாதகமல்ல. இந்தியா அமெரிக்காவுக்காக ரஷ்யாவை கைவிட முடியாது, மேலும் ரஷ்யாவுடன் மட்டுமே இருக்கவும் முடியாது. இந்தியாவின் மீது அழுத்தம் தெளிவாகத் தெரிகிறது. பிரதமர் யின் எஸ்சிஓ (ஷாங்காய் ஒத்துழைப்பு அமைப்பு) உச்சி மாநாட்டிற்காக சீனா செல்லுவது, இந்தியா அமெரிக்காவல்லாத தலைமையிலான குழுவில் மிகவும் செயல்பாட்டுடன் இருக்க விரும்புவதைக் காட்டுகிறது. பிரதமர் சீனாவுக்கு செல்லவிருக்கும் நேரத்தில், சில மாதங்களுக்கு முன்பு சீனா இந்தியாவுக்கு எதிரான யுத்தத்தில் பாகிஸ்தானுக்கு உதவியிருந்தது." என்கிறார் ராஜன் குமார்

புரூக்கிங்ஸ் இன்ஸ்டிடியூஷன் என்ற சிந்தனைக்குழுவின் மூத்த ஆய்வாளர் தன்வி மதன், இந்திராணி பாக்சியின் பதிவை மறு பதிவு செய்து, "டிரம்ப் இந்தியாவை தொந்தரவு செய்தால், புதின் பயனடைவார்.இந்தியா,அமெரிக்கா இடையேயான உறவுகள் மோசமடைந்தால், இந்தியாவில் ரஷ்யாவுடனான உறவுகளை மேலும் வலுப்படுத்த வேண்டும் என்ற கோரிக்கை எழும். அப்படி ஒரு சூழ்நிலையில் இந்தியா சீனாவுடன் உடன்படிக்கை செய்துகொள்ள தயாராக இருக்கும். அமெரிக்கா பாகிஸ்தான் இடையேயான உறவுகள் குறித்து கவலைகொள்ளும் அளவு ரஷ்யா பாகிஸ்தான் இடையேயான உறவுகள் ஆழமடைவது குறித்து இந்தியர்கள் கவலைகொள்ளாதது ஏன்?" என தன்வி மதன் கேள்வி எழுப்புகிறார்.

"ஒரு காலத்தில் அமெரிக்காவை விட பாகிஸ்தானுக்கு அதிக ராணுவ உபகரணங்கள் விநியோகிக்கும் நாடாக ரஷ்யா இருந்தது. இந்த விவகாரத்தில் இந்தியாவும் புகார் எழுப்பியிருந்தது. ஆனால், இந்தியாவின் புகாரால் ரஷ்யா பாகிஸ்தானுடனான எஃப்.டி.எஃப்.ஏ திட்டத்திலிருந்து பின்வாங்கிவிடும் என்று நான் நினைக்கவில்லை. அமெரிக்காவுடனான இந்தியாவின் மோதல் நிரந்தரமானது இல்லை என்பது ரஷ்யாவுக்கு தெரியும். அமெரிக்காவுக்கு இந்திய சந்தை தேவை. சமீபத்தில் தாலிபன் விவகாரத்தில் ரஷ்யா பாகிஸ்தான் இடையேயான ஒத்துழைப்பை காணலாம். கல்வான் மோதலுக்கு நான்கே மாதங்களுக்குப் பிறகு சீனா ரஷ்யா இடையேயான பாதுகாப்பு ஒத்துழைப்பு அதிகரித்தது. ரஷ்யா அமெரிக்கா இடையேயான உறவுகளில் முன்னேற்றம் ஏற்பட்டால், அமெரிக்கா இந்தியா இடையேயான உறவுகளின் மீதான அழுத்தம் குறையலாம். ஆனால், அமெரிக்கா ரஷ்யா இடையேயான நட்பு, சீனாவிடமிருந்து ரஷ்யாவின் தூரத்தை அதிகரிக்கும் என்று இந்தியாவில் பலர் நினைத்தனர். ஆனால், அப்படி நடக்காது என்று நான் நம்புகிறேன். டிரம்ப், சீனா, ரஷ்யா இரண்டுடனும் ஒப்பந்தம் செய்ய

விரும்புவதாக கூறியிருந்தார்," என தன்வி மதன் குறிப்பிட்டிருந்தார்.

அமெரிக்காவின் தற்பெருமைக்கு தூபம்போடுவதன் மூலம் தான் பலனடையமுடியும் என கருதியபோதெல்லாம் புதின் அதை மகிழ்ச்சியாக பயன்படுத்திக் கொண்டதாக பலர் நம்புகின்றனர். உதாரணமாக, ஆபரேஷன் சிந்தூருக்கு பிறகு டிரம்ப் மற்றும் புதின் இடையே ஒரு தொலைபேசி உரையாடல் நடைபெற்றது.இந்த உரையாடலுக்குப் பிறகு ரஷ்யாவின் தரப்பிலிருந்து வெளியான அறிக்கையில், யுத்த நிறுத்தத்திற்கு டிரம்பின் பங்களிப்பு புகழப்பட்டது. இந்தியா டிரம்பின் கூற்றுகளை மறுத்தபோது, ரஷ்யாவிடமிருந்து இந்த அறிக்கை வெளியானது. 2019இல் இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கும் இடையே பதற்றம் ஏற்பட்டபோது, ரஷ்யாவும் மத்தியஸ்தம் செய்ய முன்வந்தது.

இந்தியாவிற்கு இருக்கும் சவால்

சீன வெளியுறவு அமைச்சர் வாங் யி புது டெல்லிஅதைத் தொடர்ந்து பாகிஸ்தான் செல்கிறார். வாங் யி பாகிஸ்தான் வெளியுறவு அமைச்சருடன் முக்கிய பேச்சுவார்த்தையில் பங்கேற்பார் என சீன வெளியுறவு அமைச்சகம் கூறியிருக்கிறது."மே 7 முதல் 10 வரை இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கும் இடையேயான ராணுவ மோதலின் போது, கண்ணுக்கு தெரியாத மூன்றாம் தரப்பு போல சீனா நடந்து கொண்டது. சீனா பாகிஸ்தானுக்கு நிகழ்நேர புலனாய்வு தகவல்களை வழங்கியது. மேலும், ரேடார் மற்றும் செயற்கைக்கோள் தரவுகளையும் வழங்கியது. இதை இந்திய ராணுவத் துணைத் தளபதி கூறியிருந்தார்," என வாங் யியின் இந்தப் பயணம் குறித்து இந்தியாவின் நன்கு அறியப்பட்ட உத்தி நிபுணர் பிரம்மா செல்லானி எக்ஸ் தளத்தில் பதிவிட்டிருந்தார்.

"ஏப்ரல் 2020க்கு முன்பு லடாக்கில் இந்தியாவின் கட்டுப்பாட்டில் இருந்த பகுதிகளை சீனா இன்னமும் விடுவிக்காத நிலையில் இந்த பயணம் நடக்கிறது. ஏப்ரல் 2020க்கு முன்பு லடாக்கில் இருந்த நிலைமை மீண்டும் நடைமுறைப்படுத்தப்படவேண்டும் என்ற கோரிக்கையை இந்தியா கைவிட்டுவிட்டதை வரவிருக்கும் பயணம் சுட்டிக்காட்டுகிறது," என செல்லானி எழுதியுள்ளார்.




வாங் யி மாண்டரின் மொழியில் சீனா வெளியிட்ட அறிக்கையில், இந்தியா தைவானை சீனாவின் ஒரு பகுதியாக ஏற்றுக்கொண்டதாக கூறப்பட்டது. இருப்பினும், வாங் யியின் இந்த பயணத்தைப் பற்றி இந்தியாவின் தரப்பில் அதிகாரபூர்வமாக எதுவும் கூறப்படவில்லை."இந்தியா சீனாவுடனான உறவுகளை மேம்படுத்த விரும்பினால், சீனா அதை வரவேற்கும், ஆனால் இந்தியாவுக்கு எந்தவித சலுகையும் கிடைக்காது. சீனா தனது நலன்களில் சமரசம் செய்யாது, மேலும் பாகிஸ்தானுக்கு ஆதரவு அளிப்பதை நிறுத்தாது.

இந்தியாவின் தற்போதைய அணுகுமுறை முக்கியமாக உத்தி சமன்பாட்டின் அடிப்படையில் உள்ளது. அமெரிக்காவுடனான உறவுகள்

மோசமடைந்து வரும் நிலையில், இந்தியா சீனாவுடன் உறவுகளை மேம்படுத்த முடிவு செய்துள்ளது. சீனா இந்த விஷயங்களை மிகவும் எச்சரிக்கையுடன் மதிப்பிடுகிறது என்று நான் நம்புகிறேன்," என்று நியூயார்க் டைம்ஸ் நாளிதழுக்கு அளித்த பேட்டியில் ஷாங்காயின் ஃபுடான் பல்கலைக்கழகத்தில் தெற்காசியாவுக்கும் சீனாவுக்கும் இடையேயான உறவுகள் குறித்த நிபுணரான லின் மின்வாங் தெரிவித்தார்.

இந்தியாவின் மீதான டொனால்ட் டிரம்பின் பகைமை ஒரு பெரிய உத்தி தவறு என இந்திய வம்சாவளியைச் சேர்ந்த பிரபல அமெரிக்க பத்திரிகையாளர் ஃபரீத் ஸகாரியா, சிஎன்என் நிகழ்ச்சி ஒன்றில் தெரிவித்தார்."கடந்த 25 ஆண்டுகளாக அமெரிக்கா இந்தியாவை ஒரு உத்தி கூட்டாளியாக பார்த்து வந்தது, ஆனால் டொனால்ட் டிரம்ப் இந்தக் கொள்கையை மாற்றி வருகிறார். ஆசியாவில் சீனாவின் வளர்ந்து வரும் செல்வாக்கைத் தடுக்க இந்தியா அமெரிக்காவுக்கு முக்கியமானதாக கருதப்பட்டது. ஆனால், டிரம்ப் இந்திய பொருளாதாரம் வீழ்ந்துவிட்டதாக கூறி அவமதித்தார். உண்மையில், இந்திய பொருளாதாரம் வேகமாக வளர்ந்து வருகிறது," என ஃபரீத் ஸகாரியா கூறினார். "டிரம்ப் இந்தியாவின் மீதான தனது அணுகுமுறையை இப்போது மாற்றிக்கொண்டாலும், பாதிப்பு ஏற்கனவே ஏற்பட்டுவிட்டது. இந்தியாவில் அமெரிக்காவின் மீதான அவநம்பிக்கை அதிகரித்துள்ளது. அமெரிக்கா தனது உண்மையான நிறத்தை காட்டிவிட்டது என்று இந்தியர்கள் நினைக்கிறார்கள்" என ஃபரீத் ஸகாரியா தெரிவித்தார்.

இந்தியா—அமெரிக்க உறவுகள் ஏற்ற இறக்கங்களைச் சந்திக்கும் இந்த நேரத்தில், நீண்டகால ராஜ்ஜீய மோதலுக்குப் பிறகு, அமெரிக்கா பாகிஸ்தானுடன் ஒத்துழைப்பை உருவாக்க முயற்சிக்கிறது. சமீப காலங்களில், பயங்கரவாத எதிர்ப்பு நடவடிக்கைகள், பிராந்திய நிலைத்தன்மை, பொருளாதார கூட்டணி மற்றும் உயர் மட்ட ராஜ்ஜீய சந்திப்புகள் ஆகியவற்றில் அமெரிக்காவுக்கும் பாகிஸ்தானுக்கும் இடையிலான உறவுகள் மேம்படுத் தொடங்கியுள்ளன. வரலாற்று ரீதியாக , பனிப்போர் காலம் மற்றும் ஆப்கானிஸ்தானில் பாதுகாப்பு ஒத்துழைப்பின் தொடக்க காலங்களில் அமெரிக்காவுக்கும் பாகிஸ்தானுக்கும் இடையே நெருக்கமான உறவு இருந்தது. ஆனால், காலப்போக்கில் அந்த உறவு பலவீனமடைந்து, இடையிடையே பதற்றங்கள் உருவாகின. இருப்பினும், அதிபர் டொனால்ட் டிரம்பின் இரண்டாவது பதவிக் காலத்தில், இந்த உறவுகளை சமநிலைப்படுத்தும் புதிய முயற்சி ஒன்று தோன்றியது.

இந்தியாவுக்கும் அமெரிக்காவுக்கும் இடையிலான உறவு, வர்த்தகம் மற்றும் வரிகளைச் சுற்றி பதற்றமான சூழலை எதிர்கொள்கின்ற நேரத்தில், பாகிஸ்தானுடன் புதிய ஒத்துழைப்பு முயற்சியை அமெரிக்கா தொடங்கியுள்ளது. முன்னதாக கடந்த மே மாதத்தில் இந்தியா—பாகிஸ்தான் மோதலின் போது, சண்டை நிறுத்தம் ஏற்பட அமெரிக்கா முக்கிய பங்கு வகித்ததாக கூறியது. சமீபத்திய ஆண்டுகளில், சீனாவின் செல்வாக்கை சமநிலைப்படுத்த அமெரிக்கா இந்தியாவுடன் நெருக்கமாக செயல்பட்டது. ஆனால், இந்தியா அமெரிக்கப் பொருட்களுக்கு அதிக வரி விதிப்பதையும், ரஷ்யாவிலிருந்து எண்ணெய் வாங்குவதையும் காரணம் காட்டி, டிரம்ப் இந்தியப் பொருட்களுக்கு 50% வரி விதித்தார். இதனால், இந்தியா—அமெரிக்கா உறவுகள் பாதிக்கப்பட்டன.


மறுபுறம், பாகிஸ்தான் அமெரிக்காவுடன் குறைந்த வரி விகிதத்தில் சிறந்த ஒப்பந்தத்தைப்



பெற்றுள்ளது. பிராந்தியத்தில் உள்ள மற்ற நாடுகளுடன் ஒப்பிடும்போது இது சிறப்பானதாக கருதப்படுகிறது.அமெரிக்காவுடனான உறவுகள் மேலும் வலுவடையும் என்று பாகிஸ்தானில் பலர் நம்பிக்கையுடன் உள்ளனர், இதை ஒரு "புதிய அத்தியாயம்" என்று அழைக்கின்றனர், ஆனால் சிலர், இந்த நெருக்கம் நீடிக்குமா என்ற சந்தேகத்தையும் வெளிப்படுத்துகின்றனர். இந்த ஒத்துழைப்பு, அமெரிக்காவின் பொருளாதார மற்றும் உத்தி சார்ந்த நலன்களை அடிப்படையாகக் கொண்டது என இந்திய நிபுணர்கள் கூறுகின்றனர்.

அமெரிக்காவுக்கும் பாகிஸ்தானுக்கும் இடையிலான உறவுகள் கடந்த சில மாதங்களில், பாகிஸ்தானுக்கும் அமெரிக்காவிற்கும் இடையிலான உயர்மட்ட தொடர்புகள் அதிகரித்துள்ளன. இது இரு நாடுகளுக்கிடையிலான உறவுகள் மேம்பட்டுள்ளதைத் தெளிவாகக் காட்டுகிறது. அதிபர் டிரம்பின் இரண்டாவது பதவிக் காலத்தில், பயங்கரவாதத்திற்கு எதிரான ஒத்துழைப்பு அதிகரிக்கப்பட்டது. அதே நேரத்தில், எரிசக்தி மற்றும் முக்கிய கனிமங்கள் போன்ற புதிய துறைகளில் ஒத்துழைப்புக்கான வாய்ப்புகளும் ஆராயப்பட்டுள்ளன.

ஏப்ரல் மாதத்தில், எரிக் மேயர் தலைமையிலான அமெரிக்கக் குழு பாகிஸ்தானில் முக்கிய கனிமங்களில் முதலீட்டு வாய்ப்புகள் குறித்து விவாதித்தது. இது மேம்பட்ட தொழில்நுட்பத் துறையில் நீண்டகால ஒத்துழைப்புக்கான அமெரிக்காவின் திட்டமிடலையும் சுட்டிக்காட்டுகிறது. இதற்கிடையில், டிரம்ப் ஆதரவு பெற்ற கிரிப்டோகரன்சி நிறுவனமொன்று, பாகிஸ்தானின் கிரிப்டோ கவுன்சிலுடன் ஒப்பந்தம் செய்து, கிரிப்டோகரன்சி பயன்பாடுகள் மற்றும் பிளாக்செயின் கண்டுபிடிப்புகளை விரைவுபடுத்தும் முயற்சியில் ஈடுபட்டுள்ளது என பாகிஸ்தான் அறிவித்தது.




ஜூலை மாதத்தில், பாகிஸ்தான் பொருட்களுக்கு 19% வரி விதித்து அமெரிக்காவுடன் ஒரு முக்கிய வர்த்தக ஒப்பந்தம் கையெழுத்தானது. இந்த ஒப்பந்தம் பாகிஸ்தானின் "பெரிய எண்ணெய் வளங்களை" பயன்படுத்த உதவும் என டிரம்ப் கூறினார். ஆகஸ்ட் மாதத்தில், பாகிஸ்தான் ராணுவத் தளபதி பீல்ட் மார்ஷல் அசிம் முனீர் மீண்டும் அமெரிக்காவிற்குப் பயணம் செய்தார். இதன் மூலம் ராஜ்ஜீய உறவுகள் மேலும் வலுவடைந்தன. அதற்கு முன்னதாக, ஜூன் மாதத்தில், அவர் டிரம்புடன் தனிப்பட்ட மதிய விருந்தில் கலந்துகொண்டார். பலூச் விடுதலை ராணுவம் மற்றும் அதன் கூட்டாளியான மஜீத் படைப்பிரிவை, அமெரிக்கா வெளிநாட்டு பயங்கரவாத அமைப்புகளாக அறிவித்தது. இது பாகிஸ்தானின் நீண்ட கால கோரிக்கையாக இருந்தது. அதே நேரத்தில், பாகிஸ்தான் ராணுவத் தளபதி அசிம் முனீர் கூறிய 'அணு ஆயுதத் தாக்குதல் எச்சரிக்கை' அறிக்கையிலிருந்து அமெரிக்கா தன்னைத் விலக்கிக் கொண்டு,




பிராந்திய சக்திகளுக்கிடையிலான உரையாடலுக்கு முக்கியத்துவம் அளிக்கிறது என்று தெரிவித்தது.

ஏற்ற தாழ்வுகளைச் சந்தித்த உறவுகள்

அமெரிக்கா—பாகிஸ்தான் உறவுகள் எப்போதும் சிக்கலானதாகவே இருந்துள்ளன. 1979—இல் சோவியத் யூனியன் ஆப்கானிஸ்தானில் படையெடுத்தபோது, இரு நாடுகளும் நெருக்கமடைந்தன. ஆனால், கடந்த சில தசாப்தங்களில் இந்த உறவுகள் நிலையற்றதாகவே உள்ளன.


2000—களின் தொடக்கத்தில், பயங்கரவாதத்திற்கு எதிரான போர் இரு நாடுகளையும் ஒன்றிணைத்தது. அமெரிக்கா ஆப்கானிஸ்தானில் தாக்குதல் நடத்தியபோது, பாகிஸ்தான் அதன் முக்கிய கூட்டாளியாக மாறியது. ஆனால், இந்தக் காலத்தில் அமெரிக்கா மேற்கொண்ட ட்ரோன் தாக்குதல்கள் பாகிஸ்தானின் பழங்குடிப் பகுதிகளில் அவநம்பிக்கையை உருவாக்கின. ராணுவ ஒத்துழைப்பு ஆழமடைந்தாலும்,இந்த தாக்குதல்கள் இரு நாடுகளுக்கிடையிலான நம்பிக்கையை பாதித்தன.

ஒபாமா பதவியில் இருந்த காலத்தில், உறவுகள் மேலும் பதற்றமடைந்தன. குறிப்பாக 2011—இல், இஸ்லாமாபாத் அருகே ஒசாமா பின்லேடன் கொல்லப்பட்ட நிகழ்வு, பாகிஸ்தான் 'இரட்டை விளையாட்டு' விளையாடுகிறது என்ற அமெரிக்காவின் சந்தேகத்தை மீண்டும் எழுப்பியது. 2018—இல், டிரம்ப் நிர்வாகம் பாகிஸ்தானுக்கான 255 மில்லியன் டாலர் ராணுவ உதவியை நிறுத்தி, "பொய்கள் மற்றும் மோசடி செய்வதாக " பாகிஸ்தான் மீது குற்றம் சாட்டியது. இதனால் உறவுகள் மேலும் மோசமடைந்தன. இந்தக் காலகட்டத்தில், இரு தரப்பும் உறவுகளை மீட்டெடுக்க முயற்சித்தாலும், ஆப்கானிஸ்தான் தாலிபான்கள் மற்றும் பிற தீவிரவாத அமைப்புகளுக்கு பாகிஸ்தான் ஆதரவளிக்கிறது என்ற குற்றச்சாட்டுகள், அதற்கு தடையாக இருந்தன.

ஜோ பைடன் பதவியில் இருந்தபோது, இந்தியாவுக்கு முன்னுரிமை அளித்து, பாகிஸ்தானுடன் பயங்கரவாத எதிர்ப்பு தொடர்பான விஷயங்களில் மட்டுமே அமெரிக்கா உரையாடியது. "ஆகஸ்ட் 2021—இல் அமெரிக்கா ஆப்கானிஸ்தானிலிருந்து வெளியேறிய பிறகு,



பாகிஸ்தானின் முக்கியத்துவம் அமெரிக்காவின் பார்வையில் மேலும் குறைந்தது"என பாகிஸ்தானின் 'தி எக்ஸ்பிரஸ் ட்ரிப்யூன்' செய்தித்தாள் கூறியது. ஆனால், பைடனின் பதவிக்காலம் முடிவடைந்த பிறகு, டிரம்பின் இரண்டாவது பதவிக்காலத்தில் இரு நாடுகளுக்கும் இடையிலான உறவுகளில்




முன்னேற்றம் ஏற்படுவதற்கான சாயல் தென்படுகிறது.

பாகிஸ்தானை நோக்கி டிரம்ப் எடுத்துள்ள அணுகுமுறையில் ஒரு தெளிவான மாற்றம் ஏற்பட்டுள்ளது எனவும், இந்த மாற்றத்திற்கு பொருளாதாரம், பாதுகாப்பு மற்றும் உலக அரசியல் காரணிகள் முக்கிய பங்கு வகிக்கின்றன எனவும் சில அரசியல் ஆய்வாளர்கள் கூறுகின்றனர். மே மாதத்தில் இந்தியாவுடன் ஏற்பட்ட ராணுவ மோதலுக்குப் பிறகு, பயங்கரவாத எதிர்ப்பு ஒத்துழைப்பு மற்றும் பாகிஸ்தானின் ராஜ்ஜீய முயற்சிகள், அமெரிக்காவுடன் உறவுகளை மேம்படுத்தியதாக பாகிஸ்தான் ஊடகங்களும் அதிகாரிகளும் தெரிவிக்கின்றனர். "இந்திய தாக்குதலுக்கு எதிராக பாகிஸ்தான் ராணுவம் மிகச் சிறப்பாகவும் பொறுப்புடனும் செயல்பட்டது. அரசாங்கத்தின் உண்மை மற்றும் தர்க்கத்தின் அடிப்படையிலான வெளியுறவுக் கொள்கை, சர்வதேச சூழ்நிலையை பாகிஸ்தானுக்கு சாதகமாக மாற்றியது. இதன் விளைவாக, இந்தியா ஆதரிக்கும் பயங்கரவாத அமைப்புகளுக்கு எதிராக அமெரிக்கா இப்போது பாகிஸ்தானுடன் நிற்கிறது"என்று உருது செய்தித்தாள் ஜாங் குறிப்பிட்டுள்ளது.

ஆனால், அமெரிக்கா அதன் பொருளாதார மற்றும் உத்தி சார்ந்த நலன்களில் அதிக கவனம் செலுத்துகிறது என்று இந்தியாவில் உள்ள ஆய்வாளர்கள் நம்புகிறார்கள், இதில் முக்கியமான கனிமங்கள், கிரிப்டோ ஒத்துழைப்பு மற்றும் பிராந்திய நிலைத்தன்மை ஆகியவை அடங்கும். 'டிரம்ப் பாகிஸ்தானில் ஆர்வம் காட்டுவதற்கான மிகப்பெரிய காரணம், முக்கிய கனிமங்களுக்காக சீனா மீதான சார்பைக் குறைப்பதுதான்' எனக் கூறுகிறது இந்திய செய்தித்தாள் தி பைனான்சியல் எக்ஸ்பிரஸில் வெளியான கட்டுரை.

மறுபுறம், 'பாகிஸ்தானின் கிரிப்டோ சொத்துகளில் டிரம்பின் குடும்பத்தினர் முதலீடு செய்திருப்பதே, பாகிஸ்தானுடன் நெருக்கம் அதிகரிக்கக் காரணமாக இருக்கலாம்'என்கிறார் இந்திய அரசியல் விமர்சகர் பிரம்மா செல்லானி. மேலும், பாகிஸ்தானின் ராஜ்ஜீய மற்றும் பரப்புரை முயற்சிகளே இந்த மாற்றத்திற்கு காரணம் என சில ஆய்வாளர்கள் கூறுகின்றனர். இந்தியா, அமெரிக்காவின் வர்த்தக ஒப்பந்தத்தை ஏற்காததாலும், இந்தியா—பாகிஸ்தான் இடையிலான சண்டை நிறுத்தத்திற்கான டிரம்பின் முயற்சியை நிராகரித்ததாலும், டிரம்ப் கோபமடைந்திருக்கலாம் என்பது அவர்களது வாதமாக உள்ளது. பாகிஸ்தானுக்கும்




அமெரிக்காவுக்கும் இடையிலான இந்த நெருக்கம் நீண்ட காலம் தொடருமா என்பது இன்னும் தெளிவாக தெரியவில்லை. ஆனால், சில அரசியல் ஆய்வாளர்களும் ஊடகங்களும் இந்த முன்னேற்றம் குறித்து நம்பிக்கையுடன் இருக்கின்றனர். அதே நேரத்தில், எச்சரிக்கையாக இருக்க வேண்டும் எனவும் அவர்கள் வலியுறுத்துகின்றனர்.

இந்திய பொருள்களுக்கு அமெரிக்கா 50% வரி: சீனா எதிர்ப்பு

அமெரிக்காவில் இறக்குமதி செய்யப்படும் சில இந்திய பொருள்கள் மீது அந்நாடு 25 சதவீத வரி விதிக்கும் நடைமுறை அண்மையில் அமலுக்கு வந்தது. இந்த 25 சதவீதத்துடன் ரஷியாவிடம் இருந்து இந்தியா கச்சா எண்ணெய் இறக்குமதி செய்வதற்கு அதிருப்தி தெரிவித்து, இந்திய பொருள்கள் மீது கூடுதலாக 25 சதவீத வரியை அமெரிக்க அதிபர் டிரம்ப் விதித்தர். இந்தக் கூடுதல் வரி விதிப்பு ஆக.27—ஆம் தேதி அமலுக்கு வரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இதன்மூலம், இந்திய பொருள்கள் மீதான அமெரிக்காவின் வரி விதிப்பு 50 சதவீதமாக அதிகரிக்கும். இந்நிலையில், புது தில்லியில் நடைபெற்ற நிகழ்ச்சி ஒன்றில் இந்தியாவுக்கான சீன தூதர் ஷு ஃபெய்ஹாங் கூறியதாவது: இந்தியா பொருள்கள் மீது அமெரிக்கா 50 சதவீதம் வரி விதித்துள்ளது. இந்த வரி விதிப்பை மேலும் அதிகரிக்க அமெரிக்கா மிரட்டல் விடுத்துள்ளது. இதற்கு சீனா முழுமையாக எதிர்ப்பு தெரிவிக்கிறது.

சீனாவில் ஷாங்காய் ஒத்துழைப்பு மாநாட்டை நடத்த இந்தியா உள்பட அனைத்து நாடுகளுடனும் ஒன்றிணைந்து பணியாற்ற சீனா விரும்புகிறது. இந்தியாவும் சீனாவும் ஒன்றிணைந்து செயல்படுவதன் மூலம், புதிய அத்தியாயத்தை தொடங்க முடியும் என்றர்.


இந்தியாவின் பக்கம் நிற்பதாக சீனா அறிவிப்பு

டிரம்ப் வரிக்கு எதிராக இன்னமும் மௌனமாக இருப்பது கொடுமைக்காரர்களை பலமாக்கும் என்றும் இந்தியாவின் பக்கம் நிற்பதாகவும் சீனா அறிவித்துள்ளது. சீனாவின் வெளியுறவுத் துறை அமைச்சர் வாங் யி இரண்டு நாள் அரசு முறைப் பயணம் மேற்கொண்டிருந்த நிலையில், சீன அதிபரின் இந்த அறிவிப்பு முக்கியத்துவம் பெற்றுள்ளது. டிரம்ப் வரி விதிப்புக்கு எதிராக, இந்தியா — சீனா இடையே நெருங்கிய ஒருங்கிணைப்பு அதிகரிக்கப்பட வேண்டும் என்பதையும் அவர் வலியுறுத்தியிருக்கிறார்.

இது குறித்து அவர் பேசுகையில், இந்தியாவுக்கு அமெரிக்கா 50 சதவீத வரியை விதித்திருக்கிறது. மேலும் வரி விதிக்கப்போவதாகவும் மிரட்டுகிறது. இதனை சீனா கடுமையாக எதிர்க்கிறது. அமைதியாக இருப்பது, கொடுமைக்காரர்களுக்கு பலம் சேர்க்கும். எனவே, சீனா, இந்தியாவின் பக்கம் நிற்கும் என்று, நியாயத்துக்கு விரோதமான வரி விதிப்பு முறைகளை எதிர்ப்பதாக சீனா அறிவித்துள்ளது.

# கருத்துப் ப(ா)டம்

நன்றி: தினமலர்




# சொல்றாங்க... சொல்றாங்க...



"த.வெ.கவின் கொள்கை எதிரி பா.ஜ.க, அரசியல் எதிரி தி.மு.க..."

**விஜய்**

(எதிரியை மட்டும் காட்டினா போதுமா? முதல்லே வீட்டை விட்டு மக்கள் கிட்டே வந்து நண்பனா நில்லுங்க!)



"அமெரிக்காவின் வரி விதிப்புக்கு எதிராக இந்தியாவுடன் சீனா உறுதியாக துணை நிற்கும்!"

**சீனத் தூதர் சூ ஃபெய்ஹோங்**

(என்னய்யா இது? 'பெரியண்ணன்' எது பேசினாலும், எங்கெங்கோ என்னென்னமோ நடக்குது?)



"சினிமாவில் சம்பாதித்துவிட்டு ஓய்வுபெறும் வயதில் சிலர் கட்சி தொடங்குகின்றனர்."

**இ.பி.எஸ்**

(அவங்களாவது கட்சி தொடங்கினாங்க. நீங்க குறுக்கு வழியிலே வந்து, நல்லா இருந்த கட்சியையே காலி பண்ணிட்டீங்களே!)



"எனக்கு கொடுத்த அன்பை என் மகனுக்கும் கொடுங்கள்"

**ஷாருக்கான்**

(அந்த 'கோப்பை' யார் யாருக்கு கிடைக்கணுமோ அவங்களுக்குத் தான் கிடைக்கும்!)



# பசியறியா

**காஸாவில் உணவுப் பஞ்சம் பரவி வருகிறது.**

காஸா நகரை கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர தரைவழி தாக்குதலுக்கான முதற்கட்ட நடவடிக்கையை தொடங்கியுள்ளதாக இஸ்ரேலிய ராணுவம் தெரிவித்துள்ளது. ஏற்கனவே அதன் புறநகர் பகுதிகளை கட்டுப்பாட்டில் வைத்திருப்பதாகவும் தெரிவித்துள்ளது. அப்பாவி மக்கள் மீது போர் தொடுப்பதற்காக இஸ்ரேல் சண்டை நிறுத்தத்தை தடுப்பதாக ஹமாஸ் குற்றம் சாட்டியுள்ளது. காஸா நகரை இஸ்ரேல் கைப்பற்றி வருவதால், லட்சக்கணக்கான பாலத்தீனர்கள் காஸாவில் இருந்து வெளியேறி தெற்கு காஸாவில் உள்ள முகாவிற்குச் செல்வார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.




இஸ்ரேலிய கூட்டாளிகள் பலரும் இதற்கு கண்டனம் தெரிவித்து வருகின்றனர். “இது இருதரப்பு மக்களுக்கும் பேரழிவையே ஏற்படுத்தும், மேலும் முழு பிராந்தியத்திலும் நிரந்தரமாக போர் சூழல் ஏற்படும் அபாயம் உள்ளது.” என பிரான்ஸ் அதிபர் இமானுவேல் மேக்ராங் தெரிவித்துள்ளார்.

“மேலும் இடம்பெயரும் சூழல், தீவிரமடையும் விரோதப் போக்கு ஆகியவை காஸாவின் 2.1 மில்லியன் மக்களுக்கு ஏற்கனவே பேரழிவு தரும் சூழ்நிலையை மேலும் மோசமாக்கும் அபாயம் உள்ளது” என சர்வதேச ரெட் கிராஸ் சங்கம் **(ICRC)** தெரிவித்துள்ளது.

2023 அக்டோபர் 7ஆம் தேதியன்று தெற்கு இஸ்ரேல் மீது ஹமாஸ் தலைமையிலான தாக்குதலில் சுமார் 1,200 பேர் கொல்லப்பட்டனர், மேலும் 251 பேர் பிணைக்கைதிகளாகப் பிடிக்கப்பட்டனர். இதற்குப் பதிலளிக்கும் விதமாக ஹமாஸ் மீது இஸ்ரேல் ராணுவ நடவடிக்கையைத் தொடங்கியது.அப்பகுதியின் சுகாதாரத்துறை அமைச்சரின் கூற்றுப்படி, காஸாவில் இதுவரை 62,122 பேர் கொல்லப்பட்டுள்ளனர். அமைச்சகத்தின் இந்த உயிரிழப்பு எண்ணிக்கை மற்றும் புள்ளி விவரங்களை ஐ.நா மற்றும் பிற நாடுகள் மேற்கோள் காட்டுகின்றன.

காஸா நகரை முழுமையாகக் கைப்பற்றும்



# உலகம்!

டேவிட் க்ரிட்டன் & கேப்ரியலா போமிராய்

நோக்கில் தரைவழி தாக்குதலை இஸ்ரேல் தொடங்கியுள்ளது. ஏற்கெனவே, காஸாவின் புறநகர் பகுதிகளில் இஸ்ரேலிய துருப்புகள் கால்பதித்துள்ள நிலையில், தற்போதைய தாக்குதல் காரணமாக பாலத்தீனர்கள் காஸா நகரைவிட்டு வெளியேறத் தொடங்கியுள்ளனர்.இந்த விவகாரத்தில் மரணங்களையும் அழிவுகளையும் தடுக்க உடனடி சண்டை நிறுத்தம் தேவையென ஐ.நா. பொதுச் செயலாளர் அன்டோனியோ குட்டெரெஸ் வலியுறுத்தியுள்ளார்.

கடந்த மாதம் போர் நிறுத்தம் மற்றும் பணயக்கைதிகள் விடுதலை ஒப்பந்தம் தொடர்பாக ஹமாஸுடனான மறைமுகப் பேச்சுவார்த்தைகள் முறிந்ததைத் தொடர்ந்து, இஸ்ரேல் அரசாங்கம் முழு காஸா பகுதியையும் கைப்பற்றும் திட்டத்தை அறிவித்தது. காஸா முனையின் வடக்குப் பகுதியில் அமைந்துள்ள காஸா நகரை முழு கட்டுப்பாட்டில் எடுக்க நெதன்யாகு முன்மொழிந்த திட்டத்துக்கு இஸ்ரேலிய பாதுகாப்பு அமைச்சரவை ஆகஸ்ட் 8ஆம் தேதி ஒப்புதல் வழங்கியது.# இதையடுத்து, காஸா நகரில் தரைவழித் தாக்குதலுக்காக சுமார் 60 ஆயிரம் ராணுவ ரிசர்வ் படைவீரர்களை அழைக்கும் திட்டத்தை இஸ்ரேலிய ராணுவம் அறிவித்தது.

இந்நிலையில், தற்போது காஸா நகருக்குள் முதற்கட்ட தரைவழித் தாக்குதலை இஸ்ரேல் தொடங்கியது. சைதூன் **(Zeitoun)** மற்றும் ஜபாலியா **(Jabalia)** பகுதிகளில் தரைவழி தாக்குதல் நடத்த இஸ்ரேலிய படைகள் ஏற்கனவே நுழைந்துவிட்டதாக ராணுவ செய்தித் தொடர்பாளர் தெரிவித்துள்ளார். மேலும் கடந்த செவ்வாய்க்கிழமை அன்று பாதுகாப்புத் துறை அமைச்சர் இஸ்ரேல் கட்ஸின் ஒப்புதல்படி தாக்குதலுக்கான அடித்தளம் அமைப்பதே நோக்கம் எனவும் தெரிவித்துள்ளார். அப்பாவி மக்கள் மீது






போர் தொடுப்பதாகவும், சண்டை நிறுத்தத்தைத் தடுப்பதாகவும் இஸ்ரேல் மீது ஹமாஸ் குற்றஞ் சாட்டியுள்ளது.

இஸ்ரேலின் செயலை அதன் கூட்டணி நாடுகளே விமர்சித்துள்ளன."இது இருதரப்பு மக்களுக்கும் பேரழிவையே ஏற்படுத்தும், மேலும் முழு பிராந்தியத்திலும் நிரந்தர போர் சூழல் ஏற்படும் அபாயம் உள்ளது" என பிரான்ஸ் அதிபர் இமானுவேல் மேக்ராங் **(Emmanuel Macron)** தெரிவித்தார்.

ஜப்பானில் செய்தியாளர்களைச் சந்தித்த ஐ.நா. பொதுச் செயலாளர் அன்டோனியோ குட்டெரெஸ், உடனடியாக சண்டை நிறுத்தத்தை ஏற்படுத்துவது மிக அவசியம் என்று கூறினார். காஸா நகரத்துக்கு எதிரான இஸ்ரேலின் ராணுவ நடவடிக்கை தவிர்க்க முடியாத வகையில் பெரும் உயிரிழப்புகளையும் அழிவையும் ஏற்படுத்தும். அதனைத் தடுக்க உடனடியாக சண்டை நிறுத்தத்தை ஏற்படுத்துவது மிக அவசியம். மக்கள் இடம்பெயர்வது மற்றும் மோதல்களின் தீவிரம் அதிகரித்தால், ஏற்கனவே பேரழிவு சூழ்நிலையில் இருக்கும் காஸாவின் 2.1 மில்லியன் மக்களின் நிலைமை இன்னும் மோசமடையும் அபாயம் உள்ளது என சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் தெரிவித்தது.

கத்தார் மற்றும் எகிப்து 60 நாள் சண்டை நிறுத்தம் மற்றும் சில பணயக்கைதிகளை விடுதலை செய்யும் திட்டத்தை முன்வைத்துள்ளன. ஹமாஸ் இதை ஏற்றுக்கொண்டாலும், இஸ்ரேல் பாதிப் பேரை விடுவிக்கும் ஒப்பந்தத்தை மறுத்துள்ளது.2023 அக்டோபர் 7ஆம் தேதியன்று இஸ்ரேலில் ஹமாஸ் நடத்திய தாக்குதலில் சுமார் 1,200 பேர் கொல்லப்பட்டனர், மேலும் 251 பேர் பிணைக்கைதிகளாகப் பிடித்துச்செல்லப்பட்டனர். இதையடுத்து ஹமாஸ் மீது இஸ்ரேல் ராணுவ நடவடிக்கையைத் தொடங்கியது. அதன் பின்னர், காஸாவில் குறைந்தது 62,122 பேர் உயிரிழந்துள்ளனர் என்று அங்குள்ள சுகாதார அமைச்சகம் தெரிவித்துள்ளது.

காஸாவில் உணவுப் பஞ்சம் மோசமாக பரவி வருகிறது.எல்லைக்கு வெளியே நூற்றுக்கணக்கான உதவி லாரிகள் நின்றுகொண்டிருக்கின்றன, ஆனால் அவை உள்ளே செல்ல முடியாமல் சிக்கியுள்ளன. உலகளவில் பசியை கண்காணிக்கும் முக்கிய அமைப்பான ஒருங்கிணைந்த உணவுப் பாதுகாப்பு கட்ட வகைப்பாடு (மிறிசி), ஐக்கிய நாடுகள் சபையின் ஆதரவுடன் செயல்படுகிறது. அந்த அமைப்பு வெளியிட்ட அதிர்ச்சிகரமான தகவலின்படி, காஸாவில் உள்ள பாலஸ்தீனர்களில் நான்கில் ஒருவர், அதாவது சுமார் 5 லட்சம் பேர், கடுமையான பஞ்சத்தால் பாதிக்கப்பட்டுள்ளனர் என அறியப்படுகிறது .

இந்த தகவல் பல காரணங்களால் அதிர்ச்சியை ஏற்படுத்துகிறது.அதிலும் முக்கியமாக, இந்த சூழல் "முழுவதும் மனிதர்களால் உருவாக்கப்பட்டது" என்று அந்த அறிக்கை தெளிவாகக் கூறுகிறது. காஸாவுக்குள் உணவுப் பொருட்கள் செல்லும் வழியை இஸ்ரேல் "திட்டமிட்டு தடுக்கிறது" என்று தற்போது பல்வேறு உதவி அமைப்புகளும் குற்றம் சாட்டுகின்றன. காஸா நகரப் பகுதியில் வாழும் மக்கள் தற்போது "பட்டினி, வறுமை, மரணம்" போன்ற கடுமையான பஞ்சநிலையை எதிர்கொள்கிறார்கள் என்று ஐபிசி அறிக்கை கூறுகிறது.பசியும், பட்டினியும் வேகமாகப் பரவி வருகிறது, தற்போதைய நிலை தொடர்ந்தால் செப்டம்பரில் காஸாவின் பல பகுதிகளிலும் பஞ்சம் ஏற்படும் வாய்ப்பு அதிகம் எனவும் அது எச்சரிக்கிறது.இந்த அறிக்கை மூன்று முக்கிய காரணிகளை அடிப்படையாகக் கொண்டுள்ளது:குறைந்தது 5 வீடுகளில் 1 வீடு உணவுக்கே கடுமையான பற்றாக்குறையை எதிர்கொள்கிறது.

ஊட்டச்சத்து குறைபாடு: சுமார் 3 குழந்தைகளில் 1 அல்லது அதற்கு மேற்பட்டவர்கள் கடுமையான ஊட்டச்சத்து குறைபாட்டால் பாதிக்கப்பட்டுள்ளனர்.இறப்பு விகிதம்: ஒவ்வொரு 10,000 பேரில் குறைந்தது 2 பேர் தினமும் நேரடி பட்டினி அல்லது ஊட்டச்சத்து குறைபாடு மற்றும் நோயால் உயிரிழக்கின்றனர். பொதுவாக இந்த மூன்று "வரம்புகளில்" இரண்டு எட்டப்பட்டால் பஞ்சம் நிலவுகிறது என ஐபிசி அறிவிக்கிறது. ஆனால் காஸாவில் மூன்றும் எட்டப்பட்டுவிட்டதாக அது மதிப்பீடு செய்துள்ளது."இறப்புக்கான" காரணி தற்போதைய தரவுகளில் தெளிவாகத் தெரியவில்லை, ஏனெனில் கண்காணிப்பு அமைப்புகள் செயலிழந்துள்ளன.

பல மரணங்கள் பதிவு செய்யப்படாமல் போயிருக்கலாம் என்றும் ஐபிசி நம்புகிறது. இருந்தாலும் கிடைத்துள்ள சான்றுகள் மற்றும் நிபுணர்களின் மதிப்பீட்டை அடிப்படையாகக் கொண்டு “இறப்பு” காரணியும் பஞ்ச நிலையை உறுதிப்படுத்துவதாக ஐபிசி முடிவுக்கு வந்துள்ளது.இந்த அறிக்கை வெளியான சமயத்தில், ஹமாஸ் நிர்வகிக்கும் காஸா சுகாதார அமைச்சகம், ஊட்டச்சத்து குறைபாட்டால் மேலும் இரண்டு மரணங்களைப் பதிவு செய்தது.இதனால் மொத்த உயிரிழப்பு எண்ணிக்கை 112 குழந்தைகள் உட்பட 273 ஆக உயர்ந்துள்ளது.




இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு, காசாவில் பஞ்சம் நிலவுகிறது என்ற குற்றச்சாட்டை பலமுறை மறுத்துள்ளார். பசி ஏற்பட்டதற்கு உதவி அமைப்புகளும் ஹமாஸுமே தான் காரணம் என அவர் கூறியுள்ளார். காஸா எல்லையில் நூற்றுக்கணக்கான உதவி லாரிகள் நின்றுகொண்டிருக்க, அவற்றை எடுத்துச் செல்ல ஐ.நா. போன்ற சர்வதேச அமைப்புகள் முன்வரவில்லை என இஸ்ரேல் குற்றம் சாட்டியுள்ளது.

‘முற்றிலும் மனிதனால் உருவாக்கப்பட்டது’

மொத்த மரண எண்ணிக்கை 112 குழந்தைகள் உட்பட 273 ஆக உயர்ந்துள்ளது.பல வாரங்களாக, வயிறு வீங்கியும் எலும்புகள் தெரியும் அளவுக்கும் பட்டினியால் வாடும் குழந்தைகளின் படங்களை உலகம் பார்த்துக்கொண்டிருக்கிறது. இதனால் பஞ்சம் வரும் எச்சரிக்கை அறிகுறிகள் நீண்ட நாட்களாகவே இருந்தன என பலர் கூறுகின்றனர். கடந்த இரண்டரை ஆண்டுகளாக காஸாவில் நடந்துவரும் போர், பாலத்தீனர்களுக்கு உணவு கிடைப்பதை மிகவும் சிக்கலாக்கியுள்ளது. இஸ்ரேல் காஸாவிற்குள் செல்லும் பொருட்களுக்கு நீண்ட காலமாகவே கட்டுப்பாடுகளை விதித்திருந்தது. 2023 அக்டோபர் 7 அன்று ஹமாஸ் இஸ்ரேலில் நடத்திய கொடிய தாக்குதலுக்குப் பிறகு, அந்தக் கட்டுப்பாடுகள் மேலும் கடுமையானது.ஆனால் 2025ம் ஆண்டு மார்ச் மாதத்தில், இஸ்ரேல் காஸாவிற்குள் பொருட்கள் செல்லும் வழியை மூன்று மாதங்களுக்கு முற்றிலும் தடை செய்தபின் நிலைமை வேகமாக மோசமடைந்தது. சர்வதேச அழுத்தம் அதிகரித்த பின், மே மாத இறுதியில் சில பொருட்களை மீண்டும் அனுமதிக்கத் தொடங்கியது.அதே சமயம், ஐ.நா. தலைமையிலான பழைய உணவு விநியோக முறைக்குப் பதிலாக காஸா மனிதாபிமான அறக்கட்டளை (நிபிதி) என்ற அமெரிக்க அமைப்பு தலைமையிலான புதிய விநியோக முறை அறிமுகப்படுத்தப்பட்டது. இது பல சர்ச்சைகளையும் ஏற்படுத்தியது. காஸா மனிதாபிமான அறக்கட்டளையின் கீழ், ராணுவம் கண்காணிக்கும் பகுதிகளில் நான்கு விநியோக மையங்கள் மட்டுமே உள்ளன. அங்கு செல்ல பாலத்தீனர்கள் நீண்ட தூரம் நடக்க வேண்டியுள்ளது. அந்தப் பயணம் உயிருக்கு ஆபத்தானதாகவும் இருக்கிறது. இதனால், முன்பு ஐ.நா. இயக்கிய 400 சமூக மையங்கள் இப்போது நீக்கப்பட்டுள்ளன.

உணவைப் பெறுவது பாலத்தீனர்களுக்கு உயிருக்கு ஆபத்தான ஒன்றாகிவிட்டது.பட்டினி அல்லது மரணம் ஆகிய இரண்டிற்கும் இடையே ஒன்றைத் தேர்வு செய்ய வேண்டிய நிலை உள்ளது என அவர்கள் தொடர்ந்து கூறி வருகின்றனர். ஏனெனில், காஸா மனிதாபிமான அறக்கட்டளை மையங்களில் உதவி பெற முயற்சிக்கும் போது, மக்கள் சுட்டுக் கொல்லப்படும் சம்பவங்களும் நடக்கின்றன.மே மாத இறுதியில் இருந்து காஸா மனிதாபிமான அறக்கட்டளை மையங்களுக்கு அருகில் குறைந்தது 994 பாலத்தீனர்கள் கொல்லப்பட்டதாக ஐ.நா. பதிவு செய்துள்ளது. இஸ்ரேலிய படைகள் பெரும்பாலானோரைச் சுட்டுக் கொன்றதாக ஐ.நா. கூறுகிறது. இது நேரில் கண்ட சாட்சிகளாலும், காஸா மருத்துவர்களாலும் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. ஆனால் இஸ்ரேல் இந்த குற்றச்சாட்டுகளை மறுத்துள்ளது.இஸ்ரேல் கண்காணிக்கும் இந்த புதிய முறையின் கீழ், காஸாவில் பஞ்சம் மேலும் மோசமாக பரவியுள்ளது.

அதிக உணவுப் பொருட்களை அனுமதிக்க வேண்டும் என்று அழுத்தம் அதிகரித்ததால்,

ஜூலை மாத இறுதியில் தினமும் உதவிப் பொருட்கள் கொண்டு வந்த அதிகமான லாரிகளை இஸ்ரேல் காஸாவிற்குள் அனுமதிக்கத் தொடங்கியது. சண்டையை தற்காலிகமாக நிறுத்தும் "தந்திரோபாய இடைவெளிகளை" அறிவித்து, உதவி லாரிகள் அந்தப் பகுதியை எளிதாக கடக்க அனுமதித்தது.சமீப வாரங்களில்



அதிக உதவி பொருட்கள் வந்ததால், சந்தைகளில் சில பொருட்களின் விலை ஓரளவு குறைந்தது. இருந்தாலும் பல பாலத்தீனர்களுக்கு அவை இன்னும் மிக உயர்ந்த உயர்ந்தவையாகவே உள்ளன. சில சமயங்களில் ஒரு கிலோ மாவு 85 டாலரைத் தாண்டியது, ஆனால் அந்த விலை இப்போது குறையத் தொடங்கியுள்ளது.

இஸ்ரேல், காஸாவுக்குள் உணவுப் பொருட்கள் செல்ல சில கட்டுப்பாடுகளை தளர்த்தியிருந்தாலும், அவற்றை சேகரித்து விநியோகிப்பதில் இன்னும் பல தடைகள் உள்ளன என்று ஐ.நா.வும் மனிதாபிமான அமைப்புகளும் கூறுகின்றன. மக்கள் தங்கள் அடிப்படைத் தேவைகளை பூர்த்தி செய்ய தினமும் 600 லாரிகள் காஸாவிற்குள் நுழைய வேண்டும், ஆனால் தற்போது அதில் பாதிக்கும் குறைவானவை மட்டுமே அனுமதிக்கப்படுகின்றன. இஸ்ரேல் விமானம் மூலம் உதவிகளை வீச அனுமதிக்கத் தொடங்கியுள்ளது. ஆனால் பெரிதும் பலனளிக்காத, ஆபத்தான அந்த முறை, உண்மையான தீர்விலிருந்து கவனத்தை சிதறடிக்கிறது என மனிதாபிமான அமைப்புகள் விமர்சிக்கின்றன.அதேபோல, பசி நெருக்கடிக்கு ஹமாஸ் தான் காரணம் என இஸ்ரேல் கூறிய குற்றச்சாட்டும் விமர்சிக்கப்பட்டுள்ளது. அமெரிக்க அரசின் உள்துறை அறிக்கை உட்பட பல்வேறு ஆய்வுகள், ஹமாஸ் உதவிகளை திட்டமிட்டு திருப்பி அனுப்பியதாக எந்த ஆதாரமும் இல்லை என்று தெரிவித்துள்ளன.

காஸாவிற்குள் வரும் உதவி லாரிகள் சில நேரங்களில் கொள்ளையடிக்கப்படுவது உண்மைதான். ஆனால், இந்தக் கொள்ளைகள் பெரும்பாலும் உணவுக்காக தவிக்கும் பொதுமக்களாலும், பின்னர் லாபம் நோக்கி மறுவிற்பனை செய்ய முயலும் சில குழுக்களாலும் தான் நடைபெறுகின்றன என மனிதாபிமான அமைப்புகள் கூறுகின்றன.காஸாவில் பசி மற்றும் பஞ்சம் அதிகரிக்காமல் இருக்க, சாலை வழியாக அதிக அளவிலான உதவிப் பொருட்கள் தொடர்ந்து நுழைய அனுமதிக்க வேண்டும் என்ற ஒரே கோரிக்கையைத் தான் பல மாதங்களாக, உதவி அமைப்புகள் முன்வைத்து வருகின்றன. ஆனால் இஸ்ரேல் இன்னும் அதற்கு பல்வேறு கட்டுப்பாடுகளை விதித்து வருகிறது.

தற்போது பல இஸ்ரேல் அரச அதிகாரிகள் ஒருங்கிணைந்த உணவுப் பாதுகாப்பு கட்ட வகைப்பாடு (**IPC**) வெளியிட்ட அறிக்கையை நிராகரித்துள்ளனர்."ஹமாஸின் போலி பிரசாரத்திற்கு ஏற்றவாறு வடிவமைக்கப்பட்ட கற்பனையான அறிக்கையை" ஐபிசி வெளியிட்டதாக இஸ்ரேலின் வெளியுறவு அமைச்சகம் குற்றம் சாட்டியுள்ளது.காஸா எல்லையை நிர்வகிக்கும் இஸ்ரேலிய ராணுவ அமைப்பான 'கோகாட்', இந்த அறிக்கையை "ஹமாஸ் பயங்கரவாத அமைப்பிலிருந்து வந்த பாதி தரவுகளின் அடிப்படையில் உருவான, தவறான மற்றும் ஒரு பக்க சார்புடைய அறிக்கை" எனக் கூறியுள்ளது. "ஐபிசி தன் சொந்த உலகளாவிய தரநிலையை மாற்றியுள்ளது எனவும், பஞ்சத்தை எதிர்கொள்பவர்களின் அளவை 30% இலிருந்து 15% ஆக குறைத்துள்ளது எனவும், இறப்பு விகிதம் என்ற இரண்டாவது அளவுகோலை முற்றிலுமாக புறக்கணித்துள்ளது" என்றும் இஸ்ரேல் கூறுகிறது.ஐபிசி இந்த குற்றச்சாட்டுகளை மறுத்து, முன்னர் பயன்படுத்தப்பட்ட, நிலையான தரநிலைகளையே இப்போது பயன்படுத்துகிறோம் என விளக்கியது.ஐபிசி "ஹமாஸின் தரவை" பயன்படுத்தியதாக இஸ்ரேல் குற்றம் சாட்டுவது, காஸாவில் ஊட்டச்சத்து குறைபாடு பற்றிய சில செய்திகள் ஹமாஸால் நடத்தப்படும் சுகாதார அமைச்சகத்திலிருந்து வருவதைக் குறிக்கிறது. ஆனால், போர் முழுவதும் அந்த அமைச்சகத்தின் இறப்பு மற்றும் காயம் தொடர்பான தரவுகள் நம்பகமானதாக இருப்பதாக பல தரப்புகளும்



கருதுகின்றன.இந்த அறிக்கைக்கு ஐ.நா. நிறுவனங்களும் சர்வதேச தலைவர்களும் வலுவான பதில்களை அளித்துள்ளனர்.

"ஆக்கிரமிப்பு சக்தியாக இருக்கும் இஸ்ரேல், சர்வதேச சட்டத்தின் கீழ் தெளிவான பொறுப்புகளை வகிக்கிறது. அதில் மக்களுக்கு உணவு மற்றும் மருத்துவப் பொருட்களை வழங்கும் கடமையும் அடங்கும். இந்த நிலைமை தண்டனையின்றி தொடர்வதை நாம் அனுமதிக்க முடியாது"என ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் செயலாளர் ஆன்டனியோ குட்டெரெஸ் கூறினார்.காஸாவிற்குள் உதவிகள் நுழைவதை இஸ்ரேல் "திட்டமிட்டு தடுத்ததே, பஞ்சத்தின் நேரடி காரணம் என்று ஐ.நா.வின் மனிதாபிமானத் தலைவர் டாம் பிளெட்சர் குறிப்பிட்டார்."காஸாவிற்கு தேவையான அளவு உதவியை அனுமதிக்க இஸ்ரேல் அரசு மறுத்ததே, இந்த மனிதனால் உண்டாக்கப்பட்ட பேரழிவுக்குக் காரணம். இது ஒரு தார்மீக விதிமீறல்" என பிரிட்டனின் வெளியுறவு செயலாளர் டேவிட் லாமி தெரிவித்தார்."பசியை போரில் ஓர் ஆயுதமாகப் பயன்படுத்துவது ஒரு போர்க்குற்றம். அதன் விளைவாக நிகழும் மரணங்கள் கூட, திட்டமிட்ட கொலை என்ற போர்க்குற்றத்தின் கீழ் வரக்கூடும்"என வெள்ளிக்கிழமை, ஐ.நா. மனித உரிமைகள் தலைவர் வோல்கர் டர்க் குறிப்பிட்டார்.

ஐபிசி பஞ்சம் நிலவுகிறது என அறிவித்துள்ள காஸா நகரத்தின் மீது சர்ச்சைக்குரிய படையெடுப்பும் ஆக்கிரமிப்பும் நடத்துவதற்காக, இந்த வாரம் பத்தாயிரக்கணக்கான ரிசர்வ் படையினரை வரவழைப்பதற்கு இஸ்ரேல் அனுமதி வழங்கியுள்ளது.ஹமாஸை தோற்கடிக்கவும், போரை முடிவுக்கு கொண்டு வரவும், காஸாவில் உள்ள இஸ்ரேலிய பணயக்கைதிகளை மீட்கவும், காஸா நகரத்தை கைப்பற்றுவது தான் சிறந்த வழி என்று நெதன்யாகு கூறுகிறார். இந்த படையெடுப்பால், காஸா நகரம் மற்றும் அதைச் சுற்றியுள்ள பகுதிகளில் வசிக்கும் சுமார் 10 லட்சம் பாலத்தீனர்கள் வலுக்கட்டாயமாக இடம்பெயர வேண்டிய நிலை ஏற்படும்.அந்தப் பகுதியை காலி செய்யத் தேவையான திட்டங்களை தயாரிக்குமாறு, மருத்துவர்கள் மற்றும் உதவி அமைப்புகளுக்கு, இஸ்ரேல் ஏற்கனவே அறிவுறுத்தியுள்ளது.யுனிசெஃப், உலக உணவுத் திட்டம், உலக சுகாதார அமைப்பு உள்ளிட்ட ஐ.நா. அமைப்புகள் ஒன்றாக வெளியிட்ட அறிக்கையில், "இந்த தாக்குதல், ஏற்கனவே பஞ்சம் பாதித்துள்ள பொதுமக்களுக்கு மேலும் பேரழிவை ஏற்படுத்தும்" எனக் கூறப்பட்டுள்ளது."நோய்வாய்ப்பட்ட குழந்தைகள், ஊட்டச்சத்து குறைபாடுள்ளவர்கள், வயதானவர்கள் மற்றும் உடல் குறைபாடுகள் உள்ளவர்கள் போன்ற பலரும் வெளியேற முடியாமல் சிக்கிக்கொள்ளும் அபாயம் உள்ளது" என்றும் எச்சரிக்கப்பட்டுள்ளது.

2004—இல் ஐபிசி தொடங்கப்பட்டதிலிருந்து, நான்கு பஞ்சங்கள் மட்டுமே அறிவிக்கப்பட்டுள்ளன. கடைசியாக, அந்த அமைப்பு சூடானில் கடந்த ஆண்டு பஞ்ச நிலை அறிவித்தது. தற்போது காஸா சிட்டி மற்றும் அதைச் சுற்றியுள்ள பகுதிகளில் 5 லட்சம் முதல் 8 லட்சம் வரையிலானவர்கள் வசிக்கும் பகுதிகளில் பஞ்சம் உறுதி செய்யப்பட்டுள்ளது. இது தவிர, டேய்ர் அல்—பாலா, கான் யூனிஸ் நகரங்களில் விரைவில் பஞ்சம் ஏற்பட வாய்ப்புள்ளதாக ஐபிசி அறிக்கையில் எச்சரிக்கப்பட்டுள்ளது.இந்த அறிவிப்பைத் தொடர்ந்து, 22 மாதங்களாக நீடிக்கும் போரில் உணவு மற்றும் உதவிப் பொருள்களுக்கு இஸ்ரேல் விதித்துள்ள கடுமையான விநியோகக் கட்டுப்பாடுகளைத் தளர்த்த வேண்டும் என்று அந்த நாட்டுக்கான சர்வதேச நெருக்கடியை அதிகரிக்கும் என்று கூறப்படுகிறது. அதை உறுதி செய்யும் வகையில், 'காஸா சிட்டியில் பஞ்சம் உறுதியாகியிருப்பது மனிதாபிமானத்துக்கே அவமானம். இஸ்ரேல் அரசு போதுமான உதவிகளை அனுமதிக்காததால்தான் இந்தப் பேரழிவு நிலை ஏற்பட்டுள்ளது' என்று பிரிட்டன் வெளியுறவு அமைச்சர் டேவிட் லாமி சாடியுள்ளார்.

கட்டுரை




## சோழர் ஆட்சி பொற்காலமா?

“என் நாட்டு மக்கள் இதைப் பார்த்தால் பரவசமடைவார்கள்; இதை விவரிக்க அவர்களால் முடியாது. பின் எப்படி இது போன்றதைக் கட்டமைக்க அவர்களால் சிந்திக்க முடியும்“

கங்கை கொண்ட சோழபுரத்தில் முதலாம் ராஜேந்திரனால் கட்டடப்பட்ட பதினாறு மைல் நீளம், நான்கு மைல் அகலம் கொண்ட “சோழ கங்கம்“ ஏரியைக் கண்டு மனித நாகரிகத்தில் மிகவும் முன்னேறியிருந்த அரபு நாட்டிலிருந்து 11ஆம் நூற்றாண்டில் இந்தியா வந்திருந்த அறிஞர் அல்பெருனி வியந்து கூறிய வார்த்தைகள் இவை.



நீர்ப்பாசன நிர்வாகம்

வரலாற்றில் எத்தனையோ பேரரசுகள் தோன்றி வீழ்ந்திருக்கின்றன. ஆனால் ஒரு சில பேரரசுகள் மட்டும் சிறப்புமிக்க சில சாதனைகளுக்காக மக்களின் மனதில் நீங்கா நினைவில் வாழ்கின்றன. அத்தகைய வரிசையில் சோழப் பேரரசு நீர்ப்பாசன வேளாண்மைக்காகவும், உள்ளாட்சி நிர்வாகத்திற்காகவும் இன்றும் வரலாற்றில் சிறப்புமிக்க இடத்தை வகிக்கிறது. ரிகாலன் பாரம்பரியத்தில் வந்த சோழ மன்னர்கள் குளங்கள், ஏரிகளை வெட்டி மழை நீர், ஆற்று நீர் ஆகியவற்றைச் சேகரித்து வேளாண்மையைப் பெருக்கினர். அவற்றில் சிறப்புமிக்கவை சோழ கங்கம், மற்றொன்று வீராணம்.

நிலங்களை வகைப்படுத்துதல் முறை

பராந்தகனின் கல்வெட்டுகள் ஒன்றில் ஆறு வகை நிலங்கள் குறிப்பிடப்பட்டன. அனைத்து நெல் வயல்களும் நீர்—நிலம் (நன்செய்) என வகைப்படுத்தப்பட்டன. வறண்ட நிலம் புன்செய் என்று குறிப்பிடப்பட்டது. இவை நெல் அல்லாமல் இதர தானியங்கள் விளைந்த நிலங்களாகும். மூன்றாவது வகை தோட்ட நிலமாகும். ஆங்கிலேயர்கள் இம்மூன்று வகைகளை ஏற்றனர். நான்காவது வகை களர்—நிலம் (உப்பு நிலம்) ஆகும்.



கா.அ. மணிக்குமார்

பதினொன்றாம் நூற்றாண்டின் ஒரு கல்வெட்டு, கால்நடைகளைப் பார்ப்பதற்கான நிலங்கள் என்று அழைக்கப்படும் மற்றொரு வகையைக் குறிப்பிடுகிறது. இதை ஆங்கிலேயர் மேய்ச்சல் என்று தங்கள் ஆவணங்களில் பதிவு செய்தனர். தமிழர்களால் அங்கீகரிக்கப்பட்ட ஆறாவது வகை நிலம் தரிசு; இதை ஆங்கிலேயர்கள் தங்கள் பதிவுகளில் “பஞ்சார்” என்று குறிப்பிட்டனர்.

நிலஉடைமை முறைகளும், வாரியங்களும்

காடுகளை அகற்றுதல், நீர்ப்பாசனக் குளங்கள், கால்வாய்கள் வெட்டுதல் போன்றவற்றுக்கு கூட்டு முயற்சி தேவைப்பட்டது, கல்வெட்டுகளில் காணப்படும் சபா—மஞ்சிகம், ஊர்—மஞ்சிகம், மற்றும் ஊர்ப்பொது ஆகிய சொற்கள் சோழர் காலத்திய நிலத்தில் கூட்டுடைமை உரிமையைச் சுட்டிக்காட்டுகின்றன.பிரம்மதேயம், தேவதானம், ஆங்கிலேயரது இரயத்வாரி நிலங்களைப் போன்ற வேளாண் வகை, போர்க்காலங்களில் மன்னரின் இராணுவ சேவைக்குத் தயாராக இருக்கும் குறிப்பிட்ட எண்ணிக்கையிலான வீரர்களைப் பராமரிப்பதற்காக நிலப்பிரபுகளுக்கு “படைபற்று” போன்ற நிலஉடைமைகள் உருவாக்கப்பட்டிருந்தன.

பிரம்மதேயம், தேவதானம் அரசுக்கும் விவசாயிக்கும் இடையில் ஒரு இடைநிலையை உருவாக்க வழிவகுத்தது. பிரம்மதேயத்தில், பொதுவாக, ஒரு பிரம்மதேய நிலம் பல பங்குதாரர்களால் பகிர்ந்து கொள்ளப்பட்டது. ஆனால் ஏகபோக பிரம்மதேயம் ஒரு தனிநபருக்கு மட்டுமே உரிமை உடையதாக இருந்தது. “குடிநீக்கா” அல்லது “குடிநீக்கி” என இரு வகையான கிராமங்கள் பிராமணர்களுக்கு வழங்கப்பட்டிருந்தன. “குடிநீக்கி” கிராமங்களில் பிராமண நிலஉரிமையாளர்கள், குத்தகைதாரர்களையும் விவசாய தொழிலாளர்களையும் வெளியியிருந்து அழைத்து வர வேண்டியிருந்தது. கோயில்களால் நிர்வகிக்கப்பட்ட தேவதான நிலங்கள் கிராம சபை மற்றும் அரசு மேற்பார்வையில் இருந்தன.

தரிசு நிலங்களும், வன நிலங்களும் பெயரளவு வருடாந்திர வாடகைக்கு கோயில்களுக்கு



வழங்கப்பட்டன. கோயில்கள் இந்த நிலங்களை குத்தகைக்கு விட்டு சாகுபடி செய்தன. நிலத்தை உழுதல், சமன் செய்தல், நீர்ப்பாசனம் வழங்குதல் ஆகியவை குத்தகை நிபந்தனைகளாக இருந்தன. பொதுவாக, கோயில் நிலங்களை பயிரிட்டவர்கள் வழங்க வேண்டிய சேவைகள் கோயில்களில் அமைப்புகளாகும். ஊர் என்பது பிரம்மதேயமல்லாத கிராமம். சில கல்வெட்டுகளில் காணப்படும் 'ஊர் உழுதுகொண்டு' என்ற சொற்றொடர், நிலம் ஊர் மக்களால் பயிரிடப்பட்டதைக் குறிக்கிறது. நொபுரு காராஷிமா ஆய்வு செய்த சோழமண்டலத்தில் உள்ள அல்லூரில், ஊர்ப் பொது நிலம் அங்கு



விளக்குகளுக்கு எண்ணெய் வழங்குதல், வழிபாடு நடத்துதல் மற்றும் கோயிலைக் கண்காணித்தல் போன்ற வடிவங்களில் இருந்தன. மன்னரின் முன் அனுமதி இல்லாமல் கோயில் நில குத்தகைதாரர்களை அகற்ற முடியாது.

உள்ளாட்சி நிர்வாகம்

பல சோழர் கால மகாசபை கல்வெட்டுகள் சாகுபடியின் பல்வேறு அம்சங்களை மேற்பார்வையிடும் கிராம சபையின் குழுக்களைப் பற்றி குறிப்பிடுகின்றன. இரண்டு முக்கியமான குழுக்கள் ஏரி வாரியம், தோட்ட வாரியம். பயிரிடப்பட்ட நிலங்களின் பொது மேற்பார்வைக்கு கழனி—வாரியம், மதகுகளைப் பராமரிக்க கலிங்கு—வாரியம், மற்றும் சாகுபடி வயல்களைச் சுற்றியுள்ள பாதைகள் மற்றும். சாலைகளை பராமரிக்க தடிவழி—வாரியம் அமைக்கப்பட்டிருந்தது. எந்தெந்த ஊர்களின் வழியாக பெருவழிகள் சென்றனவோ அந்தந்த ஊர்களில் வணிகர்களிடமிருந்து தடிவழி வாரியம் மூலம் பராமரிப்பு வரிகள் பெறப்பட்டன. ஊர், நாடு, நகரம், பிரம்மதேயம் (பிராமணர் குடியிருப்புகள்) ஆகியவை சோழர்களின் நிர்வாக

குடியிருந்தவர்களால் பயிரிடப்பட்டது. அதே நேரத்தில் கோயில், அர்ச்சகர்கள் மற்றும் நடனக் கலைஞர்களுக்குச் சொந்தமான மற்ற நிலங்கள் உள்ளூர் மக்களைத் தவிர "புறக்குடி" என அழைக்கப்பட்ட வெளியூர் மக்களால் பயிரிடப்பட்டன. இவர்கள் நிரந்தர குத்தகைதாரர் அந்தஸ்து அல்லாதவர்கள் ஆவர்.

'நாடு' என்பது பல சிற்றூர்கள் சேர்ந்த விவசாயப் பகுதிகள். வேளாண் சமூகக் கட்டமைப்பின் ஒரு சிறிய வடிவம். ஒவ்வொன்றும் திருமணம் மற்றும் இரத்த உறவால் பிணைக்கப்பட்ட விவசாயிகளின் குடும்பங்களைக் கொண்டிருந்தது. ஏராளமான கல்வெட்டுகளில் குறிப்பிடப்பட்டுள்ள 'நாட்டார்' அப்பகுதியில் மன்னரிடமிருந்து நில உரிமை சாசனத்தைப் பெற்று ஆதிக்கம் செலுத்தியவர்கள்; தங்களுக்குரிய பகுதியில் நிலங்களை வகைப்படுத்தி பதிவு செய்தனர். நீர்ப்பாசனக் குளங்களைச் சார்ந்திருந்த நிலங்களின் முழு உற்பத்தித்திறனையும் உபயோகிக்க அவர்களுக்கு உரிமை இருந்தது. நாட்டார்களின் ஆதிக்கம், அவர்களின் பகுதியில் கொள்ளையர்களுக்கு எதிராக பாதுகாப்பை உறுதிப்படுத்தும் இராணுவத் திறனை அடிப்படையாகக் கொண்டது. சோழ அரசின்


VARSHA™
Ready to Cook
Made with Quality Natural Products
Idli / Dosa Wet Mix
இட்லி / தோசை மாவு
ఇడ్లీ దోస పిండి
ಇಡ್ಲಿ ದೋಸೆ ಹಿಟ್ಟು
ഇഡ്ഡലി / ദോശ മാവ്
CRISPY DOSA * SOFT & FLUFFY IDLI
100% Pure Vegetarian
ઈડલી ડોસા નું ખીરું
इडली/ दोसा आटा



சோழமண்டல கடலோரப் பகுதியில் வலதுகைப் பிரிவைச் சேர்ந்த வலங்கை வேலைக்கார வீரர்கள் அடங்கிய சிறந்த ஒழுங்கமைக்கப்பட்ட இராணுவ அமைப்பு அத்தகைய தோர் ஏற்பாட்டின் அங்கமாகும். வருவாய் கணக்கெடுப்பு மற்றும் தீர்வை நிர்ணயம் செய்தது நாடு—சேய் அல்லது நாடு—வகை—சேய் அதிகாரி ஆவார்.

தமிழகத்தை ஆண்ட சோழப்பேரரசு கடலாதிக்கம் செலுத்திய ஒரு ஏகாதிபத்திய பேரரசு. கே.ஏ. நீலகண்ட சாஸ்திரி இப்பேரரசை கிழக்கு ரோமப் பேரரசான பைசாண்டின் (கான்ஸ்டான்டிநோபிள்— இன்றைய இஸ்தான்புல்) பேரரசோடு ஒப்பிட்டார். சோழ நாடு ஒரு பேரரசாக உருவாவதில் முக்கிய பங்காற்றியவர்கள் இராஜராஜ சோழனும் இராஜேந்திர சோழனும் முக்கிய இடம் வகிக்கின்றனர்.

இராஜராஜ சோழன்

சோழ மன்னர்களில் ராஜராஜன் பதவியேற்கும் போது அரசியல் ரீதியாக சாதகமானதொரு சூழல் இருந்தது. வடக்கிலிருந்து பெரும் அச்சுறுத்தலாக இருந்த ராஷ்டிரகூடர்கள் சாளுக்கியர்களால் தோற்கடிக்கப்பட்டிருந்தனர். முதலாம் பராந்தகன் தெற்கே பாண்டிய நாட்டு கடைசி முக்கிய மன்னனான இரண்டாம் ராஜசிம்மனைத் தோற்கடித்து "மதுரை கொண்டான்" என்ற பட்டத்தையும் சூட்டிக்கொண்டிருந்தார். ராஜசிம்மன் இலங்கைக்குத் தப்பி ஓடி தனது கிரீடத்தையும் கழுத்தில் அணியும் பதக்கங்களையும் இலங்கை மன்னனிடம் கொடுத்துவிட்டு கேரளத்தில் தனது தாயின் ஊருக்குச் சென்று விட்டார். ஆட்சி பறிபோன பிறகு (920), கிட்டத்தட்ட மூன்று நூற்றாண்டுகள் கழித்தே (1216), மாறவர்மன் சுந்தர பாண்டியன் ஆட்சியை மீட்டு அரியணையில் அமர்ந்தார்.

இலங்கை மீதான படையெடுப்பு

சாளுக்கிய மன்னன் இரண்டாம் புலிகேசிக்கு எதிராக முதலாம் நரசிம்மனுக்கு இலங்கை அரசன் மானவம்மன் உதவியதாலும் பின்னர் மானவம்மன் ஆட்சியிலிருந்து அகற்றப்பட்ட போது நரசிம்மவர்மன் மானவம்மன் மீண்டும் அரியணையில் அமர உதவியதாலும் பல்லவர் காலத்தில் இலங்கையுடனான அரசியல் தொடர்பு நெருக்கமாக இருந்திருக்கிறது. பல்லவர் காலத்தில் மகாபலிபுரம் ஒரு முக்கிய துறைமுகமாக இருந்திருக்கிறது. அதன் மூலமாக ஏற்பட்ட சமூக—கலாசார பாதிப்புகள் இரு நாடுகளிலும் வெளிப்பட்டன. இலங்கையில் கோவில் கட்டடக்கலை, சிற்பங்கள் அனைத்திலும் பல்லவர் தாக்கத்தைப் பார்க்கமுடியும். ஆனால் சோழர் காலத்தில் அரசியல் சூழல் மாறியிருந்தது.

இராஜராஜன் தான் பதவிக்கு வந்தவுடன் இலங்கையின் மீது தாக்குதல் நடத்த பாண்டிய நாட்டின் மீதான ஆதிக்கம் அவசியம் என உணர்ந்தார். தன் இளம் வயதிலேயே மலபார் கடற்கரையில் சேர மன்னரைத் தோற்கடித்து சோழர்களின் கடற்படை வலிமையை வெளிப்படுத்தியிருந்தார். தனது ஆட்சி எல்லைக்கு மேற்குப் பகுதிகளில் இருந்த சேர மன்னரின் ஆட்சிக்கு உட்பட்டிருந்த பகுதிகளை சோழ



பேரரசுப்பகுதிகளோடு இணைத்தார். பாண்டியர் ஆட்சி முடிவடைந்திருந்தாலும் பாண்டிய இளவரசர்கள் இலங்கை அரசருடன் கூட்டு சேர்ந்து சோழ நாட்டுக்கு எதிராக தொடர்ந்து சதியில் ஈடுபட்டு வந்ததால் தனது ஆதிக்கத்தை அங்கு நிறுவிட எண்ணி இலங்கையின் மீது படையெடுத்தார். அங்கு ஐந்தாம் மகிந்தா பதவி



ஏற்ற சூழலில் அங்கு அவரது படைவீரர்களுக்குள் ஏற்பட்ட மோதலால் நிலவிய குழப்பத்தைப் பயன்படுத்தி இலங்கையில் தனது ஆதிக்கத்தை எளிதில் நிலைநாட்டினார். தலைநகர் அனுராதபுரம் தரைமட்டமாக்கப்பட்டது. பொலநருவா சோழர் தலைநகரானது. இராஜராஜன் காலத்திலேயே அங்கு ஒரு சிவன் கோயில் கட்டப்பட்டது. இராஜராஜன் ஏற்கனவே தான் சூட்டியிருந்த ஜெகநாதன் என்ற பெயரில் அந்நகருக்கு ஜெகநாதமங்களம் எனப் பெயரிட்டார். மற்றொரு சிவன் கோவில் அவரது அதிகாரி தளி குமரன் என்பவரால் கட்டப்பட்டு பேரரசரின் பெயரில் ராஜராஜேஸ்வரர் கோவில் என அழைக்கப்பட்டது. காட்டிற்குள் தப்பியோடிய இலங்கை அரசன் பிடிபட்டு சோழ மன்னர் சிறையில் தனது எஞ் சியிருந்த 12 ஆண்டு காலத்தை கழித்து உயிரிழந்தார்.

இராஜராஜன் தான் அரியணை ஏறிய பத்து ஆண்டுகளுக்குள் தனது ஆதிக்கத்தை முழுமையாக நிலைநாட்டி, நிலையானதோர் ஆட்சியை அமைத்தார். ராஜராஜனின் இறுதிக்காலம் தென் தக்காணத்தில் பல்லவர்கள் ஆதிக்கம் செலுத்திய பகுதிகளை ஆக்கிரமித்து ஆட்சி செய்துகொண்டிருந்த சாளுக்கியர்களுடன் போர் புரிவதில் கழிந்தது.

ராஜேந்திர சோழன்

1012இல் ஆட்சிப்பொறுப்பேற்ற ராஜேந்திர சோழன் சாளுக்கியர் அச்சுறுத்தலை முழுவதும் முறியடிக்கும் நோக்கில் சாளுக்கிய மன்னர் மூன்றாம் ஜெயசிம்மனை போரில் வென்றதோடு (1020), வடக்குநோக்கி மேலும் முன்னேறி ஒரிசா, கோசல நாட்டு மன்னர்களையும் வென்றார். வட இந்தியாவில் அப்போது நிலவிய அரசியல் சூழல் ராஜேந்திரனுக்கு மிகச் சாதகமாக இருந்தது. அதுவரை அப்பகுதிகளில் ஆதிக்கம் செலுத்திய பிரத்திகாரர், பாலர் பேரரசுகள் பலம் குன்றி நலிவடைந்திருந்தன. ஆதலால் கன்னோஜ் அரசன் கோவிந்த சந்திரா, வங்காளத்து மஹிபாலன் ஆகியோரையும் தோற்கடித்து அவரது படை கங்கைக்கரையை சென்றடைய முடிந்தது. இவ்வெற்றிகளின் நினைவாக பின்னர் கங்கைகொண்ட சோழன் என்ற பட்டத்தைச்சூடியதை நாம் அறிவோம். தான் அரியணை ஏறிய ஐந்தாம் ஆண்டில் மகிந்தாவின் ஆட்சியின் போதே ராஜேந்திர சோழன் இலங்கை மீது படையெடுத்து (1017) இலங்கையை வென்றார். ஏராளமான கொள்ளைப் பொருள்களுடன் சோழர் வெற்றிப்படை அங்கிருந்து திரும்பியது. பராந்தகனாலும் இராஜ ராஜ சோழனாலும் செய்ய முடியாத பாண்டிய மன்னரின் கிரீடம், பரம்பரை நகைகள், ஒடிக்க முடியாத வாள், விலைமதிக்க முடியாத வைரக்காப்பு, கற்களாலான பதக்கங்கள் அனைத்தையும் ராஜேந்திரன் மீட்டு வந்தார்.

இராஜேந்திரன் அனுப்பிய கப்பற்படை வங்கக்கடலைக் கடந்து ஸ்ரீ விஜயா பேரரசின் கீழ் இருந்த மலேயா தீபகற்பத்தில் கடாவை (காந்தாரம்) வென்று சோழராதிக்கத்தை நிலைநாட்டியது. கல்வெட்டுப் பதிவுகளின் படி ஸ்ரீவிஜயத்தைத் தாக்கிய பிறகு முதலாம் இராஜேந்திரன் சங்கிராம் விஜயதுங்கவர்மனை கைது செய்து ஸ்ரீவிஜயத்தின் ரத்தினக் கற்கள் பதிக்கப்பட்ட வித்யாதர தோரணம் உட்பட பல விலைமதிப்பற்ற பொருள்களைப் பறித்தார்.

இராஜராஜனும் இராஜேந்திரனும் அந்நிய நாட்டு எதிரிகளை முழுமையாக முறியடித்து உள்நாட்டில் அமைதியை ஏற்படுத்திய பின் தான் கோவில் கட்டுதல், புதிய தலைநகர் கட்டுவது, போன்ற பணிகளில் ஈடுபட்டனர். தஞ்சை பெரிய கோவில் (இராஜராஜேஸ்வரர் கோவில்) இராஜராஜனின் 20ஆம் ஆண்டு ஆட்சியின் போது, அதுவும் மகனிடம் ஆட்சிப்பொறுப்பைக் கொடுத்தபின் (1012) கட்டப்பட்டது.

(தொடரும்)



நிகழ்வு

# துணியாதா


## உரிமைப் போரில் நாடுகள்!

உலகம் எங்கும் ஆங்காங்கு பல நாடுகளில் போர் நடந்து கொண்டுதான் இருக்கிறது. போரின் இறுதியில் அமைதிப் பேச்சுவார்த்தையும் நடக்கிறது. அது முடிவுக்கு வராமல் தொடர்ந்து கொண்டுதான் இருக்கிறது. முடிவில்லாத இந்தப் போரும், பேச்சுவார்த்தையும் எங்கே போய் முடியுமோ என்ற கவலையும் மக்களுக்கு ஏற்பட்டு விட்டது. உலக வல்லரசான அமெரிக்காவும், ரஷியாவும் இந்தப் போர்களுக்குக் காரணமாக இருக்கின்றன. அவர்கள் தயாரித்து வைத்திருக்கும் ஆயுதங்களை விற்பனை செய்வதற்காகவே போர்களைத் தூண்டி விடுகின்றன. இப்போது போர்கள் எல்லாமே ஏவுகணைகளின் போர்களாகவே மாறி விட்டன.

கண்டம்விட்டுக் கண்டம் பாயும் ஏவுகணைகள் குறிப்பிட்ட இலக்கினைத் தாக்கி அழிக்கின்றன. பல காலமாகப் பாடுபட்டு எழுப்பப்பட்ட வானளாவிய கட்டடங்கள் இருந்த இடம் தெரியாமல் தகர்க்கப்பட்டு அழிக்கப்படுகின்றன. அழிப்பது எப்போதும் எளிய செயலாகும். அந்த நகரங்களைக் கட்டி எழுப்புவதற்கு எத்தனை காலமாகும் என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும்.இதற்குப் பின்னால் அணு ஆயுதங்கள் உள்ளன. அவற்றை எடுத்துக் காட்டியே அச்சுறுத்தல்கள் நிகழ்கின்றன. அண்டை நாடான பாகிஸ்தான் அணு ஆயுதம் வைத்திருக்கும் நாடாக இருக்கிறது. எந்த நேரத்தில் என்ன நடக்குமோ என்ற அச்சம் ஏற்பட்டுள்ளது. “குரங்கு கையில் கொள்ளியைக் கொடுத்த கதையே’ நினைவுக்கு வருகிறது.

இரண்டாம் உலகப் போரின் இறுதியில் ஜப்பான் சரண் அடைய மறுப்பதாகக் கூறி, நேச நாடுகள் சார்பில் இரண்டு அணுகுண்டுகள் அடுத்தடுத்துப் போடப்பட்டன. 1945—ஆம் ஆண்டு ஆகஸ்ட் 6 மற்றும் 9 ஆகிய தேதிகளில் ஹிரோஷிமா மற்றும் நாகசாகியில் வீசப்பட்ட கொடுமையை மறக்க முடியுமா? ஜப்பானில் ஹிரோஷிமா நகர் மீது அமெரிக்கா அணுகுண்டு தாக்குதல் நடத்தியதன் 80—ஆம் நினைவு தினம் அந்நகரில் கடந்த ஆகஸ்ட் 6—ஆம் தேதி கடைப்பிடிக்கப்பட்டது. 120 நாடுகளைச் சேர்ந்த பிரதிநிதிகள், அணுகுண்டு வீசப்பட்ட நேரமான காலை 8.15 மணிக்கு அதற்கான நினைவிடத்தில் மௌன அஞ்சலி செலுத்தினர். கடந்த 1945— ஆம் ஆண்டு ஆகஸ்ட் 6—ஆம் தேதி ஹிரோஷிமா நகரில் நடந்த முதல் தாக்குதலில் 1.4 லட்சம் பேர் உயிர் இழந்தனர். மூன்று நாள்களுக்குப் பிறகு, நாகசாகியில் நடத்தப்பட்ட இரண்டாவது வீச்சில் சுமார் 70,000 பேர் உயிர் இழந்தனர். பின்னர், ஆகஸ்ட் 14—இல் ஜப்பான் சரணடைந்து, இரண்டாம் உலகப் போர் முடிவுக்கு வந்தது.

இரண்டாம் உலகப் போர் 1939 செப்டம்பர் முதல் தொடங்கியதாகக் கூறப்படுகிறது. அன்றுதான் சர்வாதிகாரி ஹிட்லர் தலைமையிலான நாஜி படைகள் ஜெர்மனி,போலந்து மீது படையெடுத்தன. இதைத் தொடர்ந்து செப்டம்பர் 3—ஆம் தேதி ஜெர்மனி மீது ஐக்கிய இராஜ்ஜியம் மற்றும் பிரான்ஸ் போர்ப் பிரகடனம் செய்தன.1939 ஜூன் பிற்பகுதி முதல் 1941—ஆம் ஆண்டு ஆரம்பம் வரை ஒரு தொடர்ச்சியான படையெடுப்புகள் மற்றும்





# போர் மோகம்


ஒப்பந்தங்கள் மூலம் ஜெர்மனி பெரும்பாலான ஐரோப்பியக் கண்டப் பகுதிகளை வென்று, தங்கள் கட்டுப்பாட்டின் கீழே கொண்டு வந்தது. இத்தாலி மற்றும் ஜப்பானுடன் சேர்ந்து அச்சு நாடுகளின் கூட்டணியை உருவாக்கியது.

இதன் தொடர்ந்த வெற்றிக்குப் பிறகு ஜெர்மனியும், இத்தாலியும் வட ஆப்பிரிக்காவிலும், சோவியத் யூனியன் ஸ்டாலின் கிரேட் போரிலும் தோற்கடிக்கப்பட்டன. 1943—இல் அச்சு நாடுகள் குறிப்பிடத்தக்க பின்னடைவுகளைச் சந்தித்தன. அனைத்துப் போர் முனைகளிலும் நேச நாடுகள் வெற்றியலைகளைப் பதிவு செய்தன. ஜெர்மனி ஆக்கிரமித்திருந்த நிலப்பரப்புகள் விடுவிக்கப்பட்டன. மேற்கு நேச நாடுகள் மற்றும் சோவியத் யூனியன் ஜெர்மனி மீது படையெடுத்தது ஆகியவற்றுடன் இரண்டாம் உலகப் போர் முடிவுக்கு வந்தது. சோவியத் துருப்புகளிடம் ஜெர்மனி வீழ்ந்தது. 1945—ஆம் ஆண்டு மே 8—ஆம் தேதி ஜெர்மனி நிபந்தனையற்ற சரணடைவை ஏற்றது. ஹிட்லர் தற்கொலை செய்து கொண்டார். இந்த இரண்டாம் உலகப் போரில் அனைத்து உலக வல்லரசுகளும் பங்கெடுத்துக் கொண்டன.

**அ. சக்கரவர்த்தி**

அவை நேச நாடுகள் மற்றும் அச்சு நாடுகள் என்று இரண்டு எதிரெதிர் கூட்டணிகளைக் கொண்டிருந்தன. இதை ஓர் ஒட்டுமொத்தப் போர் என்று கூறலாம்.

இதில் 30—க்கும் மேற்பட்ட நாடுகளைச் சேர்ந்த 10 கோடிக்கும் மேற்பட்ட ராணுவ வீரர்கள் நேரடியாக பங்கேற்றனர். இப்போரில் பங்கேற்ற நாடுகள் தங்கள் ஒட்டுமொத்த பொருளாதார, தொழில் துறை, மற்றும் அறிவியல் செயலாற்றலைப் போர் வெற்றிக்குப் பயன்படுத்தின. இதுவரை அதிக உயிரிழப்பை ஏற்படுத்திய போராக இரண்டாம் உலகப் போர் திகழ்கிறது. இவ்வாறு போர்களால் ஏற்படும் துயரங்களையும், அணுகுண்டுகளால் ஜப்பானில் ஏற்பட்ட விளைவுகளையும் இரண்டாம் உலகப் போர் இன்னும் நினைவுபடுத்திக் கொண்டே இருக்கிறது. அதனால், உலக நாடுகள் அணுகுண்டு தயாரிப்பதை ஐ.நா.வும், வல்லரசு நாடுகளும் எதிர்த்து வருகின்றன. ஈரான் அணுகுண்டு தயாரிப்பதை எதிர்ப்பதற்கு இதுதான் காரணம்.




ஈரான் மீது மீண்டும் பொருளாதாரத் தடை விதிக்க பிரிட்டன், பிரான்ஸ், ஜெர்மனி ஆகிய நாடுகள் இப்போது எச்சரிக்கை செய்துள்ளன. கெடு தேதியான ஆகஸ்ட் இறுதிக்குள் மேற்கத்திய நாடுகளுடன் ஈரான் புதிய அணுசக்தி பேச்சுவார்த்தையைத் தொடங்கி ஐ.நா. அணுசக்தி கண்காணிப்பு அமைப்புடன் ஒத்துழைப்பு மேற்கொள்ளாவிட்டால் அந்த நாட்டின் மீது மீண்டும் பொருளாதாரத் தடைகள் விதிக்கப்படும்





என்று பிரிட்டன், பிரான்ஸ், ஜெர்மனி ஆகிய நாடுகளின் வெளியுறவு அமைச்சர்கள் எச்சரித்துள்ளனர்.

இ3 நாடுகளின் (பிரிட்டன், பிரான்ஸ், ஜெர்மனி) பிரதிநிதிகள் இஸ்தான்புல் நகரில் உள்ள ஈரான் துணைத் தூதரகக் கட்டடத்தில் ஈரானின் அணுசக்தித் திட்டம் தொடர்பான பிரச்னைகளைத் தீர்ப்பதற்கான பேச்சுவார்த்தையில் கடந்த மாதம் ஈடுபட்டனர். இஸ்ரேல்—ஈரானுக்கு இடையே 12 நாள்கள் நடைபெற்ற போருக்குப் பிறகும், ஈரான் அணுசக்தி மையங்களை அமெரிக்க விமானங்கள் தாக்கியதற்குப் பிறகும் நடைபெற்ற முதல் அணுசக்தி பேச்சுவார்த்தை இது.அப்போது, ஈரானின் அணுசக்தித் திட்டத்தைக் கட்டுப்படுத்துவதற்கு ஆகஸ்ட் இறுதிக்குள் முன்னேற்றம் ஏற்பட வேண்டும் என்று கெடு விதிக்கப்பட்டது. இந்த நிலையில், கெடு தேதிக்குள் நிபந்தனைகளை நிறைவேற்றா விட்டால் 2015 முதல் நிறுத்தி வைக்கப்பட்டுள்ள பொருளாதாரத் தடைகளை ஈரான் மீது மீண்டும் விதிக்கப் போவதாக பிரிட்டன், பிரான்ஸ், ஜெர்மனி எச்சரிக்கை செய்துள்ளன.

1974—ஆம் ஆண்டு மே 18—ஆம் தேதி இந்தியா, பொக்ரானில் முதல் அணுகுண்டு சோதனையை வெற்றிகரமாக நடத்தியது. இந்த அணுகுண்டு சோதனைக்கு “சிரிக்கும் புத்தர்’ என்று பெயர் சூட்டியிருந்தனர். அணுகுண்டு வெடித்த மே 18 புத்தர் பிறந்த நாளாகும். அதனால், அந்தப் பெயர் சூட்டப்பட்டது. அன்பின் வடிவமான புத்தர் பெயரை ஓர் அணுகுண்டு பரிசோதனைக்கு வைத்திருக்கவேண்டுமா? ஆக்கப்பூர்வ பணிகளுக்கே

இந்த “சிரிக்கும் புத்தர்’ அணுகுண்டு சோதனை நடத்தப்பட்டதாக அப்போது சொல்லப்பட்டது. எனவே, அணுசக்தியை ஆக்கப் பணிகளுக்கே பயன்படுத்துவோம்; அழிவுக்கும், அச்சுறுத்தலுக்கும் வேண்டாம் என்பதே உலக மக்களின் ஒருமித்த வேண்டுகோள்.

உலக நாடுகளிடையே நடைபெறும் போர்களில் பல நாடுகள் அவ்விரு நாடுகளுக்கு இடையே சமரசம் செய்து வைக்க முயற்சிக்கின்றன. ஆனால், அதிலும்கூட தங்களுக்கு என்ன ஆதாயம் என்பதை முன்னிறுத்திய குறுகியப் பார்வைத் தெரிகிறது. நம் இந்திய ராணுவம் நடத்திய




ஆபரேஷன் சிந்தூருக்குப் பிறகு இந்தியா—பாகிஸ்தான் இடையே போர் ஏற்படும் அபாயம் ஏற்பட்டது.

வடக்கே எங்கோ ஒரு மூலையில் நடைபெற்ற தாக்குதலாக இருந்தாலும், ஒவ்வொரு குடிமகனுக்குள்ளும் அந்த அழுத்தம் தென்பட்டது. நல்ல வேலையாக சில நாட்களிலேயே போர் முடிவுக்கு வந்து விட்டது. அட! அதற்குள் முடிந்து விட்டதே! இன்னும் கொஞ்ச நாள்கள் நீடித்திருந்தால், அந்த நாட்டுக்கு தக்க பாடம் புகட்டி இருக்கலாம் என பலரும் வெளிப்படையாகவே சமூக வலைதளங்களில் பகிர்ந்தனர். அதனால் ஏற்படும் எண்ணற்ற அபாயங்களை பற்றி ஏனோ அவர்கள் சிந்திக்கவில்லை. முன்னெப்போதும் இல்லாத அளவில், பயணங்கள் தற்போது பெருகியிருக்கின்றன. ஊர் விட்டு ஊர் சென்று பணிபுரிந்த காலங்கள் போய் நாடு விட்டு நாடு, கண்டம் விட்டு கண்டம் பறந்தெல்லாம் பணி செய்கின்றனர். கல்வி, பணி, சுற்றுலா, கூடுகை, கருத்தரங்கு போன்ற பலகட்ட வேலைகளுக்காக பயணம் என்பது தொடர்ந்து கொண்டே இருக்கிறது.




நாடுகளிடையே போர் என்பது அந்த இரு நாடுகளை மட்டும் பாதிப்பதில்லை. பல நாடுகளைச் சேர்ந்த மக்களையும் பாதிக்கிறது. அந்த நாட்டின் வான் போக்குவரத்து வரை எல்லாம் கேள்விக்குறியாக நிற்கிறது. வடகிழக்கு நாடுகளிடையே நிலவும் போர்ப் பதற்றங்களால் உலகம் முழுவதும் கச்சா எண்ணெய் கிடைப்பதில் தொடங்கி அதன் விலையேற்றம் வரை பல்வேறு பிரச்சனைகள் எதிரொலிக்கின்றன. அதியமானுக்கும், தொண்டைமானுக்கும் இடையே சங்க காலத்தில் நடைபெற இருந்த போரை ஒஜவையார் தூது சென்று சாதுரியமாக தவிர்த்தார் என்று படித்திருக்கிறோம். ஒரே ஒரு புகைப்படம் ஒரு போரை நிறுத்தி இருக்கிறது என்பதையும் சென்ற நூற்றாண்டில் நாம் வரலாறு மூலம் தெரிந்து வைத்திருக்கிறோம்.

1972 —இல் தெற்கு வியத்நாம் போட்ட நாபாம் குண்டால் தாக்குதலுக்கு உள்ளான சிறுமி ஓடிவரும் படம் உலக நாடுகள் மொத்தத்தையும் அப்போது அசைத்துப் பார்த்தது. உடல் முழுவதும் ஆங்காங்கே தீக்காயங்களுடன் தனது இரண்டு கைகளையும் நீட்டிக்கொண்டு முகம் முழுவதும் பீதியுடன் செய்வதறியாது நிர்வாணமாக ஒரு சிறுமி ஓடி வரும் அந்தப் படம், பார்ப்பவர்கள் அனைவரையும் கதி கலங்கச் செய்தது.சுமார் 19 ஆண்டுகளாக நடந்து கொண்டிருந்த வியத்நாம் உள்நாட்டுப் போர் முடிவுக்கு வர இந்தப் படம் மிகப் பெரிய காரணமாக அமைந்தது. உலக நாடுகளின் கடுமையான கண்டனத்தினாலும் உள்நாட்டு மக்களின் எதிர்ப்பினாலும் 1973—ஆம் ஆண்டு மார்ச் 29—ஆம் தேதி அமெரிக்க ராணுவம் வியத்நாமை விட்டு வெளியேறியது. ஒரு ஒற்றை புகைப்படம் ஏற்படுத்திய மிகப் பெரிய மாற்றம் இது. ஆனால், இன்று குடிமக்களின் நிலையிலிருந்து பார்க்கும் பார்வை சில தலைவர்களிடம் இல்லையோ என்று தோன்றுகிறது.

கலிங்கத்துப்பரணியில் கலிங்க மன்னன் அனந்தவர்மன், சோழப் படையிடம் தோற்றான். இந்தப் போரில் ஆயிரம் யானைகள் கொல்லப்பட்டன என்ற செய்தி விவரிக்கப்பட்டுள்ளது. அன்றைய காலகட்டத்தில் யானைகளைக் கொல்வது மன்னர்களின் வீரமாக கருதப்பட்டது. ஆனால், இன்று மக்களை இப்படி கொத்துக் கொத்தாக கொன்றுக் குவிப்பதை ஏற்கவே முடியவில்லை. எந்த ஓர் இனமும் தனது இனத்தை தானே இப்படி அழிப்பதில்லை; ஆனால், மனிதன் இதற்கு விதிவிலக்காக இருக்கிறான்.

‘ஒருவனை ஒருவன் அடுதலும் தொலைதலும் / புதுவது அன்று இவ்வுலகத்து இயற்கை’ என்கிறது புறநானூற்றுப் பாடல். அதாவது, உலகில் இயற்கையாகவே ஒருவனோடு ஒருவன் போரிடுவதும் ஒருவனை ஒருவன் கொல்லுதலும் நடைபெற்று வருகிறது என்று புறநானூறு விவரித்துள்ளது. ஆங்கில இலக்கியத்தில் ஆரோன் ஷெப்பர்ட் எழுதிய “தி கிறிஸ்துமஸ் ட்ரூஸ்’ எனும் சிறுகதை. இரண்டாம் உலகப் போர் சமயத்தில் எதிரணியாக இருந்த ஆங்கிலேய மற்றும் ஜெர்மானிய வீரர்கள் எதிர் எதிராக நின்று போர் புரிந்து கொண்டிருந்தார்கள். மறுநாள் கிறிஸ்துமஸ் பண்டிகை; அந்த நிலையில் ஆங்கிலேய மற்றும் ஜெர்மானிய வீரர்கள் தங்கள் பகைமையை மறந்து, அந்த ஒரு நாள் கிறிஸ்துமஸ் பண்டிகையை எவ்வாறு கொண்டாடினார் என்பதுதான் கதை.

பதுங்குக் குழிக்குள் இருக்கும் இரு அணியினரும் கிறிஸ்துமஸ் அன்று மட்டும் ஒரு நாள் போர் நிறுத்தத்தை மேற்கொண்டு ஒன்றாக ஆடிப் பாடி, கொண்டாடிய பிறகு, மீண்டும் நாளை போர்க்களத்தில் சந்திப்போம் எனப் பிரிந்து அவரவர் இடம் சேர்கின்றனர். நம் தலைவர்கள் எச்சரிக்கைகள் கொடுக்கும் இடங்களில் நல்வாழ்த்துகளைப் பகிர்ந்து கொண்டால் என்ன? பழிக்குப் பழி என்பதற்குப் பதிலாக வெகுமதிகள் வழங்கினால் என்ன? அத்தனை போர்களும் முடிவுக்கு வந்து விடாதா? போன்ற கேள்விகளுடன் அக்கதை முடியும். ஒரு ஆங்கிலேய வீரர் அவனது சகோதரிக்கு எழுதிய கடிதமாக இந்தக் கதை முடிவுறும்.

ஒவ்வொரு நாடும் சிந்தித்துப் பார்க்க வேண்டிய நேரமிது.




## 9 அனைத்துக்கும் இறைவனே பொறுப்பு!

**கொற்றவன்**

கடற்கரை மணல்வெளியை ஒட்டிய அலையாத்திப் புதர்களுக்குள், வளவத்திரையனும் தாலியாவும் வேகமாக ஓடிச் சென்றதோடல்லாமல், மேலும் சற்று உள்நோக்கி அடர்வனத்துக்குள் ஓடி மறைந்த இடம், புதர்களுக்கு நடுவே வெண்பட்டு மஞ்சம் விரித்தது போன்றிருந்த மணற்த்திட்டு.

அந்தத் திட்டைச் சுற்றிலும் சூழ்ந்திருந்த பெரும் புதர்கள், கடற் பரப்பிலிருந்து பார்த்தால் தெரியாதபடி அவர்களை முற்றாக மறைத்திருந்தது.

அங்கே இப்படியொரு மணற்த்திட்டு இருப்பது தாலியாவுக்குள் வியப்பைக் கிளப்பியது.

‘வெண்பட்டு மஞ்சம்போல் இருக்கின்ற இவ்விடம், இயற்கையிலேயே உண்டானதா அல்லது காதலர்கள் யாரேனும் தங்களது வசதிக்காக செய்து கொண்டிருக்கும் இடமோ?’ என்று கூட அவளுக்குள் என்ன தோன்றியது.

இக்கணத்தில் தன் மனம் காதல் உணர்ச்சியில் ததும்பிக் கொண்டிருப்பதால், அவ்வாறு எண்ணத் தோன்றுகிறதோ? எப்படியிருப்பினும் இன்றைய நாள் தன் வாழ்நாளில் மறக்க முடியாத இனியதொரு பொன்னாள்! இன்னும் என்னென்ன இங்கு நடக்கப் போகிறதோ? எனவும் எண்ணம் ஓடியதில், அவளது செவ்வரி இதழ்களில் குறுநகை படர்ந்தது.

விடிந்ததிலிருந்து இங்கு நடப்பது எல்லாமே புதிதாகவும் புதிராகவும் இருக்கிறதே என்ற எண்ணம் வளவத்திரையனின் மனத்திலும் தோன்றியது.

எதிர்பாராமல் வந்து புகுந்த இடம்தான் என்றாலும், காலையில் தனிமை நாடி வந்தமர்ந்த இடத்தில், தாலியா கடற்கன்னியைப் போல ஆழியிலிருந்து எழுந்து வந்ததும்...

அதன் பின்பு கரையில் நின்று ஆடைகளைக் களைய முற்பட்டபோது தான் தடுக்கப் பாய்ந்ததும்...

தன்னைப் பார்த்த அதிர்ச்சியில் அவள் மயங்கி விழுந்ததும்...

மயங்கி விழுந்தவளைத் தாங்கிப் பிடிக்க பாய்கையில் அலைக்கரங்கள் எழுந்து மோதி விளையாடியதும்...

அப்போது கூடலில் கட்டுண்ட நாகங்களைப் போல் தரையில் உருண்டதும்...

என எல்லாமும் அவன் நெஞ்சில் மின்னல்போல ஓடி மறைந்தது.

ஆனாலும் அவன் பார்வை மட்டும் புதர்களின் இடையே கிடைத்த சிறு இடைவெளியின் மூலம் கடற்பரப்பை நோட்டமிட்டு கொண்டிருந்தது.



தாலியா மெல்ல வளவத்திரையனை நெருங்கி வந்து பின்னால் நின்று அவன் கூர்ந்து நோக்கும் திசை பார்த்தாள்.

அங்கே படகில் வில்லவனும், தன் நாட்டைச் சேர்ந்த யவன வீரர்களும் வருவது நன்றாகவே தெரிந்தது. மேலும் அவனை நெருங்கி நின்று, "அவர்கள் நம்மைப் பார்த்துவிட்டனரா?" எனக் கிசுகிசுத்தாள்.

அவ்விதம் வினவியபோது அவளது மூச்சுக்காற்று அவன் செவிமடலைத் தீண்டியது. அவ்வளவு நெருக்கத்தில் அவள் நிற்கிறாள் என்பதை அப்போதுதான் அவன் உணர்ந்தான்.

அந்தப் பேரழகியின் சமீபம் அவனுக்குள் சில மாற்றங்களை உண்டு பண்ணினாலும், தன்னைக் கட்டுக்குள் வைத்துக்கொண்டு கூறினான்.

"தாலியா, அதோ அந்தப் படகின் போக்கை இங்கு நின்றபடி நீ கவனி. அதற்குள் இந்த மணற்த்திட்டை நான் ஆராய்ந்து வருகிறேன். நம்மைச் சுற்றிலும் ஏதேனும் ஆபத்து இங்கே மறைந்திருந்தாலும் இருக்கலாம்."

அவன் கூறியதுதான் தாமதம், சட்டென அவனைப் பின்புறமிருந்து அணைத்துக் கொண்டவள், "ஐயோ! ஏன் இப்படி என்னைப் பயமுறுத்துகிறீர்கள்?" எனப் பயத்துடன் அரற்றினாள்.

திடுமென இப்படித் தன்னை அவள் அணைத்துக் கொள்வாள் என எதிர்பாராதவன், "தாலியா, என்ன இது விளையாட்டு?" என அவள் கரங்களை விலக்கப் பார்த்தான். அவளோ, "நீங்கள்தான் விளையாட்டு காட்டுகிறீர்கள்! நான் அல்ல!" என்றவள் அப்போதும் அவனை விட்டுவிடாமல் பிடித்தவாறே கூறினாள்.

அவள் தன்னிடம் எடுத்துக் கொள்ளும் தன்னிச்சையான உரிமை அவனை வியப்புக்குள்ளாக்கியது.

"ஒரு கன்னிப் பெண், இன்னொரு ஆடவனை இப்படி அணைப்பது முறையா?" என்றான்.

"அந்த முறையை நீங்கள் கன்னிப் பெண்ணிடம்தான் கேட்க வேண்டும்!" என்றவள் 'களுக்'கெனச் சிரித்தாள்.

"ஏன்? நீ கன்னிப் பெண் தானே!" எனத் தன் மார்பைப் பின்னியிருந்த அவளது கரங்களை விலக்க முயன்றவாறே குரலில் அதிர்ச்சி காட்டினான்.

"எனக்குத்தான் தங்களுடன் கந்தர்வ மணம் ஆகி விட்டதே!" எனச் சிரித்தாள்.

"தாலியா! உன் விளையாட்டை இத்துடன் நிறுத்திக் கொள்!"

"நான் இப்போது கன்னிப் பெண் இல்லை எனத் தாங்கள் உணர்ந்துக் கொள்ளுங்கள். முதலில் என்னை அணைத்தது தாங்கள் தானே!"

"என்ன?"

"ஆம்! எப்போது என் மானத்தைக் காக்கப்

பாய்ந்து வந்து அணைத்தீர்களோ... அப்போதே நான் உங்களுக்கு உங்களுக்கு உரியவள் என்று ஆகிவிட்டேன்! இதை இன்னுமா விளக்க வேண்டும்?" என நகைத்தவள், மேலும் தன் அணைப்பை இறுக்கிக் கொண்டவள்.

அவள் கரங்களைப் பிரித்து, அவளைத் தனக்கு முன் நிறுத்தி கூர்ந்தான் வளவத்திரையன்.

அவளின் நீல விழிகள் முதலில் நாணம் கொண்டாலும், பின் அவன் மேல் நிலைக்குத்தி காதலும் காமமும் கலந்து கதைகள் பல பேசின.

"உன் பேச்சும் நடவடிக்கையும் இன்று மிகவும்



விசித்திரமாக மட்டுமல்ல! விபரீதமாகவும் இருக்கிறது. தாலியா தயைக்கூர்ந்து நான் சொல்வதைக் கேள்!" என்றான்.

"நான் என்ன மாட்டேன் என்றா சொல்கிறேன்?"

"அப்படியானால் அந்தப் படகை நோட்டமிடு. நான் சென்று இந்தப் புதர் பகுதியை ஆராய்ந்து வருகிறேன்." என இரண்டடிகள் நடக்க எத்தனித்தவன் கரங்களை ஓடி வந்து பற்றிக் கொண்டாள்.

"நான்தான் கூறினேனே! என்னைத் தனியாக இங்கே விட்டுவிட்டுச் செல்லாதீர்கள். எனக்குப் பயமாய் இருக்கிறது."

"இப்படி பயந்த தாலியாவை இதுவரை நான் ஒரு நாளும் பார்த்ததில்லையே!"

"இதற்கான பதிலையும் தான் நீங்களே கூறி விட்டீர்களே!"

"என்னவென்று?"

"இன்று இங்கே நடப்பது யாவும் விசித்திரமாகவும் வியப்பாகவும் இருக்கிறது என்றீர்களே..."

"ஆம்! ஆனால் உன் போக்கு இங்கே புதிராக இருக்கிறது."

"உங்களுக்குத்தான் புதிராகவும் புதிதாகவும் இருக்கிறது. ஆனால் இங்கு நடந்தது அத்தனைக்கும் நானா பொறுப்பு?"

"பிறகென்ன நானா பொறுப்பு?"

"இருவருமே இல்லை! இந்தப் பவழத் தீவின் இயற்கை அன்னைதான் பொறுப்பு! அதுமட்டுமல்ல, இங்கு நடந்ததற்கும், இனி நடக்கும் அனைத்துக்கும் இறைவனே பொறுப்பு! அதை நான் விளங்கிக் கொண்டு விட்டேன். தாங்கள் தான் இனி விளங்கிக் கொள்ள வேண்டும்!" என்றவள் அவன் கரங்களை எடுத்து தன் கன்னங்களில் வைத்துக் கொண்டாள்.

"நெருப்பில் நிற்பதைப் போலிருக்கிறது என் நிலை!"

வெறுப்பு கலந்த குரலுடன் அவன் கூறியவாறே தன் கரங்களை அவள் கன்னங்களில் இருந்து விலக்கிக் கொண்டவனைக் கண்டு அவள் துணுக்குற்றாள். கூடவே கவலையும் உள்ளூர ஓடியது. ஆனால் அதைக் காட்டிக் கொள்ளாமல் பேசினாள்.

"பொறுப்போடு இருப்பவர்கள் இப்படியெல்லாம் பேச மாட்டார்கள்."

"என்ன?"

"ஆம்! நெருப்பில் விழுந்த தங்கம் பக்குவம் பெற்ற ஆபரணம் ஆகிறதல்லவா? நெருப்பிலிட்ட பண்டம் தானே பதப்படுத்திய சுவையான உணவாக மாறுகிறது." அவள் கூறியதைக் கேட்டவன், 'இவளுக்குத் தான் எவ்வளவு மதிநுட்பம், அதை விடவும் தமிழில் தோய்ந்த ஞானம், பேச்சு வன்மை!' எனவும் மலைத்தான். அத்துடன், மீண்டும் தன் பார்வையைப் புதர் வழியே கடற் பரப்பில் செலுத்தியவாறே கூறினான்.

"தாலியா, நெருப்பு எல்லாவற்றையும் பக்குவப்படுத்தி விடாது. பலவற்றை எரித்து அழித்தும் விடும் என்பது தெரியாதா?"



“தெரியும். அது நெருப்பில் விழும் பொருளைப் பொறுத்தது. நீங்கள் தங்கம் என்று நான் அறிவேன்.”

“அடேயப்பா! உன் பேச்சு சாமர்த்தியத்தை நான் எளிதாகத்தான் எடை போட்டுவிட்டேன் போலும். போதும் இந்த வார்த்தை விளையாட்டு! அங்கே கவனி!” என்றவன், கடற்பரப்பில் மட்டும் கவனம் செலுத்தினான்.

அங்கே...

கரையை ஒட்டிய பாறைத் திட்டுகளை நெருங்கியிருந்தது படகு. இன்னும் சில கணங்களில் அவர்கள் கரையை வந்தடையக் கூடும் என உணர்ந்தான் வளவத்திரையன்.

“தாலியா, நான் சொல்வதைக் கேள். இங்கிருந்தபடியே அவர்களை நோட்டமிடு. அதற்குள் நாம் இங்கிருந்து வெளியேறும் பாதையை நான் அறிந்து வருகிறேன்.” என்றவன், அவளது பதிலை எதிர்பாராதவனாக மெல்ல நடந்தான். வட்ட வடிவிலான மணற்த்திட்டை சுற்றிலும் படிப்படியாகப் பார்வையால் அளந்தான்.

தாங்கள் ஓடிவந்த வழியைத் தவிர வேறு பாதையேதும் இல்லாமல் அடர்ந்திருந்த அந்தப் புதர் அவனுக்கு வியப்பாகத்தான் இருந்தது.

கடற்கரை மணல் வெளியையொட்டி இருக்கும் அப்புதருக்குள் ஆபத்தான மிருகங்கள் ஏதும் வருவதற்கு இல்லை. ஆனாலும் இங்கிருந்து கிளம்புவதற்கு ஒரே வழி, கடற்கரை மணல்வெளி தான் என உணர்ந்தான்.

தாங்கள் இருவரும் வில்லவன் பார்வையில் பட்டுவிடக்கூடாது என்ற எண்ணத்துடன் முழுதாகப் புதரை வட்டமடித்து விட்டு மீண்டும் தாலியாவிடம் வந்து நின்ற வளவத்திரையனின் பார்வையில், அந்தப் படகு பாறைத் திட்டுகளுக்கு அருகே வந்து நிற்பது தெரிந்தது.

தங்களைத்தான் தேடுகிறார்களா? அல்லது வேறு எதற்கேனும் வந்திருக்கிறார்களா? தங்களைப் பார்த்திருக்கக் கூடுமோ என்ற வினாக்களுடனே அவன் படகில் நிற்பவர்களை நோட்டமிட்டான்.

“இப்போது என்ன செய்வதாக உத்தேசம்?” என்றாள் தாலியா.

“அதைத்தான் யோசித்துக் கொண்டிருக்கிறேன்.”

“ஒருவேளை அவர்கள் இங்கு வருவதாக இருந்தால், நாம் கையும் களவுமாக அகப்பட்டுக் கொள்வோமா?”

“ஆம்! ஆனால் அதற்கு நாம் இடம் கொடுக்கக் கூடாது. இந்தப் புதர்களைக் கடக்க, அதோ!... காட்டுக் கொடியைப் பிடித்து, அந்த மரத்தில் ஏறிக் கொண்டால்தான் அவர்களது பார்வையில் தப்பிக்க முடியும்.” என அவன் விரல் சுட்டிய திசையைப் பார்த்தாள் தாலியா.

அவ்வாறு செய்வது அவளுக்கு இயலுமா என்பது கேள்விக் குறியாக இருந்தாலும், வளவத்திரையன் எப்படியும் தன்னை அந்த மரத்துக்குக் கொண்டு சென்று விடுவான் என்பதும் புரிந்தது.

“அவர்கள் இங்கு வந்து தேடுவார்கள் என்று நினைக்கிறீர்களா?”

“தேடுவதற்கு வந்துவிட்டால் அடுத்த கட்டத்தை நாம் செயல்படுத்த வேண்டாமா?”

“ஆம்! ஆம்!” எனத் தலையசைத்தவள், இன்னும் சற்றைக்கெல்லாம் அந்தப் பெரிய மரத்தின் மீது இருவரும் மறைவாக ஒன்றியிருக்கும் சூழலை எண்ணிப் பார்த்தாள். அவளுக்குள் அச்சமும், விவரிக்கவியலாத இன்பமும் கலந்த உணர்வு உள்ளோடியது.

பாறைத் திட்டுக்களை வட்டமிட்டு பார்வையிட்ட

படகில் உள்ளவர்களுக்குள் ஏதோ உரையாடல் நிகழ்ந்தது.

சற்றைக்கெல்லாம் கடலரசியை நோக்கிப் பயணிக்கத் தொடங்கியது அப்படகு.

"இதென்ன? இங்கே இறங்கித் தேடாமலே அவர்கள் புறப்பட்டு விட்டார்களே!.." என



முணுமுணுத்தாள் தாலியா. அவளது குரலில் தொனித்த உணர்ச்சி இன்னதென்று விளங்கிக் கொள்ளவியலாதவனாய் அவளை நோக்கித் திரும்பினான் வளவத்திரையன்.

அவனது பார்வை தன் மீதான ஐயத்தைக் கூட்டவே, "இல்லை! இவ்வளவு தூரம்... வந்தவர்கள்..." எனத் தடுமாறினாள்.

"அவர்கள் வராதது உனக்குக் கவலையாக இருந்தால், நீ கரைக்கு ஓடிச் சென்று அவர்களைக் கூப்பிட்டு, உன்னை அழைத்துப் போகச் சொல்லேன்!"

"நான் ஏன் போகவேண்டும்? உங்களோடு இருக்கும் இந்தப் பொழுது எனக்கு இறைவன் அளித்தது. இதை விட்டுவிட்டா போகச் சொல்கிறீர்கள்? மாட்டேன்!" எனப் பொய்க் கோபம் காட்டியவள், முகத்தைத் திருப்பிக் கொண்டாள்.

"பெண்கள் சிலருக்கு, சூழலை அறிந்து நடந்துக் கொள்ளும் பக்குவமே கிடையாது போலிருக்கிறது." என விரக்தியான புன்னகை ஒன்றை உதிர்த்தவன், படகு செல்வதையே பார்த்தபடி இருந்தான்.

படகில் உள்ளவர்கள், பாறைத் திட்டுக்கள் மீதும், கடற்கரை மணல்வெளியில் யாரையோ தேடுவது போலவும் பார்வையைத் பதித்தபடியே இருந்தார்கள்.

சில கணங்கள் கடந்ததும், பாறைத் திட்டுக்கள் பகுதியை நோக்கி இரண்டு கட்டுமரங்கள் வருவதைக் கண்டான் வளவத்திரையன். அவர்கள் பவழத் தீவின் கரையோர சந்தைக்குச் செல்கிறார்கள் என்பது புரிந்தது.

"தாலியா அதோ பார்! மீனவர்கள் வருகிறார்கள். நல்ல வாய்ப்பு. வா! இவர்கள் மூலம் நாம் கடலரசியைச் சென்றடையலாம்." என்றவாறு ஓட்டமும் நடையுமாக நடக்கத் தொடங்கியவனைத் தொடர்ந்த படியே வினவினாள் தாலியா.

"எப்படி? இருவரும் ஒன்றாகவா போகிறோம்?"

"இல்லை, தனித் தனியாகத் தான் போகவேண்டும். விரைந்து வா." என்றவாறு, புதர் மறைவிலிருந்து வெளிப்பட்டவன், அங்கு வேறு யாரேனும் தென்படுகிறார்களா என நோட்டம் விட்டான்.

ஆனால் அப்பகுதியில் கண்ணுக்கெட்டிய தூரம் வரை ஒருவரும் தென்படவில்லை.

காலைச் சூரியன் கடுமையைக் கூட்டிக் கொண்டிருந்த வேளை, காற்றிலும் அனல் பரவத் தொடங்கியிருந்தது.

தாலியாவைக் கரையில் நிற்கவைத்துவிட்டு பாறைத் திட்டுக்கள் பகுதியை அடைந்து அங்கிருந்து மீனவர்களுக்கு சமிக்ஞை செய்து வரவழைத்த வளவத்திரையன், அவர்களிடம் ஏதோ கூறியதையும், அவர்கள் உடன்பட்டதையும் கண்டாள் தாலியா.

அடுத்த ஒரு நாழிகையில்...

அவர்கள் இருவரும் கடலரசியில் இருந்தார்கள்.

கதிரவன் சரியாக உச்சியை அடைந்த வேளை...

பவழத் தீவில் இருந்து சேர நாட்டை நோக்கிப் பயணிக்கத் தொடங்கியிருந்தது கடலரசி.

(கனவு தொடரும்...)



படைப்பாளிகளுக்கு...
* சிந்திப்போம்..
* படைப்போம்..
* மகிழ்வோம்!
*இதழில் வெளியாகிற
கவிதைகள்,கட்டுரைகள்,எழுத்தோவியங்கள்
யாவும் படைப்பாளிகளின்
பெருமைக்கும் பொறுப்புக்கும் உரியவை!
தொடர்புகளுக்கு
editor@ithamil.com

# ஏன் ?

சிருஷ்டிகாளியின்
கருமுலைக்காம்பில்
வழிந்து சிந்திய
ஒருசொட்டுப்பால் சிதறி
வெளிச்சமாகி விரிந்ததது
வெளியும் பிரபஞ்சமுமாய்.

ஒருசொட்டுப்பால் சிதறி
ஒளியிறுகி உயிராகி
ஒன்று பலவாகி
பல பலப்பலவாகி
ஓயாது உயிரியக்கமாய்
நிகழ்ந்தபடியிருக்கும்
காத்தல் லீலை.

ஒருசொட்டுப்பால் சிதறி
கடலின் முதல்துளியில்
பிறக்கும் ஊழித்தீயின்
பெருமாயவிசையில்
மறையும் யாவும்

கருமுலைப்புள்ளியில்
ஒருசொட்டுப்பால் சிதறி
சூன்யகர்ப்பம் சூலுறும் மீண்டுமென்று
வெள்ளையனுரைத்தால் பளிங்குண்மை
கருப்பான நானுரைத்தால்
சனாதனப் புனைவுச்சுருள்.
ஏன் அப்படி?

**ச. லாவண்யா**

# கவிதைத் தீவு

ஆகாயமாக விரிந்து கிடக்கும்
கடலலை தாலாட்ட
தென்னை மரக்கீற்றடியில்
பஞ்சுமணல் தரையில்
பறவைகள் துயிலெழுப்ப
ஒருபொழுதேனும்
கண்விழிக்கவேண்டும்!

எமை இணைத்த விடுதலை
உலகெங்குமாய் விரிய
இயற்கையைத் தின்று
சூரியன் சுட்டெரிக்கும்வரை
அங்கேயே கிடப்போம்
பலகதைகள் பேசி!

உன்னை நான் கவிதையாக்க
என்னை நீ ஓவியமாக்கு!
எம் கனவுகளை நிஜமாக்கும்
அந்த அழகிய தீவு!

**றஞ்சினி**

# கடவுள்

கடவுளைக் காண!
கிளம்பியது கூட்டம்!
கையில் கிடைத்த
வாகனம் ஏற
நடுவழியில்
சந்தேகம் வந்தது.

கடவுள் எங்கிருக்கிறார்?!
பக்கத்தில்
நின்ற வாகன ஓட்டியிடம்
விசாரணை....
விரைந்து செல்லுங்கள்
நடை சாத்தும் நேரம்!

அண்ணா சாலை வளைவில்
தேவி தியேட்டர்களில்
ஏதாவது ஒன்றில்....
ஏதாவது சாலை ஒன்றில்!

பக்தர்கள் சென்ற
வாகனம் துப்பிய
அமில வாயுக்களால்
சுவாசிக்கத் திணறும்!
மலரொன்றை
கவிதை ஒன்றால்
வருடிக் கொண்டே
தன் பக்தனை
தேடிக் கொண்டிருக்கக் கூடும்
கடவுள் புன்னகையுடன்....

**நண்பன்**

# எப்போதும் ஒன்று...

அன்பை நுகர்கின்ற தருணங்கள்
பிரபஞ்சத்தை எதிர்நோக்கி
சதிராடும் இலக்கணங்கள்
வெண்ணிறமோ கண்ணிறமோ
துல்லியமாய் சொல்வதென்றால்
ஏதேனும் ஒன்று
எப்போதும் இல்லை!
இருப்பதும் இல்லாமல் இருப்பதும்
நெடும் நாழிகை
வசந்தகால வனப்பில்
ஊடுருவும் சங்கேத உதிர்வு
நிறத்தலும் இறத்தலும் பின்
துளிர்த்தலும் மாதுளக் கனி தோட்டம்
ஞாபகங்கள் உலுக்கும்.

நினைவுக்கு
எதனோடு எதன் பிழை
நறுமணம் விலக்கப்பட்ட உளமழைக்கு
இசைக்கும் மழைத்துளி
மூழ்கும் பனிப்பழங்கள்
தத்தளிக்கும் முடிவற்ற வாழ்வாய்
எப்போதும் துளிர்க்கிறது...

**ஆனந்தி ராமகிருஷ்ணன்**

## கவனமாக கால் பதிக்கும் கவின்!



கவின் காட்டில் மனமழை!

ரோமியோ பிக்சர்ஸ் நிறுவனம் தயாரிப்பில், நடன இயக்குநர் சதீஷ் இயக்குநராக அறிமுகமாகி, கவின் நாயகனாக நடித்துள்ள படம் ‘கிஸ்’. இது செப்டம்பர் 19—ம் தேதி வெளியாகும் என அறிவிக்கப்பட்டுள்ளது. ப்ரீத்தி அஸ்ரானி, மிஷ்கின் உள்ளிட்ட பலர் முக்கிய கதாபாத்திரத்தில் நடித்துள்ளனர். இப்படத்தின் பணிகள் முடிந்துவிட்டதால், அடுத்ததாக வெற்றிமாறன் தயாரித்துவரும் ‘மாஸ்க்’ படத்தில் கவனம் செலுத்தி வருகிறார் கவின்.

## இந்தியில் களமிறங்கும் ‘மித்ரன்’



இந்தியில் சங்கமித்திருக்கட்டும்!

கார்த்தி நடித்துள்ள ‘சர்தார் 2’ படத்தினை இயக்கி முடித்துள்ள மித்ரன் இயக்கத்தில், அடுத்ததாக இந்திப் படம் உருவாகும் என்று பாலிவுட் ஊடகங்கள் தெரிவிக்கின்றன. ஷாபினா கான் மற்றும் சஞ்சய் லீலா பன்சாலி தயாரிப்பில் ‘ரவுடி ரத்தோர் 2’ படத்தின் பணிகள் தொடங்கப்பட்டன. ஆனால், அப்பணிகள் எதிர்பார்த்த அளவுக்குப் போகவில்லை. எனவே முதல் பாகத்தில் இருந்து சேர்க்கப்பட்ட அனைத்து விஷயங்களையும் தூக்கிவிட்டு புதிய கதையினை மித்ரன் இயக்கவுள்ளார்.

## மாஸ் சிரஞ்சீவியும் அதீத வன்முறையும்!



### வன்மமே வாழ்க்கையானால் எப்படி?

'சிரஞ்சீவி' நடிப்பில் 'விஸ்வம்பரா' படத்தின் டீசர் வெளியாகியுள்ளது. இயக்குநர் வசிஷ்டா இயக்கத்தில் சிரஞ்சீவி, த்ரிஷா, ஆஷிகா ரங்கநாத், குணால் கபூர் உள்ளிட்ட பலர் நடித்துள்ள இப்படத்தின் டீஸர் இணையத்தில் பெரும் கிண்டலுக்கு ஆளானதில், கிராபிக்ஸ் காட்சிகளை மாற்றியமைத்து, அடுத்த ஆண்டு கோடை விடுமுறையில் வெளியிடத் திட்டமிட்டுள்ள படக்குழு, தற்போது மீண்டும் ஒரு டீசர் வெளியிட்டுள்ளது. ஒரு நிமிடக் காட்சியிலேயே ரத்தம் தெறிக்குமளவுக்கு சிரஞ்சீவிக்கான மிதமிஞ்சிய அறிமுகமும், கீரவாணியின் விறுவிறுப்பான இசையும், புழுதி பறக்கும் ஆக்ஷன் காட்சிகளுமாய் கலங்கடிக்கின்றது 'விஸ்வம்பரா' டீசர்.

## 'மதராஸி' ஜல்தியா வா நைனா!



### 'மதராஸி' வெளியீட்டுத் தேதி அறிவிப்பு!

ஸ்ரீ லட்சுமி மூவீஸ் நிறுவனம் தயாரிப்பில், சிவகார்த்திகேயன் நடிப்பில் ஏ.ஆர். முருகதாஸ் இயக்கும் 'மதராஸி' சிவகார்த்திகேயனின் 23—வது படம். இப்படத்தில் வித்யுத் ஜம்வால், பிஜு மேனன், ருக்மிணி வசந்த் ஆகியோர் நடிக்கின்றனர். அனிருத் இசையமைத்துள்ள இப்படம், ஆக்ஷன் திரைப்படமாக உருவாகியுள்ளது. தமிழ், தெலுங்கு, மலையாளம், கன்னடம், ஹிந்தி என ஐந்து மொழிகளில் பான் இந்தியா திரைப்படமாக 'மதராஸி' செப்டம்பர் 5 ஆம் தேதி வெளியாகும் என்று படக்குழு அதிகாரப்பூர்வமாக அறிவித்துள்ளது.



# தலவலம்

## திருநீர்மலை

(ரங்கநாத பெருமாள்)

புவனகிரி செயபாலன்

"அன்றாயர் குலக்கொடியோடு அணிமா மலர்
மங்கையோடு அன்பு அளவி அவுணர்க்கு
என் தானம் இரக்கம் இலாதவனுக்கு உறையும்
இடமாவது இரும்பொழில் சூழ்
நன்றாய் புனல் நறையூர் திருவாலி
குடந்தை தடம் திகழ் கோவில் நகர்
நின்றான் இருந்தான் கிடந்தான் நடந்தாற்க்கு
இடம் மாமலையாவது நீர் மலையே"
—திருமங்கையாழ்வார்



பெருமாளின் 108 திவ்ய தேசங்களில் இது தொண்டை மண்டல ஆறாவது திவ்ய தேசம்.

200 படிகள் கொண்ட மலை மேல் மூன்று சன்னதிகளும், மலையடிவாரத்தில் ஒரு சன்னதியும் உள்ளது.

நான்கு கோலங்கள் :

இத்தலத்தில் நின்றான், இருந்தான், கிடந்தான், நடந்தான் என நான்கு கோலங்களில் பெருமாளை சேவிக்கலாம் .

மலை மேல் உள்ள கோயில்:

பெருமாள் — சாந்தன் நரசிம்மன் (இருந்தான் வீற்றிருந்த கோலம்) கிழக்கு நோக்கியது.

பெருமாள் —திரி விக்கிரமன் (நடந்தான் நின்ற கோலம்) கிழக்கு நோக்கியது.

பெருமாள் — (அரங்கநாதன் கிடந்தான் மாணிக்க சயனம்) தெற்கு நோக்கியது .

தாயார் — ரங்கநாயகி. தனி சன்னதி கிழக்கு நோக்கியது.

தல விருட்சம் வெப்பாலை மரம்



விமானம் — தோயகிரி விமானம்

தீர்த்தம் — மணிக்கர்ணிகா தடாகம்

தொன்மம் — 2000 ஆண்டுகளுக்கு மேல்.

மலையடிவார கோயில் :

பெருமாள் — நீர்வண்ணன் நீலமுகில் வண்ணன் நின்ற கோலம் கிழக்கு நோக்கியது.

தாயார் — அணிமா மலர் மங்கைத் தாயார்

மங்களாசாசனம் : திருமங்கை ஆழ்வார், பூதத்தாழ்வார், மங்களாசாசனம் செய்துள்ளனர்.

பூலோக வைகுண்டம் எனப் போற்றப்படும் திருவரங்கம் (ஸ்ரீரங்கம்) வடவேங்கடம் (திருப்பதி) திருக்கோட்டியூர், ஆகிய தலங்களோடு இத்தலத்தையும் இணைத்து பூதத்தாழ்வார் மங்களாசாசனம் செய்துள்ளார்.

பெயர்;

இத்தலத்துக்கு காண்டவனம் மலை, தோதாயத்ரி, தோயாசலம் என்ற பெயர்கள் உண்டு. இங்கு உள்ள மலைக்கு தோதாத்ரி என்று பெயர். தோதா+அத்ரி தோதா என்பது தோயா என்பதன் மருவு. தோயா என்றால் தண்ணீர். அத்திரி என்பதற்கு மலை. எனவே தண்ணீர் சூழ்ந்த மலை என்பது வரலாறு.

வால்மீகி முனிவர் இத்தலத்துக்கு வந்து மலை மீது அரங்கநாதன், நரசிம்மன், திரிவிக்ரமன் என்னும் முப்பெருமாள்களை வழிபட்டு கீழே இறங்கினார். அடிவாரத்தில் இருந்து ஸ்ரீ ராமனை நோக்கி தியானம் செய்தார்.

அரங்கநாதன் ராமபிரானாகவும், லட்சுமி சீதாப்பிராட்டியாகவும், ஆதிசேஷன் லக்ஷ்மணாகவும், சங்கு சத்துருக்கனாகவும், சக்கரம் பரதனாகவும், விஷ்வக்சேனர் சுக்ரீவனாகவும், கருடன் ஆஞ்சநேயர் ஆகவும் காட்சி தந்து மறைந்தார்களாம்.

அப்படியும் வால்மீகி திருப்தி அடையாததால் பெருமாள் நீர் வண்ணனாக காட்சி தந்தாராம். தனக்குக் காட்டிய தரிசனப்படி நிரந்தரமாக இருக்க வேண்ட, அவ்வாறே தங்கி சேவை சாற்றுகிறார். ராமருக்கு தனி சன்னதி உள்ளது. இதில் சுயம்புவாக வால்மீகி காட்சி தருகிறார்.

நான்கு திருக்கோலம்:

திருமங்கையாழ்வார் பெருமாளை தரிசிக்க இங்கு வந்தபோது மலையை சுற்றி நீர் அறம் போல் இருந்தது. நீரை கடந்து சென்று தரிசிக்க முடியவில்லை .காத்திருந்து தரிசித்து விட்டு செல்வதென முடிவு செய்து கோயில் எதிரில் உள்ள மலையில் தங்கி இருந்தார். ஆறு மாத காலம் தங்கிஇருந்து தரிசித்தார் . கோலத்தில் நீர் வண்ணம் பெருமாளாக இருந்த கோலத்தில் நரசிம்மராக நடந்த கோலத்தில் உலகளந்த பெருமாளாக சயனகோலத்தில் அரங்கநாதராக காட்சி தந்து சேவை சாற்றினார்.

அதனால் அந்த மலைக்கு நீர்மலை என்று பெயர்



உண்டாயிற்று என்கிறது தலபுராணம். அதுவே திருநீர்மலை என்று ஆனது.

திருநீர்மலை:

இந்த மலை பதினைந்து ஏக்கர் பரப்பளவு கொண்டது மலை மேல் ஏறிச் செல்ல 200 படிகள் உள்ளன. சுமார் மூன்று ஏக்கர் பரப்பில் கோயில் மூன்று நிலை ராஜகோபுரம் தெற்கு நோக்கி உள்ளது. இரண்டு பிரகாரங்களைக் கொண்டது. கோபுரத்தின் முன் நான்கு தூண்கள் கொண்ட மண்டபம் உள்ளது. இந்த மண்டபம் எம்.எஸ்.சுப்புலட்சுமி மற்றும் கல்கி சதாசிவம் தம்பதியர் கட்டியது. காரணம் அவர்களின் திருமணம் இத்தலத்தில்தான் நடந்தது.

உள்ளே நுழைந்தால் வெளிப்பிரகாரத்தில் இடது பக்கம் ஆதிசேஷனுக்கு தனி சன்னதி, வலது பக்கம் கொடிமரம் கடந்து சுமார் 10 படிக்கட்டுகள் ஏறி போனால் சிறியதாக நிற்கும் பெரிய திருவடி சன்னதி. அவருக்கு நேர் எதிரே கருவறையில் ரங்கநாதர் தெற்கு நோக்கி பள்ளி கொண்டுள்ளார். கருவறை படிக்கட்டில் இரு பக்கமும் பாவை விளக்கேந்தும் பழங்காலச் சிலைகள். படிக்கட்டுகளில் பாதி தூரத்தில், வலது பக்கம் பிரியும் இடத்தில் நான்கு படிகள் இறங்கி வந்தால் சின்ன ஆஞ்சநேயர் சன்னதி.

சுயம்பு

பெருமாள் இங்கே சுயம்புவாக தோன்றிய எட்டு சேத்திரங்களில் இதுவும் ஒன்று. ஸ்ரீரங்கம், ஸ்ரீமுஷ்ணம், திருப்பதி, சாளக்கிராமம், நைமிசாரண்யம், புஷ்கரம், பத்ரி, போன்றவை மற்ற ஏழும்.

சுயம்பு மூர்த்தி என்பதால் மூலவருக்கு அபிஷேகம் இல்லை. கார்த்திகை மாதம் பௌர்ணமியில் மட்டும் தைலக்காப்பு (சாம்பிராணி தைலம் மட்டும்) நடக்கும். தனி சன்னதியில் தாயார் ரங்கநாயகி.

பால — சாந்த நரசிம்மர்

உட்பிரகாரத்தில் பாலநரசிம்மர் சன்னதி உள்ளது. இவரை சாந்த நரசிம்மர் என்றும் சொல்கிறார்கள். ஹிரண்ய வதம் முடிந்ததும் கோபம் அடங்காமல் சிலிர்த்த உடம்போடு நின்ற சிம்மத்தைக் கண்டு பிரகலாதனுக்கு உள்ளூர நடுக்கம் ஏற்பட்டது. பாலகன் முகத்தில் பயத்தைப் பார்த்ததும் "ஐயோ குழந்தையைப் பயப்பட வச்சுட்டேனே" என்ற இரக்கம் தோன்ற அவனுக்கு சமமாக அவனுக்கேற்ற உருவத்தில் தானும் குழந்தையாக மாறி இரண்டு கைகளுடன் இங்கே வீற்றிருக்கிறார். இவருக்கு பின்புறம் நரசிம்மர் இரு கரங்களுடன் சுய ரூபத்தில் காட்சி தருகிறார். இடது கை ஆட்காட்டி விரலை உயர்த்தி சங்கு சக்கரம் இல்லாமல் காட்சி தருகிறார். இங்கு பால வடிவம் மற்றும் சுயரூபம் என இரண்டு வடிவங்களில் நரசிம்மரை சேவிக்கலாம்.

உலகளந்த பெருமாள் சன்னதி கருவறையின் வெளிப்புறச் சுவரை ஒட்டி மகாபலியின் தலையில் மூன்றாவது அடியை வைத்து திரிவிக்ரமன் உள்ளார். இவருக்கு வைகாசி மாதம் திருவோண நட்சத்திரத்தில் தனியே உற்சவம் நடத்தப்படுகிறது.

இக்கோயிலில் மூலவர் அரங்கநாதர் மலைக் கோயிலிலும், உற்சவர் அழகிய மணவாளர் அடிவாரத்தில் உள்ள சன்னதியிலும் உள்ளார். (சுயம்பு மூலவருக்கு) அபிஷேகம் இல்லாததால் அபிஷேகம், திருமந்திரம் எல்லாம் உற்சவருக்குத் தான். கூடவே ஸ்ரீதேவி, பூதேவி, ஆண்டாள் உடன் உள்ளனர். சித்திரை பிரமோற்சவம். கொடியேற்றம் மற்றும் இரக்கம். பங்குனி உத்திரத்தில் நடக்கும் திருக்கல்யாணம் ஆகிய மூன்று நாட்கள் மட்டும்

உற்சவரையும் மூலவரையும் ஒரு சேர சேவிக்கலாம்.

பிருகு மார்க்கண்டேயர்:

ஸ்ரீரங்கத்தில் மகாவிஷ்ணுவை சயனக் கோலத்தில் தரிசித்த பிறகு பிருகு முனிவர், மார்க்கண்டேய மகரிஷி இருவரும் தங்கள் இருப்பிடம் நோக்கி இவ்வழியே சென்றனர். அவர்களுக்கு பெருமாளின் சயனக் கோலம் கண்களை விட்டு அகலவே இல்லை. மீண்டும் ஒருமுறை அந்த தரிசனம் கிடைக்க வேண்டும் என விரும்பினர். எனவே இத்தலத்தில் தங்களுக்கு அந்தத் திருக்கோலத்தைக் காட்ட வேண்டும் என உருக்கமாக பெருமாளை வேண்டினர். அப்போது போக சயனத்தில் அரங்கநாதராக இங்குள்ள மலையில் காட்சி கொடுத்தார். அவரே இங்கு மலைக்கோயில் மூர்த்தியாக சேவை சாற்றுகிறார். அருகில் பிருகு, மார்க்கண்டேயர் இருவரும் இருக்கின்றனர்.



கோபுரம் — ராமருக்கு, கொடிமரம்— நீர்வண்ணருக்கு.

கோயில்களில் சுவாமிகள் சன்னதிக்கு எதிரில் 5 நிலை கோபுரம், பலிபீடம், கொடிமரம், என ஒரே வரிசையில் இருக்கும். ஆனால் இங்கு பலிபீடம் கொடிமரம் இரண்டும் ராஜகோபுரத்தில் இருந்து சற்று விலகி உள்ளது. வால்மீகிக்காக ராமராகவும், நீர்வண்ணப் பெருமாளாகவும் மகாவிஷ்ணு காட்சி தந்ததால், அவ்விருவரும் சிறப்பம்சம் பெற்றனர். எனவே அவர்களுக்காக ராமநாதன் சன்னதிக்கு எதிரில் ராஜகோபரமும், நீர் வண்ணப் பெருமாள் எதிரில் கொடிமரமும் அமைய பெற்றுள்ளது.

இத்தலத்தை மங்களாசாசனம் செய்த திருமங்கையாழ்வார் தாயாரை 'அணிமாமலர் மங்கை' எனக் குறிப்பிட்டு பாடியுள்ளார். பொதுவாக பெருமாள் கோயில்களில் உற்சவரை மூலவர் முன் வைப்பது நடைமுறை. இங்கு மூலவர் ரங்கநாதர் மலைக் கோயிலிலும் உற்சவர் அழகிய மணவாளர் அடிவாரத்தில் உள்ள கோவிலிலும் காட்சி தருகின்றனர்.

குளம் ஒன்று தீர்த்தம் நான்கு.

கும்பகோணத்தில் உள்ள மகாமகக் குளத்தில் 19 தீர்த்தங்கள் சங்கமித்திருப்பதாக ஐதீகம். இத்தலக் கோயிலின் எதிரில் உள்ள புஷ்கரணியில் சித்தர் தீர்த்தம், சொர்ண தீர்த்தம், காருண்ய தீர்த்தம், சீர தீர்த்தம் என நான்கு தீர்த்தங்கள் சங்கமித்துள்ளன. சித்திரை மற்றும் பங்குனியில் நடக்கும் பிரம்மோற்சவத்தில் ஒன்பதாம் நாள் வைகுண்ட ஏகாதசிக்கு மறுநாள் ஆகிய மூன்று நாட்களில் தீர்த்தவாசி வாரி நடக்கும். துவாதசி திதி நாட்களில் தீர்த்தவாரி நடப்பதால் இதை முக்கோடி துவாதசி என்று அழைக்கிறார்கள்.

கல்வெட்டு

கி.பி. 1180 —ஆம் ஆண்டு மூன்றாம் குலத்துங்க மன்னரால் இக்கோயில் புதுப்பிக்கப்பட்டது என இத்தல கல்வெட்டு கூறுகிறது. மேலும் சோழர் மற்றும் பாண்டிய மன்னர்கள் திருப்பணி செய்துள்ளனர். ரங்கநாதர் கோயிலில் உள்ள தூணில் 16 —ஆம் நூற்றாண்டை சேர்ந்த கல்வெட்டு உள்ளது. அதில் ராஜராஜசோழன் மற்றும் விஜயநகர மன்னர், கிருஷ்ணதேவராயர் போன்றோர் இக்கோயிலுக்கு திருப்பணிகள் செய்ததுடன் பல உதவிகளையும் செய்துள்ளனர் என்று உள்ளது.

இரட்டை திருவிழா

மலைக்கோயிலில் உள்ள ரங்கநாதருக்கு சித்திரையிலும், அடிவாரத்தில் உள்ள நீர்வண்ணப் பெருமாளுக்கு பங்குனியிலும், பிரம்மோற்சவம் நடக்கிறது. வைகுண்ட ஏகாதசியின் போது அழகிய மணவாளர் சொர்க்க வாசல் நடக்கும். இவர் மாசிமகத்தன்று கருட சேவையில் சாதிக்கிறார். நரசிம்மருக்கு ஆனியிலும், உலகளந்த பெருமாளுக்கு ஆடியிலும், ஒருநாள் விழா நடக்கும். அப்போது இவ்விருவருமே அடிக் கோயிலுக்கு எழுந்தருளி கருட சேவையை சாதிக்கின்றனர்.

சித்திரை மாத உத்திர நட்சத்திரத்தில் நீர் வண்ணர் அணிமா மலர்மங்கை திருக்கல்யாணமும், பங்குனி உத்திரத்தில் ரங்கநாதர் ரங்கநாயகி திருக்கல்யாணமும் நடக்கும்.

விழாக்காலங்களில் பெருமாள் ஒவ்வொரு நாளும், ஒவ்வொரு வாகனத்தில் எழுந்தருவார். ஆனால் ரங்கநாதர் ரத சப்தமி அன்று ஒரே நாளில் ஏழு வாகனங்களில் பவனி வருவார். அன்று காலை சூரிய உதயத்திற்கு முன்பு சூரிய பிறையை வாகனத்தில் எழுந்தருளி மாட வீதியை சுற்றி தீர்த்த கரைக்கு எழுந்தருள்வார். சூரிய உதய

அனுகிரகமும் கிடைக்கும். கடன் தொல்லையும் நிவர்த்தி ஆகும்.

பிரார்த்தனை — நேர்த்திக்கடன்

இங்குள்ள ராமபிரான், கல்யாண ராமனாக காட்சி தருவதால், திருமணம் கைகூடும் தலமாகவும், பிரார்த்தனை தலமாகவும் விளங்குகிறது. சுவாமிக்கு திருமஞ்சனம் செய்து வஸ்திரம் அணிவித்து விசேஷ பூஜை செய்து நேர்த்திக்கடன் செலுத்துகின்றனர்.

பூஜை

வைகாசன ஆகம விதிகளின்படி தினமும் இருவேளை பூஜை நடத்தப்படுகிறது. சனிக்கிழமைகளில் ரங்கநாதருக்கு துஷ்டாங்க அலங்காரத்துடன் விசேஷ பூஜை நடக்கிறது. மலையில் அமைந்த கோயில் என்பதால் பௌர்ணமி தோறும் கிரிவலம் நடக்கிறது.

கும்பாபிஷேகம்









வேளையில் பெருமாளை பாதத்திலிருந்து முகம் வரையில் படிப்படியாக தீபாரதனை செய்வார். இதனை பெருமாளுக்கு சூரியனே செய்யும் பூஜையாகும். பின்னர் அனுமந்த வாகனம், கருடன், சேஷன், ஆதிரை, சிம்மம், சந்திர பிறை ஆகிய வாகனங்களில் இறைவன் எழுந்தருளி உலா வருவார்.

பரிகாரம்

ஆயுள் பலம் அதிகரிக்க வேண்டும் என்றாலும், அன்றாடம் நடக்கும் வாழ்க்கை பிரச்சினை இன்றி செல்ல வேண்டும் என்றாலும், குழந்தைகள் நோயின்றி ஆரோக்கியமாக வாழ, சுகபோக வாழ்க்கை தொடர, திருமண தடைகள் நீங்க, திருமணம் நடைபெற, திருநீர்மலைக்கு வந்து பெருமாளை தரிசனம் செய்துவிட்டு சென்றால் போதும். அவர்களுக்கு பஞ்சகிரகங்களின்

மலையடிவாரக் கோவிலுக்கு திருப்பணிகள் செய்யப்பட்டு கும்பாபிஷேகம் நடந்தது. பதினான்கு வருடம் கழித்து கும்பாபிஷேகம் நடந்தது. தற்போது அதற்கான ஆயத்த பணிகள் மேற்கொள்ளபட்டு வருகின்றன.

கோயில் திறக்கும் நேரம்

தினமும் காலை 8 மணி முதல் 12 மணி வரை; மாலை 4 மணி முதல் இரவு 8 மணி வரை திறந்திருக்கும்/


இருப்பிடம்

சென்னை பல்லாவரத்திலிருந்து மேற்கு 6 கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது. காஞ்சிபுரத்தில் இருந்து 56 கி.மீ. தூரத்தில் உள்ளது.

(தொடரும் வலம்.....)




# பல்லவர் ஆட்சி தோற்றமும் வீழ்ச்சியும்




ஆசிரியர்

## முனைவர் ப.செங்கல்வராயன்

**விலை : ரூ. 150**

**வெளியீடு:**

**எஸ்.எஸ்.பப்ளிகேஷன்**
**தி.நகர், சென்னை–600017**

தமிழகத்தில் பாண்டிய, சேர, சோழர் ஆட்சிக் காலத்திலும், பல்லவர், விஜயநகரத்து மன்னர்கள் என பலரும் பல காலங்களில் போர்களை நடத்தி, வென்றவர்கள் தாம் கைப்பற்றிய பகுதிகளில் தமது தனி அடையாளத்தைப் பதித்துச் சென்றுள்ளனர். அத்தகைய அடையாளங்களில் பல்லவர்களது அடையாளங்கள் முக்கியமானவையாகும். மாமல்லபுரம் என்றாலே ஒற்றைக்கல் ரதங்களும், காளைச் சிற்பங்கள் உள்ளிட்டவையும் வியக்க வைக்கும் அடையாளச் சின்னங்களாக உள்ளன.

பல்லவர்கள் யர்? அவர்களது ஆட்சியில் நலத்திட்டங்கள், தனித்தன்மை என்ன என்ற பல கேள்விகளுக்கு விடையளிக்கும் வகையில் எழுதப்பட்டுள்ள ‘பல்லவர் ஆட்சி தோற்றமும் வீழ்ச்சியும்’ நூலின் ஆசிரியரான முனைவர் ப.செங்கல்வராயன் பல்லவர் ஆட்சியின் நிலையை படம் பிடித்துக் காட்டியிருப்பது மெச்சத்தக்கது. பல்லவர்களை முற்காலம், இடைக்காலம், பிற்காலம் என பிரித்தும், அவர்களது போர் முறைகள், அரசியல் சூழல், வைணவர், சமணருக்கு இழைக்கப்பட்ட அநீதிகள் உள்ளிட்டவை ஆதார ஆவணங்களுடன் விளக்கப்பட்டுள்ள இந்த நூலானது அனைத்துத் தரப்பினரும் அறிய வேண்டிய ஆதாரபூர்வமான வரலாற்று படைப்பாக உள்ளது.



# ரௌத்திரம் பயில்

சாந்தி நாதன்

“மணி ஏழாவுது. இன்னும் உங்க மருமகளுக்குப் பொழுது விடியலை போல. காப்பித் தண்ணி இல்லாம தொண்டை வறண்டு போவுது.” முகத்தைச் சுருக்கிக் கொண்டு பேசும் மனைவியை முறைத்தாவாறே பால் கவர்கள் அடங்கிய கூடையையும் தினசரி பேப்பரையும் எடுத்துக் கொண்டு உள்ளே வந்த கனகலிங்கம், “ஏங் காமாட்சி, இன்னிக்கி ஒருநாள் நீதான் காபி போடேன்.” சொல்லிக் கொண்டே பால் கூடையை சமையலறை மேடையில் வைத்துவிட்டு ஹாலுக்கு வந்து உட்கார்ந்தவர், மேலும் தொடர்ந்தார்.

“இன்னிக்கு அவங்க ரெண்டு பேருக்கும் லீவு. போதாமைக்கு நேத்து ராத்திரி உம்பிள்ளை மாடியில செஞ்ச கலாட்டாவையும் கத்தலையும் கீழே உக்காந்து கேட்டு ரசிச்சுக்கிட்டு தானே இருந்தே. வாசக் கதவைப் பூட்ட வந்த பிரபுவை என்ன ஆச்சுன்னு கேட்டா, ‘எல்லாம் இந்தப் பாட்டியாலதான் தாத்தான்னு’ கோபமா சொல்லிட்டுப் போறான். கூடவே தண்ணி பாட்டில் எடுக்க வந்த சைலா, ‘அப்பா அம்மாவை ரொம்ப அடிச்சிட்டாரு தாத்தான்னு’ சொல்லி அழுவுது...”

“பொம்பளைங்க புருஷனை எடுத்தெறிஞ்சு பேசினா, வாங்கிக் கட்டிக்க வேண்டியதுதான்!”

“பொம்பளைங்க புருஷனுக்கு அடங்கிப் போறதைப் பத்தி நீ பேசறயா?” எனத் தலையில் அடித்தக் கொண்டே பேப்பரை பிரித்து முகத்தை மறைத்துக் கொண்டார். மாடியிலிருந்து இறங்கி வந்து கொண்டிருந்த சவிதாவின் காதுகளில் மாமியாரின் வார்த்தைகள் விழ, அவளை முறைத்தவாறே கிச்சனில் நுழைந்தாள்.

சிறிது நேரத்தில் காபி கோப்பைகளுடன் வந்தவள், “மாமா, காபி!” என்று அவரிடம் ஒன்றைக் கொடுத்துவிட்டு மற்றொன்றை மௌனமாக காமாட்சியின் எதிரில் வைத்துவிட்டுத் திரும்பும் நேரம், ஆட்டோ ஒன்று வாயிலில் நிற்பதைப் பார்த்து வாசலுக்கு விரைந்தாள்.

“வா லதா, வாங்க தம்பி!” ஓரகத்தியையும் மைத்துனரையும் வரவேற்ற சவிதாவின் கன்றிய கன்னங்களையும், அழுது சிவந்த விழிகளையும் பார்த்து இருவரின் மனமும் வருந்தியது.

“ராத்திரி நான் உங்களுக்கு போன் போட்டேன். சைலாதான் எடுத்து அழுதுகிட்டே விபரம் சொன்னா. இவரு அவங்க அண்ணா மேல ரொம்ப கோபமா இருக்காரு.” மெல்லிய குரலில் சொல்லியவாறே லதா, சவிதாவின் கைகளைப் பற்றிக்கொள்ள மூவரும் உள்ள நுழைந்தனர்.

“அட சங்கரு! சொல்லாம திடீர்னு வந்திருக்க?” வியப்போடு கேட்கும் தாயைப் பார்த்து,

“ஏன் சொல்லிட்டுதான் வரணுமா?” எனப் பைகளைக் கீழே வைத்துவிட்டு பல் துலக்க உள்ளே சென்றான்.

அதற்குள் முகம் கழுவிக்கொண்டு வந்த லதா, “இவரு எம்.டியோட மகனுக்கு இங்க கல்யாணம். ஸ்டாப்க்கெல்லாம் போகவர பஸ் ஏற்பாடு செஞ்சிருக்காரு. இன்னிக்கு சாயங்காலம் ரிசப்ஷன். நாளை முகூர்த்தம். மதிய சாப்பாடு ஆனவுடனே பஸ்ஸில திரும்பிடுவோம். அதான் வழியில இறங்கி இங்க வந்தோம்.” என்றாள்.



சவிதா நீட்டிய காபியை வாங்கிக் கொண்ட சங்கர், “அண்ணி! நீங்க குடிச்சீங்களா?” என்று கேட்ட சமயம் இருவருக்கும் காபியோடு வந்த லதா அவளை இழுத்து உட்காரவைத்து காபியைக் கொடுத்து தானும் குடிக்கத் துவங்கினாள்.

“அண்ணி, உங்க அத்தையம்மாவுக்கு உடம்பு சரியில்லைன்னு கேள்விப் பட்டு ரொம்ப வருத்தமாயிருக்கு. உங்க குடும்பத்துக்கு மட்டுமில்லாம நம்ம வீட்டுக்கும் நெருக்கடி நேரத்தில எவ்வளவு உதவியா இருந்திருக்காங்க...”

“சங்கர் தம்பி, உங்களுக்காவது அதெல்லாம் நினைவிருக்கறது சந்தோஷம்...”

“ஆமா, நீங்க போயி பாத்தீங்களா அக்கா?” லதா கேட்டாள்.

“விஷயம் தெரிஞ்சு நான் கிளம்பிய போது, அத்தையும் இவரும் எதிர்ப்பு காட்டினாங்க. மாமா தான் அவங்களை அடக்கி என்னை அனுப்பி வச்சாரு. பிரபு ஏங்கூடவந்து அவங்களைப் பார்த்தே ஆகணும்னு அடம் பிடிச்சான். முணு வயசு வரை அவங்க தானே அவனை வளர்த்தாங்க அப்புறமா கூட்டிட்டுப் போறதா சொல்லி நான் மட்டும் போய் வந்தேன். அங்க போன பிறகுதான் நிலமையோட தீவிரம் தெரிஞ்சுது. சாயங்கால வேளை வாசலில் சும்மா நடந்திட்டிருக்கும்போது கால் இடறி கீழே விழுந்திருக்காங்க. அங்க இருந்த கல் குத்தி தலையில அடிபட்டு ரத்தம் நிறைய போனதில, நினைவு தப்பிடிச்சு. இடுப்பில எலும்பு முறிவு. ஆஸ்பத்திரியில உடனடியா சேர்த்திருக்காங்க. முழு நினைவு இன்னும் வரலை. என் தம்பிக்கு ரெட்டைப் பிள்ளைங்கன்னு தெரியுமில்லை! அதுங்க ரெண்டும் இவங்க கூடவே தானிருக்கும். இப்ப இவங்களை காணாம ஒரே அழுது ரகளையாம். இப்போதைக்கு என் தம்பி மாமியார் ஒத்தாசைக்கு ஊரிலிருந்து வந்திருந்தாங்க. ஆனா நளினி தங்கை தம்பி காலேஜில படிக்கறாங்க. அவங்க அப்பாவும் வேலைக்குப் போறவரு. அதனால அவங்களாலும் ரொம்ப நாள் தங்க முடியாது.”

அவள் பேச்சை தொடர விடாமல், “வந்ததும் வராததுமா அவங்க கிட்ட உங்க அத்தை புராணம் படிச்சது போதும். ராகவன் இறங்கி வரான் பாரு அவனுக்கு காபி கொண்டா. என்ன உன் அஸிஸ்டெண்ட் பொன்னம்மா இன்னும் லரலை. காலை டிபனுக்கு என்ன செய்யறதா உத்தேசம்? தேவிகாவும் இப்ப வரதா சொல்லியிருக்கா தெரியுமில்லே!” என கணவன் எதிரில் காபியை வைத்தாள் காமாட்சி.

“பொன்னாமாவுக்கு ஏதோ வேலையிருக்காம் மதியம் சமையலுக்குள்ள வருவா. டிபன் இட்லி சட்னிதான்!” என்றாள் சவிதா.

“என்னது இட்லியா? வராதவன் வந்திருக்கான்.

உன் நாத்தனார் இப்ப வரப் போறா. பூரி கிழங்கு ஏதாச்சும் செய்."

"என்னால இப்ப வேற எதுவும் செய்ய முடியாது. பசங்களுக்கு இன்னிக்கு ஸ்கூல் போகணும்." சொல்லிக் கெண்டே சவிதா நகர்ந்தாள்.

"அண்ணி, தண்ணீர் ஊத்தி வச்ச பழைய சோறு இருந்தா கொண்டாங்க. கொஞ்சம் உப்பு தயிரு சேத்து பிசைஞ்சு, சின்ன வெங்காயம் தொட்டுக்கிட்டு சாப்பிட்டா வெய்யிலுக்கு அமிர்தமா இருக்கும். எங்க பேரை சொல்லி உங்க வேலையை அதிகப்படுத்த நினைக்கற அம்மா சொல்ற மாதிரி எதுவும் செய்யாதீங்க." கிண்டலாகச் சொன்னான் சங்கர்.

"டேய், ஏற்கனவே அவளுக்குத் திமிர் ஏறிக்கிட்டே வருது. இதில நீ வேற அவ முன்னாடி அம்மாவை கிண்டல் பண்றது தேவையா?" எனக் கோபமாகக் கேட்கும் அண்ணனைப் பார்த்தான் சங்கர்.

"இத பாரு ராகவா, பேருக்கேத்த மாதிரி நீ வேணா அம்மா செய்யறதுக்கெல்லாம் தலையாட்டிக்கிட்டு இரு. ஆனா என்னால அப்படி இருக்கமுடியாதுன்னு உனக்கே தெரியும்."

"சித்தப்பா! சித்தி!" உற்சாகக் குரல் கொடுத்துக்கொண்டு படியிறங்கி வரும் சைலஜா பிரபுவை அணைத்துக் கொண்டான் சங்கர்.

லதா அவர்களுக்காக செய்து கொண்டு வந்திருந்த தின்பண்டங்களைக் கொடுத்தாள்.

"என்னடா பிரபு கண்ணா! செகண்ட் சார்ட்ட்டே கூட ஸ்கூலா?" என்றாள்.

"அண்ணா இப்ப பத்தாவது இல்லையா? அவனுக்கு ஸ்பெஷல் கிளாஸ் இருக்கு. ஸ்கூல் டே வருது. அதனால எனக்கு டான்ஸ் பிராக்டீஸ் இருக்கு. மதியம் வந்திடுவோம்." என்ற சைலஜா, "நீங்க ஏன் ரஞ்சிதா சேகரைக் கூட்டிக்கிட்டு வரலை?" என்றாள்.

"லதா, ஆட்டோ இப்ப வந்திடும். அதுக்குள்ள இவ தலையை வாரி பின்னிடு. நான் போய் இவங்க ரெண்டு பேருக்கும் டிபன் எடுத்து வைக்கிறேன்." என சீப்பை லதாவிடம் கொடுத்துவிட்டுத் திரும்பியவளிடம், "அண்ணி, சைலஜா இப்ப உங்க ஜாடையில ரொம்ப அழகாயிருக்கா. இவளோட டான்ஸ் அரங்கேற்றம் எப்ப செய்யப் போறீங்க?" என்றாள் லதா.

"வீடு இருக்கற இருப்பில அதைப் பற்றி யாரு நினைக்கறாங்க? எம் மாதிரி அவ அழகா இருக்கறதா சொல்ற ஆனா அவ வாழ்க்கை என்னுடையது மாதிரி அமையாம இருக்கணும் லதா." எனக் கண்ணிலிருந்து வழியும்நீரை துடைத்துக் கொண்டு சன்னமான குரலில் கூறிச் சென்றால் சவிதா.

அவளை மௌனமாகப் பார்த்தாள் லதா.

"கண்ணுங்களா, ஆட்டோ வந்திடிச்சு!" தாத்தா குரல் கொடுக்க, அவசரமாக கை கழுவிக் கொண்டே, "சித்தி, ஸ்வீட் ரொம்ப நல்லா இருக்கு. அம்மா வரோம். பை தாத்தா, சித்தி, சித்தப்பா" என்றபடி இருவரும் வண்டியில் ஏறிச் சென்றனர்.

"எதிரில் அத்தை நான் வரேன். என்னைத் திரும்பிக் கூட பாக்காம ரெண்டும் ஆட்டோவில ஏறிப் போவுதே! அவ்வளவு திமிரா இந்த வாண்டுகளுக்கு..." கோபமாகக் குரல் எடுத்துப் பேசிக் கொண்டே நுழைந்த மகளிடம், "ஆமாண்டி எல்லாம் பெத்தவ வளர்த்து வச்சுள்ள லட்சணம்... கிளம்பும் போது பெத்தவனையும் என்னையும் தவிர மத்த எல்லாருக்கும் பை சொல்லிட்டுப் போவுதுங்க!" என்றால் காமாட்சி.

"அதுக்குக் காரணம் அவங்கவங்க மனசுக்குத் தெரியும்!" முமுணுத்தபடி நகர்ந்தாள் சவிதா.

"சங்கர், லதா, எப்ப வந்தீங்க? பசங்க வரலியா?" என்றவளிடம், "இல்ல நாங்க ஒரு கல்யாணத்துக்கு வந்திருக்கோம். பையன் சனி, ஞாயிறு ஸ்போர்ட்ஸ் கிளாசுக்குப் போறான். பொண்ணு அடுத்த வருடம் பத்தாவது போறதால கோச்சிங் கிளாஸுக்கு வாரக் கடைசி நாட்கள்ல போறா. அதான் அம்மா கிட்ட விட்டுட்டு வந்தோம்...." என்றாள் லதா.

"இப்ப உங்க அம்மாவை வீட்டோட கூட்டிட்டு வந்திட்டேன்னு சொல்லவே இல்லையே!" கிண்டலாகக் கேட்கும் மாமியாரைக் கோபமாக முறைத்த லதா, "எங்க அம்மாவுக்கு வீடு இல்லையா? தம்பிக்கு வேலை கிடைச்சு ஆறு மாசம் ப்ரண்ட்ஸ் கூட ரூமில தான் இருந்தான். வேலை கர்ன்பாம் ஆனதும் எங்க வூட்டுக்குப் பக்கத்திலேயே தனியா வீடெடுத்து இரண்டு பேருமா இருக்காங்க. என் கல்யாணத்துக்காக அப்பா வீடு, நிலம் எல்லாத்தையும் வித்து பாக்கிப் பணத்தை பையன் படிப்பு செலவுக்கும் வச்சிட்டுத்தான் போயிருக்காரு. இப்பவும் அம்மாவுக்கு வர பென்ஷன், தம்பி சம்பளம் எல்லாமிருக்கறதால அவங்க எதுக்கும் எங்க கிட்ட கையேந்தி நிக்கலை. நாங்கதான் எங்க பசங்கங்களுக்காக அப்பப்போ அவங்க தயவை நாடிப் போறோம்."


"லதா, எங்கம்மாவுக்கு இதெல்லாம் தெரியாதா? இந்த மாதிரி வீண்பேச்சுக்கு ரோஷப் பட்டு பதில் பேசி நேரத்தை வீணாக்காதே." என்றான் சங்கர்.

"என்னமோ ஒருகேள்வி கேட்டதுக்கு பொரிஞ்சு கொட்றா பாரு. ஒருத்தி வாயைத் திறக்காம உசிரை வாங்கறா. இன்னொருத்தி பேசிப் பேசி

கடுப்பேத்தறா! மாமியாருக்கு மரியாதை கொடுக்காத ஜன்மங்க. எல்லாம் என் தலையெழுத்து..." அலுத்துக் கொள்ளும் தன் மனைவியைப் பார்த்து வரும் சிரிப்பை சிரமப்பட்டு அடக்கினார் கனகலிங்கம்.

"மரியாதை கொடுக்கற மாதிரி நாம் நடந்துக்கணும்னு புரியாதவங்க, மரியாதையை எதிர்பார்க்கறது சரியா?" முணுமுணுப்பாய் கனகலிங்கம் சொல்ல, "என்னவோ சொன்னீங்களே புரியலை. உரக்க சொல்லுங்க." என்றாள் காமாட்சி.

"மாமா, டிபன் ரெடி! எல்லாரையும் கூட்டிட்டு வாங்க." கவிதா குரல் கொடுக்க, 'அப்பாடா தப்பிச்சேன்.' என்ற உணர்வுடன் சென்று டைனிங் டேபிளில் முதல் ஆளாய் அமர்ந்தார் கனகலிங்கம்.



"இதோ பாரு! ஆடி அசைஞ்சுக்கிட்டு உன் அசிஸ்டெண்ட் உள்ள வரா. மதிய சாப்பாட்டுக்காவது ஏதாச்சும் ஸ்பெஷல செய்ய வை." காமாட்சி விரைப்பாகச் சொல்லிக் கொண்டே கைகழுவச் சென்றாள்.

"அண்ணி! நீங்களும் லதாவும் சாப்பிட்டுட்டு ஹாலுக்கு வாங்க. கொஞ்சம் பேச வேண்டியதிருக்கு." என சங்கர் சொல்ல, "ஆமாம் தம்பி, எனக்கும் பேசணும்." என அவசரமாக உண்டு முடித்து பொன்னம்மாவிற்கு சமையல் மெனு சொல்லிவிட்டு லதாவோடு ஹாலுக்கு வந்தாள் கவிதா.

"லதா, என் கைப்பையை எடுத்திட்டு வா!" சங்கர் சொன்னவுடன் பையை அவனிடம் லதா கொடுக்க, அதிலிருந்து ஒரு கவரை எடுத்துத் தந்தையிடம் நீட்டினான்.

"அப்பா, மாசாமாசம் நான் உங்களுக்கு அனுப்பற ஐயாயிரத்தோட இன்னொரு ஐயாயிரம் வச்சிருக்கேன். தங்கச்சி மாமனார் விழாவுக்கு எங்க பங்கு. அந்த சமயம் பசங்க பரிட்சை நேரமா இருக்குகறதால நாங்க வரமுடியாது."

"சரிப்பா." என்றபடி கவரை வாங்கிக் கொண்டார் கனகலிங்கம்.

"என்னடா இவ்வளவு கறார பேசற. கூடப் பிறந்த ஒரே தங்கச்சி புகுந்த வீட்டில ஒரு விசேஷம்னா அவ கௌரவம் கெடாதபடி நாம சீர் செய்யறதுதானே முறை!" என்றாள் காமாட்சி.

"அத்தே, நாலு மாசம் முந்திதான் தேவி மக பெரியவளானதுக்கு மாமான்மார் ஒவ்வொருவரும் தனித்தனியா சீர் செய்யணும்னு சொல்லி நாங்களும் நகை, துணின்னு கடனை உடனை வாங்கி சிறப்பா செஞ்சோம். அடுத்து அவங்க வீட்டுப் பெரியவரு விசேஷத்துக்கும் அதே மாதிரி செய்யணும்னா எப்படி முடியும்? மாசாமாசம் ஒருத்தர் சம்பளம் வீட்டு தவணைக்கும், பசங்க படிப்பு செலவுக்கும் சரியாயிடுது. இன்னொருத்தர் சம்பளத்தைப் பாத்துப் பாத்து செலவு செஞ்சு வண்டியை ஓட்டிக்கிட்டிருக்கோம். இதுக்கு மேல நாங்க என்ன செய்யணும்னு எதிர்பார்க்கிறீங்க?" என்ற லதா பேச்சில் ஆத்திரம் அடைந்தாள் தேவி.

"என்னமோ எம் பெண்ணுக்கு பெரிசா சீர் செஞ்சதை எப்படி சொல்லிக் காட்டறா பாரும்மா. நாளைக்கே இவங்க மக பெரியவளான அத்தைங்கற முறையில நான் அதைவிட சிறப்பா செஞ்சுகாட்டுவேன். சொல்லுங்கம்மா." என்றாள் தேவி.

"நாங்க இது மாதிரி எதுவும் உங்கிட்டேந்து எதிர்பார்த்திட்டு இல்லை. எங்க மக வயசுக்கு வந்து கிட்டதட்ட இரண்டு மாசம் ஆகறது. ஸ்கூலில் அப்ப அவளுக்குப் பரிட்சை நேரமாயிருந்தால லீவு போட மறுத்திட்டா. அவளுக்குப் படிப்பில இருக்கற ஈடுபாட்டைப் புரிஞ்சுகிட்டு நாங்களும் அந்த நாட்களில் அவளைப் பாதுகாப்பா பள்ளிக்குக் கூட்டிட்டுப் போயி திரும்ப அழைச்சுக்கிட்டு வந்தோம். அதோடு இல்லை, இதுக்கு செலவு பண்ணி விளம்பரப் படுத்தி விழா எடுக்கறதுக்கு பதிலா எப்பப் பார்த்தாலும்

ரிப்பேராகி தொல்லை குடுக்கற அப்பாவோட பழைய ஸ்கூட்டரைக் கொடுத்திட்டு புதிய வண்டி வாங்குங்க என்று பிடிவாதம் பிடிச்சு வண்டி வாங்க வச்சா அவ..”

“பக்கத்திலேயே இருக்கற உங்க ஆத்தா இது தப்புன்னு சொல்லலியா? இல்ல அந்தப் பாட்டி மட்டும் போதும்னு நீங்க எல்லாருமா தீர்மானம் செஞ்சு எங்களையெல்லாம் ஒதுக்கி வச்சிட்டீங்களா?” ஆங்கரக்குரல் எழுப்பும் கமாட்சியை இடைமறித்தாள் லதா.

“இப்ப எதுக்கு எங்க அம்மாவைப் பத்திப் பேசறீங்க? இது நடக்கும்போது எங்கம்மாவும் தம்பியும் குலதெய்வக் கோயிலுக்கும் உறவுக்காரங்க வீட்டு விசேஷம்னும் ஒரு வாரம் ஊருக்குப் போயிருந்தாங்க. வந்த பிறகு விஷயம் கேட்டு முதல்ல கோபிச்சுக்கிட்டாலும் இதெல்லாம் உங்க விருப்பம்னு எங்க போக்கில விட்டுட்டாங்க.”



“அம்மா, எனக்கு வீட்டில நிறைய வேலை இருக்கு. நீ வரச் சொன்னதால பசங்களும் அவரும் எங்க மூத்தார் வீட்டுக்குத் தாத்தா பாட்டைப் பார்த்துட்டு வரதா சொல்லிட்டுப் போயிருக்காங்க. மதியம் அங்க சாப்பிட்டு அவங்க திரும்பறதுக்குள்ள நான் வீடு போகணும். என் ஓரகத்தி பிறந்தவீட்டில சம்பந்திகளுக்கு நகை ஆடம்பரமா புடவைன்னு பெரிய அளவில சீர் செய்யப் போறதா எங்க மாமியார் பெருமை பேசிக்கிட்டு இருக்காங்க. நீங்க என்ன செய்யப் போறீங்கன்னு எனக்குத் தெரியணும்...” என்றாள் தேவி.

“உன் மூத்தாரின் மாமனார் பிஸினஸ் தில்லுமுல்லு பத்தி ஊரே பேசுது. கருப்புப் பணத்தை இப்படி வாரி விட்டு அவர் பேர் தேடற மாதிரி மாசச் சம்பளக்காரங்களான நாங்க எப்படி செய்யமுடியும்? இதை முதல்ல புரிஞ்சுக்க!” என்றான் சங்கர் சிறிது காட்டமாக.

“வாயை மூடுடா சங்கர். வீட்டுக்கு வந்திருக்கற தங்கச்சி மனம் வாடற மாதிரி பேசாதே...” ராகவன் ஏதோ தொடர்ந்து சொல்வதற்குள், “தம்பி, இப்ப நான் பேச நினைக்கறதை சொல்லிடறேன்.” பதிலுக்குக் காத்திராமல் பேசத் துவங்கினாள் சவிதா.

“திருமணமாகி வந்ததிலிருந்து இதுவரை உங்க தங்கச்சி கல்யாணம் துவங்கி இவரு சொல்லும் போதெல்லாம் ஆபிஸிலே லோன் போட்டு வர பணத்தை அப்படியே இவருக்கிட்ட கொடுத்திட்டு தானிருக்கேன். ஆனா இந்த முறை என்னால அப்படி எதுவும் செய்யமுடியாது. ஊரில உசிருக்குப் போராடிக்கிட்டிருக்கற எங்க அத்தையின் மருத்துவ செலவு அதிகமாக இருக்கறதால நான் என்னால முடிஞ்ச அதிக பட்சத் தொகையை தம்பி பேருக்கு அனுப்ப ஏற்பாடு செஞ்சிட்டேன். இதுக்காக நேத்து என்னை வாயில வந்தபடி திட்டி கைநீட்டி அடிச்சு, தடுக்க வந்த பசங்களையும் அதட்டி அழ வச்ச இவருகிட்ட எனக்குப் பேசவே பிடிக்கலை......”

“ஏய் நிறுத்துடி. ரொம்ப ஓவரா பேசற அவ என்ன உன்னைப் பெத்தவளா?”

“உங்களுக்கு அவங்க அருமை புரியாது அத்தை! பெத்த தாயை விவரம் அறியாத வயசில பறி கொடுத்த என்னையும் என் தம்பியையும் பாசமும் பரிவும் காட்டி வளர்த்த அவங்களை நாங்க எங்க அம்மாவாத்தான் பாக்குறோம். எங்க அம்மா இறக்கும்போது எனக்கு ஏழு வயசு. அவங்க நினைவு எனக்கு அரைகுறையா எப்பவாவது வரும். ஆனா என் தம்பி ராஜூ இரண்டு வயசா இருக்கும் போதே எங்க அம்மா இறந்துபோன நாளிலிருந்து இவங்களைத்தான் அம்மாவா நினைக்கிறான். அப்பாவையும் என்னையும் விட அவன்தான் ரொம்ப கலங்கிப் போயிருக்கான். இரண்டு மாசம் முன்னாடி தான் ராஜூவுக்கு ஒரு உயர்ந்த கம்பெனியில நல்ல சம்பளம் பதவியில வேலை கிடைச்சிருக்கு. புது ஆபிஸில உடனடியா ஏதும் பண உதவியை எதிர்பார்க்க முடியாதுங்கறதால பெண்டாட்டி நகைகளை அடமானம் வச்சும் அப்பாவோட சின்ன சேமிப்பும், பழைய ஆபிஸிலிருந்து வந்த பாதிப் பணம் எல்லாத்தையும் போட்டு அவங்க ஆபரேஷன் வரை சமாளிச்சிட்டான். இதுக்கு மேல அவங்க வீட்டுக்கு வந்தா கூடவேயிருந்து பாத்துக்கறதுக்கு நர்ஸ், அவங்க உடல்நிலைக்கு ஏத்த மாதிரி கட்டில் படுக்கை எல்லாம் வாங்கணும். அப்பாவோ தம்பியோ வாய் திறந்து எதுவும் கேக்காட்டியும் என் படிப்புக்கும் நல்ல உத்தியோகத்திற்கும் மூலகாரணமா அமைஞ்ச அவங்களுக்கு நான் இந்த சந்தர்ப்பத்தில உதவி செஞ்சே ஆகணும்ங்கற எண்ணத்தில ஆபிஸில பைனல் லித்டிராயல் போட்டு அந்த பணத்தை தம்பி பேருக்கு டிரான்ஸ்பர் பண்ண ஏற்பாடு பண்ணிட்டிருக்கேன்.”

“நீ எப்படி அந்தப் பணத்தை அனுப்பறேன்னு பாக்கறேன். அந்தமாதிரி ஏதும் செஞ்சா நீ இந்த வீட்டில இருக்க முடியாது தெரிஞ்சுக்க....” உறுமும் குரலில் பேசிக்கொண்டே கை ஓங்கும் கணவனை அலட்சியமாகப் பார்த்துக் கொண்டே விலகி நின்றாள் சவிதா.



“அவங்க சமயத்தில நமக்கு எப்படியெல்லாம் உதவியிருக்காங்கங்கறதை அடியோடு மறந்துட்டுப் பேசற இவரைப் பார்க்கவே எனக்குப் பிடிக்கலை! சங்கர், உங்களுக்கு நினைவிருக்கா பிரபு பிறந்து பிரசவ லீவு முடிஞ்சு நான் திரும்ப வேலையில சேர நாலு மாசக் குழந்தையோடு அத்தையையும் கூட அழைச்சுக்கிட்டு வந்தேன். பக்கத்து வீட்டு அம்மா சொல்லி அப்பத்தான் பொன்னம்மாவை வேலைக்கு சேர்த்துக்கிட்டோம். அவங்களுக்கு அத்தை குழந்தை பராமரிப்பு பற்றி நல்லவிதமா சொல்லிக் கொடுத்ததில் அவங்களும் சீக்கிரமா சமையல் குழந்தை வேலைகளைப் பொறுப்பா செய்யறதில திருப்தி அடைஞ்ச அத்தை ஊருக்குக் கிளம்பத் தயார் ஆன நேரம் இவருக்கு மஞ்சள் காமாலை வந்ததில பயணத்தை ரத்து செஞ்சிட்டு இவருக்குப் பத்திய சாப்பாடு பார்த்துப் பார்த்துத் தானே செஞ்சு, கீழாநெல்லிக் கஷாயம் பண்ணிக் குடிக்க வச்சுக் கவனமாப் பார்த்துக்கிட்தில இவரு சீக்கிரமே குணமாகி வேலைக்கும் போகத் துவங்கிட்டாரு. அந்த சமயம் தேவியை தலைப்பிரவசத்துக்காக நம்ம வீட்டுக்கு வளைகாப்பெல்லாம் செஞ்சு அழைச்சுக்கிட்டு வந்திருந்தாங்க. லாக்கரில் இருந்த என் நகையை என் அனுமதி இல்லாமலேயே எடுத்து அம்மாவும் மகனுமா அவளுக்கு நகைச் சீர் செஞ்ச பிறகுதான் என்கிட்ட விஷயம் சொன்னாங்க. நானும் நம்ம வீட்டுப் பெண்ணுக்கு தானே போவுதுன்னு அதை பெரிசா எடுத்துக்கலை. ஆனா உடம்பு சரியில்லாம படுத்திருக்கிற இவரையோ பேரனையோ எட்டிக்கூட பாக்காம அம்மாவும் பெண்ணும் அவங்க அறையை விட்டே வெளிவராம பாதுகாப்பா ஒதுங்கியே இருந்தாங்க. அப்பப்ப வந்து போன நீங்க கூட இதுக்காக உங்க அம்மாவை கோபிச்சிக்கிட்டதும் உங்க அண்ணன் அதுக்காக உங்களைக் கண்டிச்சதும் உங்களுக்கு மறந்திருக்காதுன்னு நினைக்கிறேன......” என்றாள் சவிதா. சங்கர் ஒப்புதலாய் தலையசைக்க, தொடர்ந்தாள் சவிதா.

“அந்த சமயம் மாமா குழந்தையைப் பாத்துக்கறதில எங்க அத்தைக்கும் பொன்னம்மாவுக்கும் பேருதவியா இருந்ததினால் தான் நான் ஆபிஸுக்கேபோக முடிஞ்சுது. அப்ப என் தம்பிக்குத் திருமணம் ஆகலை. அப்பாவும் அவனும் சாப்பாட்டுக்குக் கஷ்டப் படறாங்கன்னற உறுத்தல் இருந்தாலும் அத்தை நம்ம வீட்டு நிலை அறிஞ்சு நமக்கு உதவி செஞ்சதை எவ்வளவு சுலபமா மறந்து நடந்துக்கறாங்கன்னு நினைக்கவே பிடிக்கலை. ஒரு வழியா அத்தை திரும்ப ஊருக்குக் கிளம்பத் தயாரான நேரம் உங்க அம்மா கீழே விழுந்து காலில் அடிபட்டுக்கிட்டாங்க. படுக்கையில இருந்த அவங்களுக்கு ஆயா வேலை பார்க்கறதுக்காக அத்தை மறுபடியும் தன் பயணத்தை ஒத்திப் போட்டாங்க. இந்த அமர்க்களத்துக்கிடையே தேவிக்கு குழந்தை பிறந்திடிச்சு. சிசேரியன் டெலிவரி என்கிறதால அவளை நல்லபடியா கவனிக்க வேணுமில்லையா? இப்ப விழா எடுக்கப் போறாங்களே அந்த பெரியவங்களோ அவங்க மகன் திருவாளர் தேவிகாவோ இதில சம்பந்தப் படாதவங்க போல ஆஸ்பத்திரிக்கும் வீட்டுக்கும் வந்து வந்து போனாங்களே தவிர, எந்த வித்திலும் உதவாம ஒதுங்கி நின்னாங்க. உங்க அம்மாவின் கெஞ்சுதலை மதிச்சுத் தாய், சேய் பாட்டி மூணுபேரையும் கண்ணும் கருத்துமா பாத்து பணிவிடை செஞ்ச அந்த நல்ல மனுசியோட அருமையை மதிக்காட்டியும் உதாசினமா பேசற இவங்களுக்கு நான் எந்த விதத்தில்லையும் பணிஞ்சு போறதில்தில்லைன்னு தீர்மானமா இருக்கேன்.” தொடர்ந்து பேச முடியாது வெடித்து வரும் அழுகையை அடக்கிக் கொண்டு தன்னைத் தேற்றிக் கொண்ட சவிதாவின் கரம்பற்றிய லதா கூறினாள்.

“இவரு இதையெல்லாம் நான் திருமணமாகி வந்த ஆரம்ப நாளிலேயே சொல்லியிருக்காரு. போன வருடம் நாங்க கோயில்களுக்கு டூர் போனபோதுகூட உங்க அப்பா ரொம்ப கூப்பிட்டாருன்னு உங்க வீட்டுக்குப் போயிருந்தோம். அப்பதான் உங்க தம்பி மனைவி மூணு மாத இரட்டைப் பிள்ளைங்களோட திரும்பி வந்திருந்தா. எங்க பசங்களுக்கு ரெண்டு குழந்தைளை ஒண்ணா பாத்ததில ஒரே சந்தோஷம்.

அதுங்களை விட்டுட்டு வரவே மனசில்லை. இதைப் பாத்த உங்க அத்தையும் அப்பாவும் எங்களைக் கட்டாயப் படுத்தி அன்னைக்கு அங்கயே தங்க வச்சிட்டாங்க. எங்களுக்கு தடபுடல் சமையல் செஞ்சுக்கிட்டே குழந்தைகளின் தேவைகளையும் பாத்துக்கிட்டவங்க. நீ பச்சை உடம்புக்காரி போய் லதாவோட பேசிக்கிட்டிருன்னு மருமகளையும், உதவப் போன என்னையும் தடுத்திட்டு ஒண்டி ஆளா அழகா வேலைகளைச் செஞ்ச அவங்க இன்னிக்கு நினைவில்லாம படுத்திருக்காங்காங்கறதை நினைச்சா ரொம்ப வருத்தமா இருக்கு அக்கா”

“அப்பாவுக்கு ஒழுங்கான சாப்பாடு இல்லாததால உடல் நிலை சரியில்லாம போயிடிச்சுன்னு தெரிஞ்சதும் பதறிப்போய் இதுக்குமேல இங்க இருக்க முடியாதுன்னு ஊருக்குப் புறப்பட்டவங்க, என்னால ஆபிஸுக்கும் போயிட்டு வீட்டில் எல்லாரையும் பாக்க முடியாதுன்னு பிரபுவை தன்னோட தூக்கிட்டுப் போறதா முடிவெடுத்து என்னையும் சம்மதிக்க வச்சாங்க. தேவி, அவ குழந்தை வேலை, சமையல் இதோடு எட்டு மாசமான பிரபுவையும் பொன்னம்மாவால பாத்துக்கமுடியாது. இதுக்கு மேல என்னால லீவும் போடமுடியாதுங்கற எதார்த்தத்தை புரிஞ்சுக்கிட்டும் அத்தையில்லைன்னா பிரபு ஏங்கிப் போயிடுவாங்கற உண்மையை உணர்ந்துகிட்டும் வலி நிறைஞ்ச மனசோட பிரபுவை அவங்க கூட அனுப்பிவச்சேன். அதிலிருந்து அவங்ககிட்டதான் அவன் இரண்டு வருஷம் வளர்ந்தான். நான்தான் அவனை நினைச்சு ஏங்கிப்போனேனே தவிர, அவன் என் அப்பா, தம்பி இவங்களோட விளையாடிக்கிட்டும் அத்தையோட கனிவான வளர்ப்பிலும் உற்சாகமா என்னை மிஸ் பண்ற உணர்வு தோன்றாமலும் வளர்ந்தான். இளம் பெண்ணா அவங்க இருந்தப்ப எங்க அத்தையோட அழகையும் நல்ல பண்புகளையும் பார்த்து பிடிச்சுப் போன ஒரு அந்தஸ்தான குடும்பம் தங்க வீட்டுப் பையனுக்கு எங்க அப்பாவைப் பார்த்துப் பெண் கேட்டிருக்காங்க. தன் தகுதிக்கு இவ்வளவு பணக்கார இடம் ஒத்து வருமான்னு முதல்ல தயங்கிய அப்பா, பிறகு அவங்க நல்ல மனசை புரிஞ்சுக்கிட்டு திருமணம் செஞ்சு குடுத்திருக்கறாரு. திருமணத்தை அவங்களே நடத்தி அப்பாவுக்கு எந்த செலவையும் வைக்காம எங்க அத்தையை அவங்க வீட்டு ராணியாய் கொண்டாடி மகிழ்ந்திருக்காங்க. அத்தையின் கணவரும் அவங்க மேல அன்பும் பிரியமுமாய் இருந்திருக்காரு. திருமணமாகி சில வருடங்கள் குழந்தை பிறக்கலை என்ற அவங்க



ஏக்கம் தீர, அத்தை முதல் முறையா கர்ப்பம் ஆனதும் இரண்டு பேரும் ஆனந்தப்பட்டுக்கிட்டு இருந்தபோது யார் கண் பட்டுதோ ஒரு கார் விபத்தில அவங்க கணவர் இறந்துபோயிட்டாரு. அந்த அதிர்ச்சியில அவங்க கருவும் கலைஞ்சு போயிடிச்சு. ஒரே பிள்ளையான எங்க அத்தையின் கணவருக்குப் பெற்றோர்களும் உயிரோடு இல்லாததால் எங்கப்பா தன் வீட்டிற்குக் கூட்டிக் கொண்டு வரும்போது நியாயமா அவங்களுக்குச் சேர வேண்டிய அவங்க கணவரோட வீடு, நிலம் அவர் வாங்கிக் கொடுத்திருந்த நகைகள் என்று எல்லாத்தையும் அவங்க உறவுக்காரங்க அத்தைக்குக் கொடுத்து அவங்களுக்குப் பிரியாவிடை கொடுத்து அனுப்பியிருக்காங்க. பிறந்த வீட்டிலயும் அவங்க ஓயாமல் உழைக்கற மாதிரி எங்க அம்மாவின் உடல்நிலை மோசமாகி எந்த மருத்துவமும் அவங்க பணிவிடையும் பலன் தராம எங்க அம்மா இறந்திட்டாங்க. சாகற தறுவாயில அவங்க கையைப் பிடிச்சிக்கிட்டு இதுக ரெண்டையும் உங்க குழந்தைகளா நினைச்சுப் பாத்துக்கோங்க என்று சொன்ன மாதிரியே எங்களைப் பெத்த தாய்க்கும் மேல பாசம் காட்டி வளர்த்திருக்காங்க. எனக்காவது எங்க அம்மா நினைவு எப்பவாவது வரும். ஆனா என் தம்பி இவங்களைத்தான் அம்மான்னு கூப்பிட்டுப் பெத்தவங்களா மதிக்கறான். அவன் குழந்தைகளும் இவங்களையே சுத்திச்சுத்தி வரும். இப்ப இவங்களைக் காணாம அதுக சாப்பிடாம சரியா தூங்காம அழுது ரகளை செய்யறதைப் பாத்தா ரொம்ப வேதனாயிருக்கு. எங்க வீட்டு நிலைமை இவருக்கு ஓரளவு தெரிஞ்ச விஷயம்தான். பள்ளிக்கூட வாத்தியாரா இருந்த அப்பாவின் குறைந்த வருவாயில எங்க அத்தையின் பண உதவி இல்லேன்னா நான் விரும்பியபடி முதுகலை படிப்பு, கம்யுட்டர் பயிற்சி எல்லாம் முடித்து இவ்வளவு நல்ல வேலை கிடைத்திருக்குமா? என் கல்யாணத்துக்கு போட்ட நகைகள் எல்லாம் அத்தையின் நகைகளை மாற்றி வாங்கியவைதான். அப்பாவின் ரிடையர்மெண்ட் பணம் திருமணச் செலவுக்கு போதாது என்ற நிலையில் உடனடியாக ஊரிலிருந்த தன் வீடு நிலம் எல்லாவற்றையும் எங்கள் மூவரின் மறுப்பையும் மீறி விற்று திருமணத்தை நன்றாக நடத்தியதோடு மட்டுமல்ல, மீதி பணத்தில்

என் தம்பி பேரில் ஒரு பிளாட்டும் வாங்க வைத்தார். தனக்கென்று ஏதும் சேமிப்பு இருக்கவேண்டும் என்ற சிந்தனையே இன்றி வாழும் அவங்களுக்குப் பொருளாலும் உடம்பாலும் இந்த சமயம் செய்வது என்று நான் முடிவெடுத்துவிட்டேன். பிரபு அவங்களைப் பார்க்ணும்னு துடிக்கிறான். மாமா, பணம் அங்க போனா நான் இந்த வீட்டில இருக்க முடியாதுன்னு உங்க மகன் சொன்னாரில்லை. இன்னும் ரெண்டு மாசத்தில பிரபுவின் பத்தாம் வகுப்புத் தேர்வு முடிஞ்சிடும். அதற்குப் பிறகு நான் டிரான்ஸ்பர் வாங்கிட்டு குழந்தைகளோட எங்க அப்பா வீட்டுக்கே போறதா முடிவு எடுத்திட்டேன். அதுக்கு முன்னாடியே வீட்டைவிட்டுப் போய் இதே ஊரில குழந்தைகளோடு வீடு எடுத்துத் தங்கவும் நான் தயார். ஏதேதோ காரணம் சொல்லி அம்மாவின் ஆலோசனைப் படி அடகு வச்சிருக்கற என் நகைகளை உங்க பிள்ளையை மீட்டுத் தரச் சொல்லுங்க. உடனடியா நானும் கிளம்பிப் போயிட்டே இருப்பேன்." அரை மணிக்கும் மேல் விடாமல் பேசிய சவிதா தொண்டை வரள செம்பில இருந்த நீரை ஒரே மூச்சில் குடித்துவிட்டு ஒரு நாற்காலியில் சென்று அமர்ந்தாள்.



அங்கு நிலவிய ஓரிரு நிமிட கனத்த மௌனத்தை கலைக்கும் விதமாக கனகலிங்கம் பேசத் துவங்கினார்.

"முதல்ல நான் என் மகன்க, மருமகங்க கிட்ட மன்னிப்புக் கேட்டுக்கிறேன். இவ வாய்க்கு பயந்து சில விஷயங்களிலிருந்து நான் ஒதுங்கிப் போனதோட விபரீத விளைவு இப்பத்தான் எனக்குப் புரியுது. எனக்கு வர பென்ஷன், ஊரில் இருக்கும் வீட்டு வாடகைப் பணம் எல்லாத்தையும் இவ சொன்னதை நம்பிட்டு இருந்தேன். கையில கொடுத்திட்டு எல்லா குழந்தைகளுக்காகவும் சேமிக்கறதா நினைச்சிட்டு இருந்தேன். இருங்க. ஒரு நிமிஷத்தில வரேன்!" என்றவர் உள்ளே பீரோவிலிருந்து ஒரு பை, பைல் எல்லாவற்றோடும் வந்தார்.

"அம்மா தேவி, இதில என் வீட்டுப் பத்திரம் உங்கம்மா உன் பெண்ணு பேரில கட்டற சீட்டு எல்லாமிருக்கு. எல்லாத்தையும் எடுத்திட்டுப் போயி உன் கௌரவம் பாழாகாதபடி என்ன தேவையோ எல்லாம் வாங்கிக்க. உங்க அம்மா கூடவந்து உனக்கு ஒத்தாசை பண்ணுவா. எல்லாத்தையும் எடுத்திட்டுப் போ. உங்க அம்மாவையும் வேணுமினா கூடவே கூட்டிட்டுப் போய் வச்சிக்க. என் பென்ஷன் தொகை அவ அக்கவுண்ட்டுக்கு வந்திடும். என்னை எம் பசங்க நல்லப் பாத்துப்பாங்க." சொல்லியவாறே எல்லாவற்றையும் மகள் கைகளில் திணித்தார்.

"இப்ப என்ன ஆயிடிச்சின்னு ரொம்ப ஓவரா பேசறீங்க..." என வாய் திறந்த காமாட்சியை அடக்கினார் கனகலிங்கம்.

"ஏய் நிறுத்து, இதுக்கு மேல ஒருவார்த்தை பேசினே... நான் என்ன செய்வேன்னு எனக்கே தெரியாது. இவ்வளவு வருஷமா சீட்டுக் கட்டிட்டு வரயே நம்ம பேத்திங்க ரெண்டுக்கும் ஒரு திருகாணியாவது வாங்கித் தந்திருப்பியா, அம்மாவும் பெண்ணுமா இவ்வளவு கீழ்த்தரமா நடந்துக்கிட்டு இன்னும் என் பசங்க உழைப்பையும் உறிஞ்சப் பாக்கறீங்களே! வெக்ககேடு...."

"விடுங்க மாமா." என ஏதோ சொல்ல வருபவளைத் தடுத்தவராய், "சவிதா, இன்னிக்கு உன் பேச்சால என் குருட்டுக் கண்ணைத் திறந்துவிட்டுட்டே. உன்னை இந்த வீட்டைவிட்டுப் போன்னு சொல்ற உரிமை இங்க யாருக்கும் கிடையாது. இந்த வீடு உன் உழைப்பையும் சேர்த்து உருவானதுதான்! இதை மறந்துட்டுப் பேசற என் பிள்ளை சார்பா நான் உங்கிட்ட மன்னிப்புக் கேட்டுக்கறேன். நீ உன் அத்தைக்கு தேவையான பணஉதவி செய்யறதை யாரும் தடுக்கமுடியாது. அதோடு நீ லீவு போட்டிட்டு ஊருக்குப் போய் எவ்வளவு நாள் வேண்டுமானாலும் அவங்க கூட உதவிட்டு வா. குழந்தைகளைப் பத்தி கவலைப் படாதே. நான் அவங்களை நல்லாப் பாத்துக்கறேன். இனிமே இந்த வீட்டில என் மேற்பார்வையில எல்லாம் சரியா நடக்கும். பொன்னம்மா, சாப்பாடு ரெடியா எல்லாருக்கும் தட்டு போடு. ஆட்டோ சத்தம் கேக்குது. பசங்களும் வந்துட்டாங்க போலிருக்கு!"

பேசிக்கொண்டே மிடுக்காக நடந்து செல்லும் அப்பாவை சந்தோஷமாக ஓடிச்சென்று சங்கர் அணைத்துக் கொள்ள, காமாட்சி, ராகவன், தேவி ஆகியோர் மிரண்டு நின்றனர்.

ஆளுமை


# அறிவோம் தமிழர்

## வழிகாட்டும் கலாமின் கனவுத் திட்டம்!

இன்று எங்கும் புதிய தலைமைத்துவத்துக்கான தேடல் நிலவுகிறது. குறிப்பாக நாட்டை வழிநடத்த, சமூகத்தை வழிநடத்த, நிறுவனத்தை வழிநடத்த, இயக்கத்தை வழிநடத்த; போரை, வன்முறையை, வன்மத்தைக் கட்டவிழ்த்து விட்டு மக்களைப் பிரித்து அமைதியில்லாத சூழலுக்குத் தள்ளும் சுயநல மேதாவி தலைமைகளை நாம் நாடுகளில், சமூகங்களில் பார்த்து வருவதால் மாற்றுத் தலைமை தேவைப்படுகிறது.

மறைந்த முன்னாள் குடியரசுத் தலைவர் ஏ.பி.ஜெ.அப்துல் கலாம் ஓர் அறிவியலாளராக தொழில்நுட்பவாதியாக அரசில் செயல்பட்டு நாட்டின் உயர்ந்த பதவியை அலங்கரித்த மாபெரும் இந்திய மக்களின் தலைவர். அவர் புகழப்படுவது, போற்றப்படுவது அவர் வகித்த பதவியால் அல்ல; அவர் விட்டுச் சென்ற ஒரு மாபெரும் கனவாலும்தான்; 'இந்தியா 2020' என்பது அவர் தயாரித்த ஒரு கனவுத் திட்டம்.

இந்தியா என்ற நாடு இருக்கிறது; அங்கு மக்கள், அரசு நிர்வாகக் கட்டமைப்பு, அரசியல் கட்சிகள், தொழில்சாலைகள், கல்விச் சாலைகள், விவசாயிகள், ஊடகங்கள், குடிமைச் சமூகங்கள் என அனைத்தும் செயல்பட்டுக் கொண்டுதான் இருக்கின்றன. இருந்தபோதும், நம் நாட்டை விடுதலை செய்ய மக்களுக்கு வழிகாட்டிய தலைவர்கள் கண்ட கனவு சுதந்திரத்துக்குப் பிறகு நனவானதா என்ற கேள்வியில் இவர் தொடங்கி, இல்லை என்ற நிலையில், அதை இந்தியாவுக்கு தலைமை வகிக்கும் நாம் ஏன் செய்யக்கூடாது என்று முடிவு எடுத்து உருவாக்கியதுதான் இந்தக் கனவு 'இந்தியா 2020'.




அன்றைய சூழலில் அரசும், நிர்வாகமும், அரசியலும் உளுத்துப் போய்க் கொண்டிருப்பதை நல்லவர்கள் பார்த்து ஆதங்கப்படுவதைத் தவிர வேறு ஏதும் செய்ய இயலாமல் வாளா இருப்பதைக் கண்ட இவர், புதிய கனவில் இவர்களை இணைக்க முயன்றார். காரணம், இவரின் கனவு ஒரு துறைக்கானதோ அல்லது பகுதிக்கானதோ அல்ல; ஒட்டுமொத்த நாட்டுக்கானது; நாட்டு மக்களுக்கானது.

இந்தக் கனவை நிறைவேற்ற அரசுக் கட்டமைப்பு மட்டும் போதாது. அதற்கு மக்களின் ஒத்துழைப்பும் ஒட்டு மொத்த இந்தியாவும் கிளர்ந்தெழ வேண்டும்; சுதந்திரப் போராட்டத்துக்கு மக்கள் தியாகம் செய்யப் புறப்பட்டதுபோல், இந்தச் செயல்பாடுகளுக்கு தேவை தியாகம் அல்ல; நாட்டுப்பற்றுடன் தாங்கள் செய்யும் அனைத்துப் பணிகளையும் அறப்பணியாக செய்தாலே போதுமானது. அனைத்தும் நாட்டுக்கான பணியாக மாறிவிடும்.

இந்தியா ஒரு வளர்ந்த நாடாக உருவாக வேண்டும் என்ற கனவு செயல்திட்டமாக்கப்பட்டு அறிக்கையாக வரும்போது, அதை நிறைவேற்றுவதற்கு எல்லா தரப்பிலும் அதாவது நாடாளுமன்றம், சட்டப்பேரவை, நிர்வாகம், நீதித் துறை, கல்வித் துறை, தொண்டு நிறுவனங்கள், தொழில் துறை, ஊடகங்கள், குடிமக்கள், உள்ளாட்சி மன்றங்கள், மாணவர்கள், ஆசிரியர்கள், அரசுப் பணியாளர்கள், கல்வியாளர்கள், பொதுக் கருத்தாளர்கள் அனைவரும் ஒரு நாட்டு மேம்பாட்டுக்கான மக்கள் இயக்கத்தில் செயல்படுகிறோம் என்ற உளவியலுக்கு தங்களைத் தயார்படுத்திக் கொண்டு புதிய பார்வையில், புதிய மனநிலையில் செயல்பட்டால் மட்டுமே இது சாத்தியம் என்பதைப் புரிந்துகொண்ட அவர்,



# பெருமை

அனைவரையும் இணைக்க முயற்சிக்கிறர்.

இந்தக் கருத்துகளை எல்லா தரப்பிலும் கொண்டு சேர்த்து மக்களின் மன ஓட்டத்தைக் கண்டறிகிறர். இந்த நாட்டில் நடந்த பல நற்செயலுக்கு ஒவ்வொரு இடத்திலும் நாடும், மக்களும்தான் முக்கியம் என்ற உணர்வில் பலர் பல சவால்களைப் போராடி சமாளித்து செயல்பட்டதால்தான் சாத்தியப்பட்டிருக்கிறது. இந்த நல்லவர்களை இணைத்து நற்செயல்கள் நடைபெறும்போது நாம் பர்க்கும் அவலங்களும், அதற்குக் காரணகர்த்தாக்களாக இயங்கும் மனிதர்களையும் மாற்றிவிட முடியும் என்ற உத்தியை இவர் அறிமுகப்படுத்துகிறர்.


இந்த நாட்டில் இருக்கும் வறுமையை ஒழிப்பதோ, எல்லோருக்கும் தரமான கல்வியைத் தருவதோ, வேலைவாய்ப்பை உருவாக்குவதோ, தரமான மருத்துவ வசதிகளைச் செய்து ஏழைகளும் உலகத் தரத்தில் மருத்துவ வசதிகளைப் பெறுவதும், எல்லா குடும்பங்களும் தேவையான அடிப்படை வசதிகளைப் பெற்று மதிக்கத்தக்க மானிட வாழ்க்கையை வாழ்வது சாத்தியம்தான். அது எப்போது என்றால், இந்திய மக்களாகிய நாம் ஒன்றுபட்டு, நாட்டுக்காக செயல்படும்போதுதான் என்ற நம்பிக்கையை முன்வைக்கிறர் தனது கனவு 2020 அறிக்கையில்.

க. பழனித்துரை


இன்று நம் அரசும், அரசியலும், நிர்வாகமும் மக்களின் அறியாமையில் காலத்தை கடத்துகின்றன என்பதை அவர் எடுத்து விளக்கத் தவறவில்லை. இந்தியா வளர்ச்சி பெற்ற நாடாக உலக அளவில் மதிக்கத்தக்க நாடாக மாற பொருளாதார வளர்ச்சி தேவை. அதைச் சாத்தியப்படுத்த எப்படியெல்லாம் ஒவ்வொரு துறையும் செயல்பட வேண்டும் என்று ‘இந்தியா 2020’—இல் விளக்கப்பட்டுள்ளது.

இந்த ‘இந்தியா 2020’ பொருளாதார வளர்ச்சியை மட்டும் பேசவில்லை; ஒட்டுமொத்த இந்திய சமூகத்தின் மேம்பாடு பற்றியும் விவாதிக்கிறது. இந்த அறிக்கை ஒரு கனவை புதினமாக சித்தரிக்கவில்லை. அனைத்தையும் செயல் திட்டங்களாக்கித் தந்துள்ளது. இந்த செயல் திட்டங்களைக் கூர்ந்து கவனித்துப் படித்தால் ஒவ்வொரு ஊரிலும் நற்சிந்தனை கொண்டோர், நாட்டுப்பற்று மிக்கோர், ஒன்றிணைந்து செயல்பட்டால் வளர்ச்சியடைந்த கிராமத்தை மேம்பட்ட கிராமத்தை உருவாக்க முடியும்.


இதற்கு சான்றோர், நற்சிந்தனை கொண்டோர் இணைதல் வேண்டும்; அவர்கள் இணைந்து அரசுடன் கைகோக்க வேண்டும்; எல்லா அரசு அமைப்புகளுடன் மக்கள் அமைப்புகள் கைகோக்க வேண்டும்; ஒரு கிராம ஊராட்சி எப்படி மக்களுடன் இணைய வேண்டும், மக்கள் கிராம ஊராட்சியில் எப்படி இணைய முடியும் என்பதுவரை கோடிட்டுக் காட்டியுள்ளர் அந்த அறிக்கையில். இவரின் பெருங்கனவு வல்லுநர்களின் உதவியால் செயல்திட்டமாக்கப்பட்டது; இந்த அறிக்கை கனவாக உருவாகி, செயல்திட்டமாக வடிவெடுத்து ஒவ்வொரு தனிமனிதரும் எப்படி



பொறுப்புமிக்கவராக செயல்பட்டு இந்த வேள்வியில் தங்களைக் கரைத்துக் கொள்ள முடியும் என்பதை மிக எளிமையாக தமிழில் விளக்கப்பட்டுள்ளது. இதில் ஒரு பகுதி நடந்தேறி இருக்கிறது; அரசு பல முயற்சிகளை பொருளாதார மேம்பாட்டுக்கு கொள்கை முடிவுகள் மூலம் செயல்பட்டு பொருளாதாரத்தை உயர்த்தி இருக்கிறது. ஆனால், அதன் விளைவாக சாதாரண மனிதன் ஏழை, எளிய மக்களின் வாழ்க்கையில் ஏற்பட வேண்டிய ஏற்றங்கள் ஏற்படவில்லையே என்று பர்க்கும்போது, நம் சமூகம் அரசுடன் இணையத் தயாராக்கப்படவில்லை என்பதை நம்மால் உணர முடிகிறது.




அப்துல் கலாம் ஒருமுறை எங்கள் பல்கலைக்கழகத்துக்கு வந்து நாங்கள் செய்த பணிகளைப் பர்த்துவிட்டு, மக்களுடன் பணி செய்ய மாநிலத்துக்கு ஒரு ஊரக மேம்பாட்டுப் பல்கலைக்கழகம் தேவை என பிரகடனப்படுத்தினர். அதன்பிறகு, என்னை குடியரசுத் தலைவர் மாளிகைக்கு அழைத்து விவாதித்து தொழில்நுட்பம், அறிவியல் இல்லாத கிராம மேம்பாட்டுத் திட்டம் மக்களை மேம்பாடு அடையச் செய்யாது எனக் கூறி, அவர் எழுதிய ஒரு கட்டுரையை எனக்குத் தந்து நீங்கள் உபயோகப்படுத்திக் கொள்ளுங்கள் எனக் கேட்டுக் கொண்டர். அதன் அடிப்படையில்,"புதிய பஞ்சாயத்து அரசாங்கம்: பஞ்சாயத்தை வலுப்படுத்த இளையோர் சக்தி இயக்கம்' என்ற தலைப்பில் ஒரு புத்தகம் எழுதினேன்.




இன்றைய எதிர்மறை அரசியல், ஊழல் நிறைந்த நிர்வாகம் இருந்தபோதும், அவற்றை மாற்ற நேர்மறையாகப் பணியாற்றி எப்படி சூழலை மாற்ற முடியும் என்பதற்கு அந்த அறிக்கையில் பன்னிரெண்டாம் அத்தியாயத்தில் தொலைநோக்கு நனவாக"என்ற இயலில் மிகத் தெளிவாக விளக்கியுள்ளர். இவ்வளவு சவால்கள் இருந்தபோதும் பல வாய்ப்புகள் இருப்பதைக் கோடிட்டுக் காட்டி, அந்த சவால்களைச் சமாளித்து வாய்ப்புகளை எடுக்க நாம் செய்ய வேண்டியது ஒவ்வொரு இடத்திலும் நல்லவர்களைக் கண்டறிந்து அவர்களை இணைப்பது; இணைத்து நேர்மறையாகச் செயல்பட்டுக் காண்பிப்பது; அதன்மூலம் அனைவருக்கும் நம்பிக்கையை ஏற்படுத்துவது. இவற்றை மிகத் தெளிவாக அந்த இயலில் விளக்கியுள்ளர்.




இந்தச் செயல்பாடுகளில் மாணவர்களையும் இளைஞர்களையும் இணைப்பதில் இந்தியாவில் கல்விச் சாலைகளைத் தேடித்தேடிச் சென்று மாணவர்களிடம் உரையாற்றி ஒரு புதுச் சிந்தனையை உருவாக்கினர். அதன் விளைவுதான் மக்களின் அறியாமையைப் பயன்படுத்தி சுயநலம் பேணும் அதிகார அரசியலும் பொறுப்பற்ற செயல்பாடுகளும் நிகழும் சூழலில் எண்ணற்ற இளைஞர்கள் நான் இல்லை என்றால் யர் என்று பொறுப்பெடுத்து நல்லவர்களை இணைத்து செயலில் கரைந்துள்ளனர்.

இந்த இளைஞர்கள் கூட்டத்தின் எண்ணிக்கையைக் கூட்டுவதற்கு இன்று பல முன்னெடுப்புகள் நடைபெற்றுக் கொண்டுள்ளன. அவர் கண்ட கனவு இந்த நாட்டுக்கானது நம் சமூகத்துக்கானது. எனவே, அவரது நினைவு நாளில் நாம் ஒவ்வொருவரும் பொறுப்புள்ளவராக 'இந்தியா 2020'—ஐ படித்து 'இந்தியா 2047'—ஐ உருவாக்கி, ஒவ்வொரு கிராமத்திற்கும், ஒவ்வொரு நகரத்திற்கும் ஒவ்வொரு மக்கள் நிறுவனங்களுக்கும் திட்டம் தீட்டப் பொறுப்பேற்பதாக சபதம் எடுப்போமாக.


VARSHA™
Ready to Cook
Made with Quality Natural Products
Idli / Dosa Wet Mix
இட்லி / தோசை மாவு
ఇడ్లీ దోస పిండి
ಇಡ್ಲಿ ದೋಸೆ ಹಿಟ್ಟು
ഇഡ്ഡലി / ദോശ മാവ്
CRISPY DOSA * SOFT & FLUFFY IDLI
100% Pure Vegetarian
ઈડલી ડોસા નું ખીરું
इडली/ दोसा आटा




## மூன்றாம் பாகம் : பிக்ஷுவின் காதல்


### வளையற்காரன் 52

**நா**கநந்தி என்ற பெயரைக் கேட்டவுடனே அங்கிருந்தவர் அனைவருக்கும் தூக்கி வாரிப்போட்டது.

மாமல்லர், "ஆஹா! புத்த பிக்ஷுவா? அப்படியானால் குண்டோதரன் கூறிய செய்தி பொய்யா?" என்று சொல்லிய வண்ணம் குண்டோதரனை நோக்கினார்.

"இல்லை, பிரபு! குண்டோதரன் கூறிய செய்தி உண்மைதான். வாதாபிக்கு வரும் வழியில் பிக்ஷு வேங்கி நகரத்துக்குத்தான் போனார். துரதிர்ஷ்டவசமாக நேற்றுத் திரும்பி வந்துவிட்டார். அவருடைய வரவினால் நம்முடைய காரியம் ஒன்றுக்குப் பத்து மடங்கு கடினமாகி விட்டது. இன்னும் இரண்டு நாளைக்கு முன்னால் மட்டும் நாம் வந்திருந்தால்?...." என்றான் சத்ருக்னன்.

"பிக்ஷு நேற்றுத்தான் திரும்பி வந்தாரா? உனக்கு எப்படித் தெரியும், சத்ருக்னா!" என்று சேனாபதி பரஞ்சோதி வினவினார்.




"நகரமெல்லாம் அதைப்பற்றித்தான் பேச்சு, தளபதி! ஜனங்கள் பேசிக் கொண்டதிலிருந்துதான் தெரிந்து கொண்டேன். புலிகேசியின் சகோதரன் விஷ்ணுவர்த்தனன் சென்ற வருஷம் வேங்கி மன்னனாக முடிசூட்டிக் கொண்டானல்லவா? எந்த வேளையில் மகுடாபிஷேகம் செய்து கொண்டானோ, தெரியவில்லை. சில நாளைக்கு முன்பு அவன் மாண்டு போனான். அவனுடைய மனைவியையும் ஆறு மாதத்துக்கைக்குழந்தையையும் அழைத்துக் கொண்டு நாகநந்தி நேற்றுத் திரும்பி வந்தாராம்" என்று சத்ருக்னன் கூறினான்.


"சளுக்க சாம்ராஜ்யத்தின் அஸ்தமனம் நெருங்கி விட்டது என்று பல்லவேந்திரர் கூறியது வீண்போகவில்லை. விஷ்ணுவர்த்தனன் எப்படி இறந்தானாம்?" என்று பரஞ்சோதி கேட்டார்.


"விஷ்ணுவர்த்தனன் வேங்கிப் படைகளை முழுவதும் நாசம் செய்ய முடியவில்லை. நம்முடைய சக்கரவர்த்தி சொல்லி அனுப்பியிருந்தபடி வேங்கிப் படைகள் பின்வாங்கிச் சென்று கிருஷ்ணை கோதாவரி நதிக் கரைக் காடுகளில் ஒளிந்து கொண்டிருந்தன. விஷ்ணுவர்த்தனன் முடி சூட்டிக்கொண்ட பிறகு நாடெங்கும் கலகங்கள் மூண்டன. ஒளிந்திருந்த படை வீரர்கள் அங்கங்கே திடீர் திடீரென்று கிளம்பித் தாக்கினார்கள். கலகத்தைத்தானே அடக்கப் போவதாக விருது கூறிக் கொண்டு விஷ்ணுவர்த்தனன் கிளம்பினான். ஒரு சண்டையில் படுகாயமடைந்து விழுந்தான். நாடெங்கும் கலகங்கள் அதிகமாயின. இந்த சமயத்தில்தான் நாகநந்தியும் அங்கே போய்ச் சேர்ந்தார். விஷ்ணுவின் மனைவியையும் குழந்தையையும் கொண்டு வந்து சேர்த்தார். விஷ்ணுவர்த்தனன் மனைவி துர்விநீதனுடைய மகள் என்பது தங்களுக்குத் தெரியுமல்லவா, பிரபு?"

"அதைப் பற்றியெல்லாம் இப்போது என்ன கவலை, சத்ருக்னா? நாம் வந்த காரியத்தைப் பற்றிச் சொல்லாமல் ஊர்க்கதையெல்லாம் சொல்லிக் கொண்டிருக்கிறாயே? மேலே நடந்ததைச் சொல்லு!" என்றார் மாமல்லர்.




"நாகநந்தி பிக்ஷுவைப் பார்த்து வியப்பும் திகைப்பும் அடைந்த சிவகாமி அம்மை, சீக்கிரத்தில் சமாளித்துக் கொண்டு பல்லக்கில் போய் ஏறினார். பல்லக்கைச் சற்றுத் தூரம் நான் தொடர்ந்து சென்றேன். ஆரவாரமின்றி அமைதி குடிகொண்டிருந்த ஒரு வீதிக்குள் பல்லக்குச் சென்று அழகான மாளிகை ஒன்றின் வாசலில் நின்றது. சிவகாமி அம்மை பல்லக்கிலிருந்து இறங்கி அந்த மாளிகைக்குள்ளே போனார். வீதி முனையிலேயே நான் கொஞ்ச நேரம் நின்று என்ன செய்யலாம் என்று யோசித்தேன். பிறகு மாளிகை வாசலை நெருங்கினேன். காவலாளிகள் இருவர் அங்கு இருந்தார்கள். அவர்களைப் பார்த்து, 'காஞ்சி நகரத்து நாட்டியப் பெண் இருப்பது இந்த வீட்டிலே தானே?' என்று கேட்டேன். 'ஆமாம்! எதற்காகக் கேட்கிறாய்?' என்றார்கள். 'நான் வளைச் செட்டி. அழகான வளைகள் கொண்டு வந்திருக்கிறேன், அம்மையிடம் காட்ட வேண்டும்' என்றேன். 'இரவு நேரத்தில் இந்த வீட்டுக்குள் யாரும் புகுவதற்கு அனுமதியில்லை, நாளைப் பகலில் வா!' என்றார்கள். சற்று நேரம் அவர்களுடன் வம்பு பேசிப் பல விஷயங்கள் தெரிந்து கொண்டேன். சிவகாமி அம்மையும், ஒரு தோழியும் சமையற்காரியும் மட்டும் அந்த வீட்டுக்குள் இருப்பதாகவும், வேறு யாரும் இல்லை, வருவதுமில்லையென்பதாகவும் தெரிந்து கொண்டேன். ஒரே ஒரு தடவை புலிகேசிச் சக்கரவர்த்தி அங்கு வந்து இராஜ சபையில் நடனம் ஆடும்படி கேட்டாராம். அம்மை அதை மறுத்து விட்டபடியால் இம்மாதிரி வாதாபி வீதிகளில் தினம் நாட்டியமாடும்படி தண்டனை விதித்தாராம். இதை அறிந்ததும் எனக்குக் கோபம் கோபமாய் வந்தது. மனத்திற்குள்ளே அந்தக் கொடுமனம் படைத்த ராட்சதப் பதரைத் திட்டிக்கொண்டு கிளம்பினேன். வீதி முனைக்குச் சென்றதும் ஒரு பக்கத்திலிருந்து தீவர்த்திப் பிடித்த காவலர்கள் புடைசூழ ஒரு பல்லக்கு வருவதைக் கண்டேன். ஒரு






வீட்டுத் திண்ணையில் தூணின் பின்னால் ஒளிந்து கொண்டு பல்லக்கில் வருவது யார் என்று கவனித்தேன். நான் எதிர் பார்த்தது போலவே நாகநந்தி பிக்ஷுதான் பல்லக்கில் இருந்தார்....”

அப்போது நறநறவென்று, மாமல்லர் பல்லைக் கடிக்கும் சத்தம் கேட்டது. சேனாபதி பரஞ்சோதி குறுக்கிட்டு, “சத்ருக்னா! ஏன் கதையை வளர்த்திக் கொண்டே போகிறாய்? அம்மையைச் சந்தித்துப் பேசினாயா? ஏதாவது செய்தி உண்டா? அதைச் சொல்லு!” என்றார்.

பரஞ்சோதியைச் சிறிது கோபமாக மாமல்லர் பார்த்துவிட்டு, “சத்ருக்னா! எதையும் விடவேண்டாம், நாகநந்தி எங்கே போனார்? சிவகாமியின் வீட்டுக்குள்ளேயா?” என்று வினவினார்.

“ஆம், பிரபு! அம்மையின் மாளிகைக்குள்தான் போனார். ஒரு நாழிகை நேரம் வீட்டுக்குள்ளே இருந்துவிட்டு வெளியேறினார். அந்த ஒரு நாழிகை நேரமும் நானும் அந்த வீதியிலேயே சுற்றி வந்து கொண்டிருந்தேன். ஒரு தடவை வீட்டு வாசலுக்கு அருகில் சென்று காவலரில் ஒருவனிடம், ‘சமீபத்தில் சத்திரம் சாவடி எங்கேயாவது இருக்கிறதா?’ என்று விசாரித்தேன். அப்போது உள்ளே சிவகாமி அம்மை புத்த பிக்ஷுவின் தலையில் நெருப்புத் தணலைக் கொட்டிக் கொண்டிருந்தார். அவ்வளவு கோபமாக அவர் பேசியது என் காதில் விழுந்தது. அதில் எனக்குப் பரம திருப்தி ஏற்பட்டது...”

“இங்கே எல்லோருக்கும் அப்படித் தான்!” என்றான் குண்டோதரன்.

“அதே வீதியில் இருந்த ஒரு சத்திரத்தில் படுத்து இரவு நிம்மதியாகத் தூங்கினேன். இன்று பொழுது விடிந்து சற்று நேரம் ஆனதும் அம்மையின் மாளிகைக்குப் போனேன். என்னைப் பார்த்ததும் சிவகாமி அம்மைக்கு ஒரே வியப்பாய்ப் போய் விட்டது. பக்கத்திலிருந்த தோழியை ஏதோ காரியமாக உள்ளே போகச் சொல்லிவிட்டு, ‘சத்ருக்னா! இது என்ன? காஞ்சிக்கு நீ போகவில்லையா? என்னைப் பின்தொடர்ந்தே வந்துவிட்டாயா?’ என்று கேட்டார். ‘இல்லை, அம்மணி! காஞ்சிக்குப் போய் மாமல்லரிடம் தாங்கள் கூறிய செய்தியைச் சொன்னேன். அவரும் வந்திருக்கிறார், சேனாபதியும் வந்திருக்கிறார்!’ என்றேன்.

இதைக் கேட்டதும் அம்மை உற்சாகமும் பரபரப்பும் அடைந்து, ‘சைனியம் எங்கே இறங்கியிருக்கிறது?’ என்று கேட்டார். சைனியத்தோடு வரவில்லையென்றும், மாமல்லரோடு சேனாபதியும் கண்ணபிரானும் வந்திருக்கிறார்கள் என்றும், கோட்டைக்கு வெளியே இந்த மலையடிவாரத்தில் இறங்கியிருக்கிறார்கள் என்றும் தெரிவித்தேன். நாளை அமாவாசை இரவில் எல்லோரும் வருகிறோம் என்றும், தோழிப் பெண்ணை எங்கேயாவது அனுப்பிவிட்டு நம்முடன் புறப்பட ஆயத்தமாயிருக்க வேண்டும் என்றும் சொல்லி விட்டு வந்தேன்!” என்று சத்ருக்னன் முடித்தான்.

“சத்ருக்னா! சிவகாமி முடிவாக என்ன சொன்னாள்? ஏதேனும் செய்தி உண்டா?” என்று மாமல்லர் கேட்டார்.

“ஒன்றுமில்லை, பிரபு! அம்மை அதிகமாகப் பேசாமல் அமாவாசை இரவு நம்மை எதிர்பார்த்துக் கொண்டிருப்பதாகச் சொல்லி எனக்கு விடை கொடுத்தார் அவ்வளவுதான்!” இதைக் கேட்ட மாமல்லர் சிந்தனையில் ஆழ்ந்தார்.

(சபதம் தொடரும்)


படைப்பாளிகளுக்கு...
* சிந்திப்போம்..
* படைப்போம்..
* மகிழ்வோம்!
*இதழில் வெளியாகிற
கவிதைகள்,கட்டுரைகள்,எழுத்தோவியங்கள்
யாவும் படைப்பாளிகளின்
பெருமைக்கும் பொறுப்புக்கும் உரியவை!
தொடர்புகளுக்கு
editor@ithamil.com



# பசுமை

## இயற்கையை பாதுகாப்போம்!

“இயற்கையின் அழகை நன்கு உணர்ந்ததற்கும், அதன் அழகான பரிமாணங்களின் சமய உணர்வுகளைக் கண்டதற்கும் நம் முன்னோர்களை நான் மனதார தலை வணங்குகிறேன்’— என்று மகாத்மா காந்தி கூறியுள்ளனர்.இயற்கை என்பது பொதுவாக இயற்கையாக நிகழும் எல்லாவற்றையும் குறிக்கும். இது உயிரினங்கள், உயிரற்ற பொருள்கள், அவற்றின் செயல்பாடுகள் அனைத்தையும் உள்ளடக்கியது. சுருக்கமாக இயற்கையானது மனிதனால் உருவாக்கப்படாத அனைத்தும் ஆகும்.

இயற்கை நமக்குக் கிடைத்த வரம்; அள்ள, அள்ளக் குறையாத அட்சய பாத்திரம்; இயற்கைக்கு மனிதனைப் போன்று சுயநலமில்லை. அனைத்திலும் பொதுநலம் பார்க்கும் இயற்கையானது நமக்கு தூய காற்றையும், நீரையும் வழங்குவதோடு, உணவு, உடை, உறைவிடத்துக்குத் தேவையான அத்தனை மூலப்பொருள்களையும் வழங்கி நம்மை வாழ்விக்கிறது.

மனித வாழ்வானது இயற்கையோடு இணைந்ததாக காணப்படுகிகின்ற போதே ஆரோக்கிமானதொரு வாழ்க்கையாக திகழும். நீர், நிலம், ஆகாயம், காற்று, நெருப்பு போன்ற இயற்கையான பஞ்சபூதங்கள் அனைத்தும் எம் அன்றாட தேவைகளில் முக்கியத்துவம் பெறுபவை ஆகும். உயிர் வாழ்வது தொடங்கி மன அழுத்தங்களை குறைப்பது வரை எமது அன்றாட தேவைகளை நிறைவேற்றிக்கொள்ளவும் இயற்கையே உதவி செய்கின்றது. எமக்கு விலைமதிப்பற்ற வளங்களை அளிக்ககூடிய இயற்கையானது பல காரணங்களால் இன்று மாசடைந்து கொண்டு வருகின்றது. அதாவது இயற்கையின் மாசடைவிற்கு பிரதானமான காரணம் மனிதர்களது செயற்பாடுகளே ஆகும்.

மனிதானவன் பல்வேறு தொழிற்சாலைகளை அமைக்கும் நோக்கில் காடுகளை அழிக்கின்றான் இதன் காரணமாக சூழலானது அழிவுக்குட்படுகின்றது.மேலும் கழிவுகளை நீர் நிலையில் இடல், நெகிழிப்பாவனை, மண்வளம் சுரண்டப்படல், வாகனப்புகை, மரங்களை வெட்டுதல், இரசாயண கிருமிநாசினிகளின் பயன்பாடு என பல்வேறு செயற்பாடுகளால் இயற்கையானது மாசடைந்து கொண்டு வருகின்றது.




இன்று பல்வேறு வகையான இயற்கை அழிவுகள் ஏற்படுகின்றதாயின் அதற்கானதொரு பிரதானமான காரணம் மனிதர்களே ஆவர். அதாவது மனிதனானவன் மண்வளத்தை சுரண்டுவதன் மூலமாக மண்சரிவு ஏற்படுகின்றது. அதேபோன்று காடுகள், மரங்களை அழித்து மழை வளத்தினை குன்றச் செய்து வறட்சி ஏற்பட காரணமாகின்றான். இதன் காரணமாக இன்று பருவநிலை மாற்றங்கள் மாறி மாறி இடம் பெறுவதோடு



# அகம்!

பி.ஜெயச்சந்திரன்

பல்வேறு நோய்களுக்கும் இயற்கை அழிவுக்கும் மனிதர்கள் இலக்காகி வருகின்றனர். அதாவது சூறாவளி, சுனாமி போன்ற பேரழிவுகள் இடம்பெறுகின்றன. இத்தகைய இயற்கை அழிவில் இருந்து எம்மை காக்க வேண்டுமாயின் இயற்கையை நேசிக்க கற்று கொள்ள வேண்டும்.

பண்டைய மனிதர்கள் இயற்கையோடு ஒத்திசைந்த வாழ்வையே மேற்கொண்டு இருந்தனர். இயற்கையையும், அதன் படைப்புகளையும் வழிபடுதல் என்பதே இந்தக் கோட்பாட்டின் அடிப்படையாக இருந்தது. காலம் மாற, மாற நாம் இயற்கை வளங்களை, அதன் நீடித்த இருப்பைப் பற்றிக் கவலைப்படாமல் சூறையாடி வருகிறோம். பிரபஞ்சத்தில் எண்ணற்ற கிரகங்கள் இருந்தாலும் மனிதனும், மற்ற உயிரினங்களும் வாழ்வதற்குத் தேவையான இயற்கை வளங்கள் நிறைந்தது பூமி மட்டுமே. விஞ்ஞானமும், தொழில்நுட்பமும் வளர்ச்சி பெற்றிருக்கும் இந்த நேரத்தில், நமது தேவைகளுக்காக இயற்கை வளங்களை அழிப்பது தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

இந்த இனிய பூமி அனைத்து உயிர்களும் நலமுடன் வாழ உகந்த இயற்கையான சூழல் அமைப்பு கொண்டு விளங்குகிறது. தன்னைத் தானே சமநிலை செய்துகொள்ளும் இயற்கையின் ஒழுங்கமைவை மனித இனம் இப்போது குலைத்து புவியை வருங்காலங்களில் உயிர் வாழ்வதற்கு தகுதியற்றதாக செய்து வருகிறது; இது குறித்த விழிப்புணர்வைத் தோற்றுவித்து சூழலைக் காக்க வேண்டியது தற்போதைய அவசரத் தேவை.

உயிர்களின் வளர்ச்சிக்குத் தேவையான எல்லாவற்றையும் இயற்கைத் தருகிறது. காடுகள், நுண்ணுயிரிகள், ஆறு, ஏரி, கடற்பகுதிகள், மண் வளம், மேகங்கள்; ஏன் ஒவ்வொரு மழைத்துளியும்கூட, இயற்கையின் கொடைதான்.



இதில் ஒன்றை இழந்துகூட மனிதர்கள் வாழவே முடியாது. சூறாவளி மற்றும் மழை நீரால் ஏற்படும் மண் அரிப்புகளைத் தடுப்பதில் மரங்களுக்கு முக்கியப் பங்கு உண்டு. மரங்களை நட்டு பராமரிப்பதன்மூலம் மண் அரிப்பை முழுமையாக தடுத்து விடலாம்.

அச்சுறுத்தலுக்கு உள்ளாகியுள்ளன. சூழலியலைப் பாதுகாத்தல், பருவ நிலை மாற்றத்தைத் தடுத்தல் ஆகியவற்றுக்கான அபரிமிதமான சவால்கள் கடினமானவையாக உள்ளன. நமது நடத்தை முறையிலும், சிந்தனை முறையிலும் அவை மாற்றத்தைக் கோருகின்றன.



சுற்றுச்சூழலைப் பராமரிப்பதற்கும், மரங்கள் அவசியம். பறவைகள், பூச்சி இனங்கள் உள்ளிட்டவற்றுக்கு புகலிடமாக மரங்களும், செடிகளும்தான் விளங்குகின்றன. வன விலங்குகளின் வாழ்விடமாகவும், அவற்றின் பாதுகாப்பு இடமாகவும் காடுகள் விளங்குகின்றன.


மனித நினைவுக்கு முற்பட்ட காலத்திலிருந்தே, மனித இனத்துக்கு காடுகளின் முக்கியத்துவம் குறித்த அங்கீகாரம் இருந்துவந்துள்ளது. மரக்கட்டை, உண்ணக்கூடிய பொருள்கள், எரிபொருளாக விறகு, மூலிகைத் தாவரங்கள் ஆகியவற்றுக்கான ஆதாரமாக காடுகள் பார்க்கப்படுவதோடு, வனவிலங்குகளின் வசிப்பிடமாகவும் காடுகள் உள்ளன. வன வளம் என்பது மரங்களின் அடர்த்தியான வளர்ச்சி, மற்ற தாவரங்களுடன் சேர்ந்து, ஒரு பெரிய நிலப்பரப்பை உள்ளடக்கியது. பசுமைப் போர்வைபோல, பூமியை மூடியிருக்கும் இந்தக் காடுகள் எண்ணற்ற பொருள்களை உற்பத்தி செய்வது மட்டுமின்றி, வாழ்க்கைக்கு அத்தியாவசியமான பல சுற்றுச்சூழல் சேவைகளையும் வழங்குகின்றன.


உலகளாவிய வெப்பமயமாதல் மற்றும் பருவநிலை மாறுதல் ஆகியவற்றால், தற்போது மனித வாழ்க்கைக்கு நிச்சயமான அச்சுறுத்தல்கள் இருக்கின்றன. உலகின் கோடிக்கணக்கான மக்களின் வாழ்க்கையும், இருப்பிடங்களும்

தண்ணீரின் தரத்தை அளவிடும்போது, அதில் அனுமதிக்கப்படும் சில அளவுகளைத் தாண்டி மாசுக்களின் நிலை எவ்வளவு உள்ளது என்று பார்க்கப்படுகிறது. நமது தலைமுறையிலும், எதிர்காலத் தலைமுறையிலும் மிக முக்கியமான பிரச்னையாக தண்ணீர் பற்றாக்குறையானது உள்ளது. பருவ நிலை மாற்றம், மரங்கள் வெட்டப்படுவது, மாசு அடைதல், மற்றும் தண்ணீரைச் சரியான முறையில் பயன்படுத்தாமல் வீணாக்குதல் ஆகியவற்றின் விளைவுதான் தண்ணீர் பற்றாக்குறை.மலை உச்சிகளிலும், மலை ஏற்றப் பகுதிகளிலும் மேற்கொள்ளப்படும் சாலை விரிவாக்கப் பணிகள் போன்றவை தீவிரமான நிலச் சரிவுகளுக்கும், மண் அரிப்புக்கும் காரணமாக அமைகின்றன.

இயற்கையைப் பாதுகாப்போம்“ என்பது காடுகள், நீர்நிலைகள், வனவிலங்குகள் போன்ற இயற்கை வளங்களை அழிவிலிருந்து காப்பாற்றுவது, சுற்றுச்சூழலைப் பேணுவது, உயிரியல் பன்முகத்தன்மையை பாதுகாப்பது மற்றும் சுற்றுச்சூழலை மேம்படுத்துவதாகும். மனிதர்கள் தங்கள் தேவைகளுக்காக இயற்கையை அதிகம் சுரண்டுவதால், இயற்கைச் சீற்றங்கள் மற்றும் காலநிலை மாற்றங்கள் போன்ற கடுமையான பிரச்சினைகள் ஏற்படுகின்றன. எனவே, எதிர்கால சந்ததியினரின் நலனுக்காக இயற்கையை பாதுகாப்பது இன்றியமையாதது.

பூமியில் உள்ள அனைத்து உயிரினங்களும் ஒன்றையொன்று சார்ந்திருக்கின்றன. இயற்கையைப் பாதுகாப்பதன் மூலம், இந்தச் சமநிலையைப் பேணி, அழிவின் விளிம்பில் உள்ள உயிரினங்களையும், வாழ்விடங்களையும் பாதுகாக்கலாம். காடுகளை அழித்தல், நீர் ஆதாரங்களை மாசுபடுத்தல் போன்ற மனித நடவடிக்கைகள், காலநிலை மாற்றங்களுக்கு முக்கிய காரணமாக அமைகின்றன. இயற்கையைப் பாதுகாப்பதன் மூலம், பூமியின் வெப்பநிலையைக் கட்டுக்குள் வைத்திருக்கவும், சீரான காலநிலையை மீட்டெடுக்கவும் முடியும். பல்வேறு வகையான தாவரங்கள், விலங்குகள் மற்றும் பூச்சிகள் பூமியின் சுற்றுச்சூழல் அமைப்புகளின் ஆரோக்கியத்திற்கு அத்தியாவசியமானவை. இவற்றை அழிவில் இருந்து பாதுகாப்பது, பல்லுயிர்ப்பெருக்கத்தை உறுதி செய்யும். தூய காற்று, நீர், மண் மற்றும் வளமான நிலம் ஆகியவை மனித உயிர்வாழ்வதற்கு அடிப்படையாகும். இயற்கை வளங்கள் அழிக்கப்பட்டால், மனித வாழ்வாதாரமும் பாதிக்கப்படும்.




மரம் நடுதல்:

புதிய மரங்களை நடுவதன் மூலம் காடுகளை வளர்க்கலாம் மற்றும் பூமியின் கார்பன் அளவைக் குறைக்கலாம்.

நீர் சேமிப்பு:

நீர்நிலைகளைப் பாதுகாப்பது மற்றும் நீர் மாசுபாட்டைக் குறைப்பது அவசியம்.

குப்பையைக் குறைத்தல்:

மறுசுழற்சி, கழிவுகளை சரியாகப் பிரித்து அகற்றுதல் மூலம் இயற்கையை மாசுபடுத்தாமல் பாதுகாக்கலாம்.

இயற்கை பாதுகாப்பு குறித்து மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தி, இயற்கையைப் பேணும் பழக்கங்களை ஊக்குவிக்க வேண்டும்.

சுற்றுச்சூழல் நட்பு வழிமுறைகள்:

பிளாஸ்டிக் பயன்பாட்டைக் குறைப்பது, இயற்கை எரிசக்தியைப் பயன்படுத்துவது போன்ற சுற்றுச்சூழல் நட்பு வழிமுறைகளைக் கடைப்பிடிக்கலாம்.

நாம் இயற்கையை எவ்வாறு நடத்துகிறோம் என்பதை மாற்றிக்கொண்டு, அதன் மதிப்பு மற்றும் முக்கியத்துவத்தை உணர்ந்தால் மட்டுமே, இயற்கை தன்னைப் பாதுகாத்துக் கொள்ளும் என்ற உண்மையை நாம் உணர முடியும்.

இன்றைய தலைமுறையினர் தங்களை இயற்கை வளங்களின் பாதுகாவலர்களாகக் கருத வேண்டும் என்ற நமது முன்னோர்களின் மூதுரையை நாம் மறந்து விட்டோம். நாம் இயற்கை வளங்களைச் சுரண்டாமல் அடுத்த தலைமுறையினருக்கு அவற்றை ஒப்படைக்க வேண்டும் என்ற பொறுப்புடைமையை மறந்து விட்டோம்.

உலகம் முழுவதும் ஏற்பட்டிருந்த சுற்றுச் சூழல் பிரச்னைகளுக்குத் தீர்வு காணும் வகையில், 1948—ஆம் ஆண்டு உலகளாவிய இயற்கை பாதுகாப்பு சங்கம் தொடங்கப்பட்டது. இயற்கை வளங்களைப் பாதுகாத்தல், இயற்கை வளங்களின் அவசியம் குறித்து மக்களிடம் விழிப்புணர்வு ஏற்படுத்துதல் ஆகிய கொள்கைகளை அடிப்படையாகக் கொண்டு, ஆண்டுதோறும் ஜூலை 28—ஆம் தேதி "உலக இயற்கை வளம் பாதுகாப்பு நாள்' கடைப்பிடிக்கப்படுகிறது.




## உடலுக்கு வலுசேர்க்கும் சிறுதானிய உணவுகள் !

உடல் நலம், ஆரோக்கியம் குறித்த ஆர்வம் அதிகரித்துள்ள நிலையில், மாவுச்சத்து நிறைந்த அரிசியைத் தவிர்த்து, அதனை விட நார்ச்சத்து, புரதச்சத்து மிகுந்த சிறுதானிய உணவுகளைப் பலரும் உண்ணத் தொடங்கியுள்ளனர்.

குறிப்பாக எடையைக் குறைக்க விரும்புவோர், நீரிழிவு பாதிப்புடையவர்கள் இதனை உட்கொள்வதை வழக்கமாக்கிக் கொண்டுள்ளனர். புரதம் மட்டுமின்றி வைட்டமின்கள், கால்சியம், பொட்டாசியம், பாஸ்பரஸ், இரும்புச் சத்து உள்ளிட்ட கனிம சத்துகளும் சிறுதானியங்களில் நிறைந்துள்ளன.

இந்தியர்கள் பொதுவாக உண்ணும் இட்லி, தோசை, கிச்சடி, பொங்கல் ஆகியவற்றை தினை, சோளம், கம்பு உள்ளிட்ட சிறுதானியங்களைக் கொண்டு சமைக்க முடிவதால் இந்தியச் சமூகத்தினரிடையே இவை பிரபலமாகியுள்ளன.

சிறுதானியங்களில் நிறைந்திருக்கும் நுண்ணூட்டச்சத்துக்கள் உடலுக்கு நன்மை பயக்கின்றன. அதேசமயம், உடலுக்கு கேடு விளைவிக்கக்கூடிய சில நுண் ஊட்டச்சத்துக்களும் இவற்றில் காணப்படுகின்றன. அவற்றைக் கட்டுப்படுத்தி, தேவையான சத்துகளை மட்டும் பெற சில வழிமுறைகளை பின்பற்ற வேண்டியது அவசியம்.

அரிசி சமைப்பதுபோல அப்படியே சமைக்காமல், சிறுதானியங்களை சற்று வறுத்த பின்னர் சமையலுக்கு பயன்படுத்துவது அவசியம். இவ்வாறு செய்வது தானியங்களை மிருதுவாக்கி, அவற்றை ஆவியில் வேக வைக்கும் உணவுகளாகத் தயாரிக்க ஏதுவாக்குகிறது. செரிமானக் கோளாறுகளைக் குறைக்கிறது. அதேபோல நேரடியாக தானியங்களை பயன்படுத்தாமல், முளைகட்டிய பின் பயன்படுத்துவது சாலச் சிறந்தது. கேழ்வரகு, கம்பு, தினை, சோளம் ஆகிய சிறுதானியங்கள் முளைகட்டிப் பயன்படுத்த ஏதுவானவை.

ஒன்றுக்கு மேற்பட்ட தானியங்களைக் கலந்து பயன்படுத்துவதாக இருந்தால், அவற்றை முறைப்படி அலசி, மாவாக அரைத்துப் பயன்படுத்தலாம். இவ்வாறு சிறுதானியங்களை முறைப்படி பயன்படுத்துவதால், தைராய்டு உள்ளிட்ட பக்க விளைவு ஏற்படாமல் தடுக்க சாத்தியமுள்ளது.

பயன்படுத்தும் முறைகள்

பொதுவாக சோறு அதிகம் உட்கொள்ளும் பழக்கம் உள்ளவர்கள் வரகு, சாமை, தினை, குதிரைவாலி, கம்பு, சோளம் ஆகிய தானியங்களை வறுத்து சாதத்துக்குப் பதிலாகப் பயன்படுத்தலாம்.

சம்பா கோதுமையைப் பயன்படுத்தி பொங்கல், கிச்சடி உள்ளிட்ட உணவுகளை சமைப்பதற்கு பதிலாக வரகு, சாமை, குதிரைவாலியுடன் காய்கறிகள் சேர்த்து கிச்சடி செய்யலாம். இது ஆரோக்கியமான இரவு உணவாகும்.இவை தவிர, கோதுமைக்கு பதிலாக பல சிறுதானியங்கள்







லாவண்யா வீரராகவன்

கொண்டு செய்யப்படும் சப்பாத்தி, கூழ், இடியாப்பம் போன்றவற்றை காலை உணவாக உட்கொள்ளலாம். இனிப்பு கார வகைகளையும் அரிசிக்கு பதிலாக சிறு தானியங்கள் சேர்த்து செய்யலாம்.

நோய் பாதிப்புகள் ஏதுமில்லாத பெரியவர்கள் அன்றாடம் ஒருவேளை சிறுதானியம் உட்கொள்வது நல்லது. செரிமான மண்டலக் கோளாறுகள் இருந்தால் மருத்துவரின் பரிந்துரைக்கேற்ப வாரம் ஓரிருமுறை உட்கொள்வது சிறந்தது.


அண்மைக்காலமாக சிறுதானிய உணவுப் பொருள்களின் பயன்பாடு அதிகரித்து வருகிறது. சிறு நகரங்களில் மட்டுமின்றி பெரு நகரங்களிலும் இந்த வகையான உணவுப் பொருள்கள் சாலையோரக் கடைகள் தொடங்கி உணவு விடுதிகளிலும் விற்பனை செய்யப்படுகின்றன. அண்மையில் மக்களவை உறுப்பினர்கள், அதிகாரிகள், பார்வையாளர்களுக்கு ஆரோக்கியமான உணவு வழங்கும் நோக்கில் அறிமுகமான புதிய உணவுப் பட்டியலில் சோள உப்புமா, சிறுதானிய கீர் போன்றவை இடம்பெற்றுள்ளன.




பொதுவாக, சிறுதானியங்கள் என்பது குதிரைவாலி, கேழ்வரகு, சோளம், தினை, வரகு, சாமை, கம்பு போன்ற தானிய வகைகளைக் குறிக்கும். வறட்சிக் காலத்திலும் வளரக்கூடிய இவற்றில் புரதம், நார்ச்சத்து, கால்சியம், இரும்புச்சத்து, வைட்டமின்கள் போன்ற ஊட்டச்சத்துகள் அதிக அளவில் உள்ளன. இவ்வகைப் பயிர்கள் ஊடுபயிராக அல்லாமல் பிரதான பயிர்களாகவும் விளங்கின.தற்போது, பெரும்பாலும் உணவுப் பயிர்களைக் காட்டிலும் நன்செய் நிலமாயின் நெல், கரும்பு போன்றவற்றையும், புன்செய் நிலமாயின் சோளம், பருத்தி, எள் போன்ற பயிர்களையுமே சாகுபடி செய்கின்றனர்.

அண்மைக்காலமாக ஊட்டச்சத்துப் பற்றாக்குறையால் பாதிக்கப்படுவோர் எண்ணிக்கை ஆண்டுதோறும் அதிகரித்து வருகிறது. அதனால், சிறுதானியங்களின் பயன்பாடு முக்கியத்துவம் பெற்று வருகிறது. ஆனால், பயன்பாட்டுக்கு ஏற்ப சிறுதானிய உற்பத்தி அதிகரிக்கவில்லை. கடந்த காலங்களில் வேளாண் தொழிலோடு கால்நடை வளர்ப்பும் பிரதானமாக இருந்தது. அதனால், கால்நடைகளின் தீவனத்துக்காக சிறுதானியங்களை விளைவிப்பதில் விவசாயிகள் ஆர்வம் காட்டினர்.

சோளம், கம்பு போன்ற இடைவெளி கொண்ட




பயிர்களின் ஊடே பயறு வகைகளை ஊடு பயிராக விளைவித்தனர். காலப்போக்கில் கால்நடைகளின் எண்ணிக்கை குறையத் தொடங்கியதும் சிறுதானியங்கள் உற்பத்தியும் குறையத் தொடங்கியது. இயந்திரங்களின் வருகை, புதிய ரகமாக பருத்தி, சோளம் போன்ற பயிர்கள் புழக்கத்துக்கு வரத்தொடங்கியது. இதனால், சிறுதானியங்கள் உற்பத்தியிலிருந்து விலகத் தொடங்கினர். பெரும்பாலான பகுதிகளில் பருத்தி, சோளம், நெல், கரும்பு போன்ற பணப்பயிர்களே பிரதான பயிர்களாக மாறிவிட்டது.

சிறுதானிய உற்பத்தி என்பது குறைவான பரப்பளவிலும், மலைக் கிராமங்களிலும் மட்டுமே விளைவிக்கப்படுகின்றன. உற்பத்தி செய்வதற்கான வேளாண் நிலம், உடலுழைப்பு, போதுமான மனித உழைப்பு போன்ற சாத்தியக்கூறுகள் இருந்தாலும் சிறுதானிய உற்பத்தியில் ஈடுபடுவதில் விவசாயிகள் தயக்கம் காட்டவே செய்கின்றனர். அதனால், இன்று பணப்பயிர்களை உற்பத்தி செய்வதிலேயே ஆர்வம் காட்டுகின்றனர். பொருளாதார ரீதியாக பின்தங்கிய நிலையில் இருப்பதால், அறுவடை செய்யும் இடத்திலேயே விற்பனை செய்யும் நிலையில் உள்ளனர். இதற்கு அவர்களின் பொருளாதாரச் சூழலோடு கூடுதல் விலை கிடைக்கும் வரையில் இருப்பு வைத்து விற்பனை செய்யும் வசதிகள் இல்லாததும் ஒரு காரணமாகும். அதனால்தான், உற்பத்தி செய்வதைக் காட்டிலும் தேவைப்படும் பட்சத்தில் வணிக நிறுவனங்களில் வாங்கிப் பயன்படுத்துகின்றனர். அத்தகையோரிடம் மாற்றத்தை ஏற்படுத்த வேண்டுமாயின் அவர்களிடையே சிறுதானியங்கள் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும்.

இதுதொடர்பாக நடத்தப்படும் சிறுதானியத் திருவிழாவை கிராமப்புறங்களில் நடத்த வேண்டும். மக்கள் அதிக அளவில் கூடும் இடங்கள், அரசு அலுவலகங்கள், வணிக வளாகங்கள் போன்ற இடங்களில் தற்காலிகமாக அரங்குகள் அமைத்து வேளாண் மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும். வேளாண் தொடர்பான திட்டங்கள் தகவல் தொழில்நுட்பங்களின் பேருதவியால் உடனுக்குடன் மக்களைச் சென்றடைகிறது என்பதில் மாற்றமில்லை. ஆயினும், சிறுதானியங்களின் தேவை அதிகரித்து முக்கியத்துவம் பெற்று வரும் இவ்வேளையில் இப்பணிகளில் கூடுதல் கவனம் செலுத்த வேண்டும். அப்போதுதான் விவசாயிகளிடையே மாற்றத்தை ஏற்படுத்தி இலக்கை எட்ட முடியும்.

சிறுதானியங்களின் நன்மைகள் பல

ஏழு வகையான சிறுதானியங்களின் தனித்துவம், தமிழர் பண்பாட்டில் போற்றப்படுவதுடன், மேற்கத்திய நாடுகளில் ‘சூப்பர் ஃபுட்’ என்று கருதப்படுகிறது. ‘சூப்பர்ஃபுட்’ என்பது உடலுக்குத் தேவையான அடிப்படை ஊட்டச்சத்துக்களின் தேவையை நிறைவுசெய்து, உடலை நோயிலிருந்து பாதுகாக்கவும் நோய் வராமல் தடுக்கவும் செய்கிறது.

வரகு **(Kodo Millet):** சற்று கசப்பான வரகில் இருக்கும் புரதச்சத்து, தாது உப்புவகைகள் ஆகியவை உடல் பருமன், உயர் ரத்த அழுத்தம், சர்க்கரை நோய் ஆகியவற்றைக் குறைக்க உதவும்.

சாமை **(Little Millet):** அதிக நார்ச்சத்து, இரும்புச்சத்து, ‘பி’ வைட்டமின்கள் நிறைந்த சாமை, பெரும்பாலும் சர்க்கரை நோயாளிகளுக்கு மிக உகந்த சிறுதானியமாகும். மேலும், செரிமானத்திற்கும் இதய ஆரோக்கியத்திற்கும் ஒட்டுமொத்த உடல் ஆரோக்கியத்துக்கும் சாமை பெரும்பங்காற்றுகிறது.

திணை **(Foxtail Millet):** மாவுச்சத்து

நிறைந்திருக்கும் தினையை, அரிசி மாவுக்குப் பதிலாக தோசை, இட்லி போன்ற உணவு வகைகளில் பயன்படுத்தலாம். அதன் நார்ச்சத்து, கொழுப்பைக் கட்டுப்படுத்தவும் உதவுகிறது.

குதிரைவாலி **(Barnyard Millet):** எடை குறைக்க விரும்புவோருக்கு கலோரிகள் அதிகம் இல்லாத குதிரைவாலி மிக உகந்தது. மேலும், எலும்புகளின் ஆரோக்கியத்திற்குத் தேவையான கால்சியம், இரும்பு, பாஸ்பரஸ் போன்றவையும் இந்த தானியத்தில் அடங்கியுள்ளன.

கம்பு **(Pearl Millet):** அதிக இரும்புச்சத்து, மெக்னீசியம், புரதச்சத்து கொண்டுள்ள கம்பு பெரும்பாலும் ரத்தக் குறைப்பாட்டுக்கு உதவும். அத்துடன் உடல் வெப்பம், சோர்வு, வயிற்றுப்புண், தேவையற்ற கொழுப்பு போன்றவற்றைக் குறைக்கவும் கம்பு பயன்படுகிறது.

கேழ்வரகு **(Finger Millet):** சிறுவர்கள், கர்ப்பிணிப் பெண்களிடையே கேழ்வரகு மிகப் பிரபலமான சிறுதானியமாகும். இதில் அடங்கியுள்ள கால்சியம் அளவு குறிப்பாக எலும்புகளை வலுவாக்க உதவும்.

சோளம் **(Sorghum Millet):** சோளம் புற்றுநோய் அபாயங்களை எதிர்த்துப் போராடவும், செரிமானத்தை அதிகரிக்கவும் அழற்சி குறைக்கவும் உதவும் ஒரு சிறுதானியம். சோளத்தில் குளூட்டன் இல்லாததால் குளூட்டன் ஒவ்வாமை உள்ளவர்கள் இதை உண்ணலாம்.

சிறுதானிய உணவின் பயன்கள்: ஆரம்ப காலத்தில், நம் முன்னோர்களால் உண்ணப்பட்டு வந்த ஆரோக்கியமான உணவுகளில் முதல் இடத்தினைப் பிடிப்பது சிறுதானியங்கள் ஆகும். இந்த சிறுதானியங்கள் நம் பாரம்பரிய உணவு முறையின் அரிசியாகக் கருதப்படுகிறது. சத்து மிகுந்த சிறுதானியங்கள் மிதமான தட்ப வெப்ப நிலையிலும் சாதாரண மண் வளத்திலும் செழித்து வளரும்.சிறுதானியங்களில் அதிக அளவில் ஊட்டச்சத்து நிறைந்துள்ளன. இவற்றில் 25 சதவீதம் புரதமும் அதிக அளவு நார்ச்சத்தும் உள்ளது. மேலும் இவை வைட்டமின் 'ஈ', வைட்டமின் 'பி' காம்ப்ளக்ஸ், நியாசின், தயமின். மற்றும் ரிபோபிளேவின் போன்றவற்றிற்கு மிகப்பெரிய ஆதாராமாக விளங்குகின்றது.

கம்பு, சோளம், வரகு, சாமை, தினை, குதிரைவாலி, கேழ்வரகு போன்றவையே சிறுதானிய உணவுகள் ஆகும். இவை அனைத்தும் அதிக ஆற்றலை தரக்கூடியவை. இதில் புரதச்சத்து மற்றும் நார்ச்சத்து மிகுந்தும், இரும்பு, கால்சியம் மற்றும் வைட்டமின்களை கொண்டது.நமது உடலுக்கு சரியான செயல்பாட்டிற்குத் தேவையான பல ஆரோக்கியமான ஊட்டச்சத்துக்கள் அதிக அளவில் சிறுதானியங்களில் நிறைந்துள்ளன. மேலும், இந்த




சிறுதானியங்களில் அதிக அளவு இரும்புச்சத்து உள்ளதால் இரத்த சோகையை குணப்படுத்த உதவும் சிறந்த உணவாக கருதப்படுகிறது. இதில் கால்சியம் நிறைந்துள்ளதால் சிறுதானியங்களை வழக்கமான முறையில் உணவில் சேர்த்துக் கொண்டால் எலும்புகளை வலுவடைய செய்யும்.

கார்போஹைட்ரேட்டுகள் மற்றும் கொழுப்பினைத் திரமையாக உடைத்து அதனை ஆற்றலாக மாற்றுகின்றது "சிறுதானியங்கள்". வைட்டமின் "பி" நமது உடலின் இரத்தத்தில் உள்ள ஹோமோசைஸ்டீன் அளவைக் குறைக்கிறது. இவ்வாறு குறைவதன் மூலம் கொழுப்புகளை தடுக்கப்படுகிறது. சிறுதானியங்களில் காணப்படும் நியாசின் இரத்த ஓட்டத்தின் போது கொழுப்பு எடுத்து செல்லப்படுவதை தடுக்கிறது. இது இரத்தக் கசிவு ஏற்படுவதிலிருந்தும் இதயத்தைப் பாதுகாக்கிறது.பொதுவாக சிறுதானியங்களில் மெக்னீசியம் காணப்படுவதால் உயர் இரத்த அழுத்தம் ஏற்படுவது குறைக்கப்படுகிறது. மேலும், இது ஆஸ்த்துமா மற்றும் ஒற்றை தலைவலி ஏற்படுவதை பெரிதும் குறைக்கப்படுகிறது.

இன்றைய காலகட்டத்தில் மிகவும் புறக்கணிக்கப்பட்ட உணவு வகைகளுள் ஒன்று சிறுதானியம் ஆகும். இதில் அதிக அளவு ஊட்டச்சத்து நிறைந்துள்ளன என்பதை நாம் அறியாமலே இருந்துவிட்டோம். இப்போது இந்த கட்டுரையின் மூலம் சிறுதானியங்களின் பயன்களை பற்றி தெரிந்து கொண்டிருக்க முடியும். ஆதலால், இப்பொழுதே சிறுதானியங்களை உங்கள் உணவுப்பழக்கத்தில் வாரம் இருமுறையாவது சேர்த்துக் கொள்ளுங்கள். அதன் மூலம் கிடைக்கும் நன்மைகளை அனுபவித்து மகிழுங்கள்.

பொறுப்பு துறப்பு: இங்கே கொடுக்கப்பட்டுள்ள தகவல்கள் வீட்டு வைத்தியம் மற்றும் பொதுவான தகவல்களை அடிப்படையாகக் கொண்டவை. இவற்றை பின்பற்றுவதற்கு முன் கண்டிப்பாக மருத்துவ ஆலோசனையைப் பெற வேண்டும். அய்தமிழ் இந்த தகவல்களுக்கு பொறுப்பேற்காது.)



# காத்தல்

## காத்திருத்தல் என்னும் கலை !

பரபரப்பு ஒரு தொற்றுநோய்போல் பற்றிக் கொண்டு, பதற்றம் என்கிற துணை நோயையும் கொண்டுவந்து சேர்த்து மக்களைப் படுத்தும்பாடு பெரும்பாடாய் இருக்கிறது. இதற்கு மறுதலையாய், மருந்தாய் இருப்பது பொறுமை.

“பொறுமை கடலினும் பெரிது’ என்று சொல்லப்படுகிறது. உண்மையில் பொறுக்கமாட்டாத கடல்தான் அலைமேல் அலையாய் வந்து நிலம் மீது மோதிக் கொண்டே இருக்கிறது. ஆனாலும், ஆழ்கடல் அமைதி மேல் கடலின் அலையை அவ்வப்போது கட்டுப்படுத்திக் கொண்டு வருகிறது.

தம்மை அகழ்வாரையும் நிலம் தாங்கிக் கொண்டு இருப்பதைப்போல், நாமும் நம்மை இகழ்வாரைப் பொறுத்துக் கொண்டு இருப்பது தலையாய பண்பு என்கிறது திருக்குறள். இதனை அடியொற்றியே, “பொறுத்தார் பூமி ஆள்வார்’ என்ற பழமொழியும் வந்திருக்க வேண்டும். நிலத்தின் இயல்பு நிலத்தை ஆள்பவர்க்கும் வேண்டுமே.இது நாடாள்வோருக்கு மட்டுமன்றி, வீடாள்பவர்க்கும் பொருந்தும். ஆக, ஆளுமைப் பண்புக்கு அடிப்படைப் பண்பாக இருப்பது பொறுமை. அதற்கு எதிர்நிலையாக, “பொறாதார் காடாள்வார்’ என்றும் அந்தப் பழமொழி விளக்கம் தருகிறது. பொறுத்துக் கொள்கிற வரைக்கும் வலியானது வலிமையாகிறது. பொறுத்துக் கொள்ள முடியாத நிலையில், உடலைக் காட்டுக்கு அனுப்பி, உயிர் விடைபெற்றுக் கொள்கிறது.

எடுத்த பிறவி நிலைக்கவும், தொடரவும் பொறுமை மிகவும் அவசியம். விதைத்தவுடனே முளைத்து மரமாகிக் கனி வரவேண்டும் என்று நினைப்பது இயற்கைக்கு முரண் அல்லவா? “மந்திரத்தில் மாங்காய் காய்க்குமா’ என்ற கேள்வி, இதன்வழி பிறந்தது. இயந்திரங்களைக் கொண்டு இயற்கையின் பொறுமைக்கு மாறாக, விரைந்து ஆற்றிவரும் பணிகள் அவ்வப்போது வெற்றியைத் தந்தாலும் அவை தொடர் வெற்றியாக அமையுமா என்பது ஐயமே.

“நாளும் ஒரு பொன்முட்டை இடும் வாத்தை வளர்த்தவனுக்குப் பேராசை; ஒட்டுமொத்தமாய் அத்தனை முட்டைகளையும் பெற்றுவிட வேண்டும் என்று அதன் வயிற்றைக் கீறிப் பார்த்தபோது, ஒற்றை முட்டை மட்டுமே உள் இருந்தது’ என்று சொல்லப்படுகிற கதை வெறும் கதையா? உயிர் இழந்த வாத்து ஒருபோதும் முட்டை இடாது; உயர்குணங்கள் பல இருந்தும் உரிய காலம், சூழல் வரும் வரை காத்து இருக்கப் பழகாதவனுக்கு எதுவும் வாய்க்காது.

பொங்கி வடித்து, உண்கலத்தில் இட்ட சோற்றினைத் தாங்க முடியாத பசியுடையவன் அள்ளிப் புசிக்க நினைத்துச் சூடுபட்ட வேகத்தில் பிறந்த சொலவடை, “ஆக்கப் பொறுத்தவனுக்கு ஆறப் பொறுக்கவில்லை’. ஆக்கப் பொறுத்தல் என்றால், நெல்லாக்க, அரிசியாக்க, அதைப் பின் சோறாக்கப் படுகிற பாடு அனைத்தையும் பொறுத்தல் என்பது உள்ளொடுங்கும்.அதைவிடவும், கொதிக்கும் உலையில் அரிசியிடும்போதும், வெந்த சோற்றை வடித்திடும்போதும் “சட்டி சுட்டதடா, கை விட்டதடா’ என்று விட்டுவிடாமல்,





# அரிது


இருங்கை சேதுபதி

அந்தச் சூட்டையும் தாங்கி ஆக்கிய சோற்றை, அள்ளிப் புசிக்க அவசரப்படும்போது, பட்ட சூட்டின் பதிவாகச் சொல்லிய அனுபவ வாக்கு அச் சொலவடை. இது சுடச் சுட அள்ளிய சோற்றுக்கு மட்டுமல்ல, சுறுசுறுப்புக்கும் அப்பால் விரைவுபடுத்தும் வேகத்துக்கும் வைக்கப்படும் முட்டுக்கட்டை.

முட்டுக்கட்டை என்பது முன்னேற்றத்தைத் தடுப்பதாகப் பலரும் நினைப்பதுண்டு. உண்மையில் அது முறையற்ற வேகத்தைக் கட்டுப்படுத்தும் கருவி. ஊர் கூடி இழுக்கும் தேருக்கு முன்னோர் கண்ட தடைக்கட்டை (“பிரேக்‘)தான் இந்த முட்டுக்கட்டை. ஊருக்கும் தேருக்கும் ஊறு நேராமல், தனக்கு நேரும் வலியைப் பொறுத்துக் கொண்டு, தலைக்கொடுப்பது இது. இதைக் கையாளுபவர்களின் கவனம் நிகர்த்தது, கடமையாற்றும் பெரியவர்களின் நிலைப்பாடு. பயமறியாது பாயும் இளங்கன்றுகளாம் இளைஞர்களைப் பெரியவர்கள் தடுத்து ஆட்கொள்வது இவ்வகைப்பட்டது.

ஊருக்கோ, உலகுக்கோ தலைவனாய் இருக்கும் யாருக்கும் தலைவியாய் இருப்பவள் வாழ்க்கைத் துணைநலம். அதற்கு இலக்கணம் வகுத்த திருவள்ளுவர், தற்காப்பைத்தான் முதலில் சொல்லிக் கொடுக்கிறார். “தற்காத்து’ தன்னைக் காத்துக் கொள்வதுதான் தலைவியின் முதற்பணி. இது தன்னலம் இல்லை. தற்கொண்டானாகிய கணவனையும் தம்மை நம்பிப் பிறந்த பிள்ளைகளையும் தாங்கிப் பேணக் கற்கும் குடும்பக் கல்வி. பேணுதல் என்பது பெண்மையின் இயல்பு. தற்காத்தல் முதல்நிலை என்றால், “தகை சான்ற சொற்காத்தல்’ வளர்நிலை. அது அவ்வளவு எளிதானது இல்லை.

மனதில் உதித்ததை வாயால் வெளிப்படுத்தக்கூடாது என்ற நிலையில், சொல்ல நினைத்ததைக்கூடச் சொல்லாமல் இருந்துவிடலாம். ஆனால், தன்முன் பிறர் சொல்லிய சொல்லினை, — அது புகழ்ச்






சொல்லானாலும் சரி, பழிச் சொல்லாயினும் சரி. அதன் நிலைபொறுத்துத் தன்வயமாக்கிப் பிறரிடம் — குறிப்பாக அச்சொல்லுக்கு உரியவரிடம் சொல்லியோ, சொல்லாமலோ, அதனால் இன்னல் வாராமல் காக்கும் பண்பு இருக்கிறதே, அது




தலைமைப் பண்புக்கெல்லாம் தாய்.

ஒருமுறை பொறுத்துக் கொள்ளலாம். சில முறை பொறுத்துக் கொள்ளலாம். அதற்கும் மேல்? தேவை எனில் வாழ்நாள் முழுவதும் “சோர்விலாது’ பொறுத்துக் கொள்ள வேண்டும் என்று வலியுறுத்துகிறது திருக்குறள். இது மனைவிக்கு மட்டுமல்ல; மன்னனுக்கும் வேண்டிய மகத்தான பண்பு. செவிக்கு இனிமையான புகழ் மொழிகளையே கேட்டுப் பழகிய மன்னனும், கசக்கும் வசைச் சொற்களையும் அவ்வாறே ஏற்கப் பழகிக் கொள்ள வேண்டும் என்கிறார் திருவள்ளுவர். அத்தகைய வேந்தனின் ஆட்சிக் குடைக் கீழ் இவ்வுலகமே தங்கும் என்கிறார்.


செவிகைப்பச் சொற்பொறுக்கும் பண்புடை வேந்தன்
கவிகைக்கீழ்த் தங்கும் உலகு *(389)*

என்று, அகழ்வாரைத் தாங்கும் நிலத்தையும் தாங்கிப் பிடித்துக் காக்கும் வேந்தனுக்குப் பொறுமையை மிகவும் பொறுமையாய் வலியுறுத்துகிறார்.

பழிக்குப் பழி வாங்கும் செயலைவிடச் சொல்லுக்குச் சொல் கொடுக்கும் இன்னாச் செயல் மிகவும் துயர் தரும். “நெல்லைக் கொட்டினால் அள்ளிவிடலாம். சொல்லைக் கொட்டினால் அள்ள முடியாது’ என அனுபவம் நிறைத்துக் கூறிய பழமொழி, எப்போதும் “நா காக்க’ச் சொல்லிக் கொடுக்கிறது. செயலானது செய்கிறபோது மட்டுமே துன்புறுத்தும். சொல்லானது எப்போதும் நின்று உள்ளறுக்கும். துப்பாக்கியால் சுடுபட்ட புண்கூட ஆறிவிடும். ஆற்றிவிட மருந்து உண்டு. தப்பாமல் சொல்லிய சொல்லின் சூடும் புண்ணும் ஆறவே ஆறாது. மாற்று மருந்தும் கிடையாது.

எனவே, சொல்லாலோ, செயலாலோ, அறிந்தோ, அறியாமலோ துன்புறும் வண்ணம் தமக்கு இன்னல் செய்வார்க்கும் இனியவே செய்வது சான்றோர்களின் இயல்பு. இதற்குப் பொறுமை மிகவும் இன்றியமையாதது. அச் செயலை, சொல்லை, அப்போதே மறத்தல் அதனினும் சிறப்புடையது. நன்றல்லதை அன்றே அக்கணமே மறப்பதுதானே நற்பண்பு. இது அடக்கம் என்கிற உயர் பண்பையும் உடன் கொடுக்கக் கூடியது. நாவடக்கம் தொடங்கி, புலனடக்கத்தில் வளரும் இவ்வொழுக்கம் உயிர் காக்கும் மருந்தாக உயர்கிறது. உயிர்போன பிறகும் புகழாக மலர்கிறது.

இதற்கு, பக்தியை ஒரு பயிற்சி முறையாக




வகுத்துத் தந்திருக்கின்றனர் நம் பெரியோர். அதனைப் பகை வளர்ப்பதாக இல்லாமல் பண்பு காப்பதாக வகைப்படுத்தித் தந்த மகாகவி பாரதி,

‘பக்தி உடையார் காரியத்தில் பதறார்
மிகுந்த பொறுமையுடன்
வித்து முளைக்கும் தன்மைபோல்
மெல்லச் செய்து பயன் அடைவார்’ என்கிறார்.

வித்திட்டவர்கள் விளைச்சல் வரும் வரை காத்திருத்தல் அவசியம். காத்திருத்தல் என்பதற்கு, கடமையைச் செய்யாது வாளாவிருத்தல் (சும்மா இருத்தல்) என்று பொருள் கொண்டுவிடுதல் கூடாது. அது பயன்தரும்படி காத்து இருத்தல் வேண்டும். நீர் பாய்ச்சி, உரம் இட்டு, களை பறித்து, வேலி இட்டுக் காத்து இருந்தால்தான் கட்டாயப் பலன் கிடைக்கும். அதற்குக் காலம் காத்து, பருவம் காத்து, பொறுமை காத்து, எப்போதும் பாதுகாத்து இருக்கப் பழக வேண்டும். நேற்று பெய்த மழையில் காளான்கள் முளைக்கலாம். ஆலவித்து அதுபோல் முளைத்து வருமா?




பயன் நுகரப் பழம் தரும் தாவரத்தின் செயல், அதனோடு முடிவதில்லை. கூடவே மீள முளைக்கும் வித்தினையும் தருகிறது. அதுபோல் பயன்தரும் வினையை வித்தினைப்போல் தரப் பயிலுதல் வேண்டும். விதை விதைத்துப் பயிர் அறுவடை செய்வதுபோல, வினை விதைத்துப் பயன்களை அறுவடை செய்யப் பழகுதல் வேண்டும். அதற்குப் பரபரப்போ, பதற்றமோ ஒரு போதும் உதவாது. “பதறாத காரியம் சிதறாது’ என்பதைப் பணிவோடு சொல்லும் பெரியவர்கள் நடைமுறையில் கடைப்பிடித்து நன்மை உணர்ந்தவர்கள்.




எனவே, எல்லா நிலைகளிலும் காத்தலும், காத்து இருத்தலுமாகிய “காத்திருத்தல்’ என்ற கலையினைக் கற்று, காலம் முழுவதும் கடைப்பிடித்து ஒழுகினால், காலம் கடந்தும் நிலைபெறலாம் என்பது உறுதி.

# தமிழ்

நற்றமிழரின் நாடித்துடிப்பு

2025

## JANUARY




## FEBRUARY





## MARCH




## APRIL




## MAY




## JUNE




## JULY




## AUGUST




## SEPTEMBER




## OCTOBER

| S | M | T | W | T | F | S |
|---|---|---|---|---|---|---|
| | | 1 | 2 | 3 | 4 | 5 |
| 6 | 7 | 8 | 9 | 10 | 11 | 12 |
| 13 | 14 | 15 | 16 | 17 | 18 | 19 |
| 20 | 21 | 22 | 23 | 24 | 25 | 26 |
| 27 | 28 | 29 | 30 | 31 | | |

## NOVEMBER

| S | M | T | W | T | F | S |
|---|---|---|---|---|---|---|
| | | | | | 1 | 2 |
| 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 |
| 10 | 11 | 12 | 13 | 14 | 15 | 16 |
| 17 | 18 | 19 | 20 | 21 | 22 | 23 |
| 24 | 25 | 26 | 27 | 28 | 29 | 30 |

## DECEMBER


| S | M | T | W | T | F | S |
|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 |
| 8 | 9 | 10 | 11 | 12 | 13 | 14 |
| 15 | 16 | 17 | 18 | 19 | 20 | 21 |
| 22 | 23 | 24 | 25 | 26 | 27 | 28 |
| 29 | 30 | 31 | | | | |

அய் தமிழ் முகநூல்:
http://www.facebook.com/pages/Ithamil-Magazine
www.ithamil.com





Email:
editor@ithamil.com



VARSHA™
IDLI/DOSA BATTER
Eat Fresh!
Eat the Best!!!
VARSHA
1Kg
Traditional taste that Lingers
VARSHA
VARSHA